
கல்கி



KALKI

31.1.1965

30 காசு




கல்கி

பொருளடக்கம்



குரோதி தை 18 — ஜனவரி 31


ஹிந்தி
குடியரசுத் திருநாள்
ஜனவரி ௨௬
நான் மீண்டும்
வர வேண்டுமா?
அப்படியானால்
காங்கிரசுக்கே
வோட்ட
ளியுங்கள்
பஞ்சம்
வாருங்கள், என்னுடன்!
நிர்வாக ஊழல்
லஞ்சம்
ஆகா! என்ன படகு!
எங்கள் முகஜாடை
ஒன்று போலிருந்தாலும்
எனக்கே
வோட்டுப்
போடுங்கள்
காங்கிரஸ்
PK



மலர் 24 ○ இதழ் 27

போகாத ஊருக்கு வழி!

நியாயமாயினும் சரி, அநியாயமாயினும் சரி— இருதரப்புக்களுக்கிடையே பனிப்போர் நடக்கும்போது ஒரு தரப்புக்கும் உதவி செய்ய மாட்டோம் என்று ஒதுங்கி நிற்பது சாத்தியமாயிருந்தது. ஆனால் அவ்வாறு நாம் எவ்விதத்திலும் உதவி தராத இரு தரப்புக்களும் இன்று சீனாவுக்கு எதிராக நமக்கு உதவவேண்டும் என்று இந்திய சர்க்கார் எதிர்பார்ப்பது சாத்தியமே அல்ல. நாம் ஒருவருக்கு உதவி செய்வதோ செய்யாததோ நாமே முடிவுகட்டும் விஷயம். ஆனால் அமெரிக்காவும் ருஷியாவும் இரண்டும் ஒன்று கூடி நமக்கு உதவி செய்ய வேண்டும் என்று முடிவு கட்டுவது நம் கைமீறிய காரியம்.

அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்குமிடையே முன்னளவு தீவிரமான பனிப்போர் நடைபெறவில்லையெனினும் இரு வேறு அடிப்படைக் கொள்கைகளைக் கொண்ட அவ்வல்லரசுகள் இரு தரப்பாகத்தான் பிரிந்து நிற்கின்றன. அவ்விருநாடுகளுடனும் சேராமல் ஒதுங்கி நின்ற நம்மை எந்த நாடும் ஆக்கிரமிக்காமலிருக்க வேண்டும் என்ற காரணத்துக்காக அவ்வல்லரசுகள் தங்களது மன வேறுபாடுகளையெல்லாம் விட்டு ஒன்று சேர்ந்து நமக்கு உதவி புரியவேண்டும், நமது கூட்டுசேரா 'தடஸ்த'க் கொள்கையைக் கருதி அந்த இரண்டு வல்லரசுகளும் தங்களுக்குள் உள்ள வேற்றுமைகளை மறந்து நமக்கு உதவ வேண்டும் என்று எதிர்பார்ப்பது பேதைமை.

அணு ஆயுத சக்தியற்ற 'தடஸ்த' நாடுகளுக்கு அணுச் சக்தி வல்லரசுகளின் இரு தரப்பிடமிருந்தும் ஆபத்துச் சமயத்தில் உதவி பெறுவதற்காக ஒரு கூட்டு சேரா மகாநாடு நடத்தவேண்டும் என இந்திய சர்க்கார் உத்தேசித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இவ்வாறு உதவி புரிவதற்கு வல்லரசுகளின் வாக்குறுதி கிடைக்குமா என அமெரிக்காவிலும், ருஷியாவிலும் பிரிட்டனிலுமுள்ள நமது அரசாங்க தூதர்கள் ஆழம் பார்த்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. எந்த ஒரு தரப்பிடமிருந்தோ மட்டும் உதவி பெறாமல் இருவரிடமுமே உதவி பெறுவதால் இதுவும் கூட்டுச் சேராத தடஸ்த சித்தாந்தந்தான் என்று பெருமையாகச் சொல்லப்படுகிறது. அதாவது, பிறருக்கு உதவி என்றால் நாம் ஒரு கட்சிக்கும் ஆதரவு தரமாட்டோம், நமக்கு உதவி வேண்டுமாயின் இரு கட்சிகளையும் நாடுவோம் என்ற அசம்பாவிதக் கொள்கையை நமது சர்க்கார் சர்வ சுதந்திரப் போக்காக எண்ணிப் பெருமை கொள்கிறது.

'நாயின் வாலானது நாயையே ஆட்டப் பார்ப்பது போல' என்று ஆங்கிலத்தில் வேடிக்கையாகச் சொல்வதுண்டு. சுயகாரியத்துக்காக நமது சர்க்கார் அமெரிக்காவையும் ருஷியாவையும் ஆட்டிவைக்கப் பார்ப்பது அதைப்போலத்தான். யாருக்கும் உதவாத நம்மைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் வல்லரசுகளுக்கு என்ன கர்ம சிரத்தை? அவை எதற்காகத் தங்களுடைய பரஸ்பர பேதங்களை விட்டுக் கொடுத்து நம்பொருட்டு உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்?

சீனாவினால் நமக்கு ஆபத்து நேரும் சமயத்தில் ருஷியா சீனாவைத் தாக்கும் அல்லது தாக்குவதாக

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
— பாரதியார்

அச்சுறுத்தும் என இந்தியா நினைக்கிறது. இவ்வாறு இந்தியாவுக்கோ மற்ற நாடுகளுக்கோ உதவி அளிப்பதற்கு ருஷியா உடன்படும் என்று எதிர்பார்ப்பது வடிகட்டின மடமை. ருஷிய சர்க்காரானது தனக்கு எதிர் தரப்பான அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு, இந்தியாவுக்காக, தனது சகோதர கம்யூனிஸ நாடான சீனாவை எதிர்க்கும் என்று எதிர்பார்ப்பது அறிவீனத்தின் எல்லை.

வாலைக் கொண்டு நாயை ஆட்ட முயலும் சாகஸத்தைக் கைவிடுவோமாக. விவேகமான நடவடிக்கை என்னவென்று பார்ப்போம். கம்யூனிஸத்தை முறியடிக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் பெரும் திட்டம். இதுவே சீன அபாயத்தில் சிக்கியுள்ள நமது இலட்சியமுமாகும். எனவே அமெரிக்காவின் கருத்தைப் பயன்படுத்திக் கொண்டு அதன் உதவியைப் பெற நாம் முயலவேண்டும். 'இரு தரப்பிடமிருந்தும் உதவி கோரினால் கௌரவக் குறைவில்லை; ஒரு தரப்பிடமிருந்து மட்டும் உதவி கோருவது அகௌரவம்' என்கிற குதர்க்கத்தை விடுத்து அடக்கத்துடனும் அந்தரங்கபூர்வமாகவும் அமெரிக்காவின் உதவியை நாடிப் பெற்று அந்நாட்டுடன் பாதுகாப்பில் உறுதியான இணைப்புப் பெறுவோம். ருஷியாவை மோகித்துக் கொண்டே அமெரிக்காவின் நட்பையும் பெறலாம் என்ற எண்ணத்தை விடுவோம். சீனாவைப் போலவே ருஷியாவும் கம்யூனிஸத்தை விஸ்தரிப்பதில் ஆர்வம் கொண்ட நாடுதான் என்பதை நாம் ஒருபோதும் மறப்பதற்கில்லை. கம்யூனிஸ சீனாவைத் தடுக்க வேண்டுமானால் நமது ஒரே காப்பு அமெரிக்காதான். யுத்த அபாயத்தில் நாம் நேரடியாகச் சிக்கிய பின்பும் கூட்டு சேராமை பற்றிப் பேசுவது சித்தக் கோளாறு தவிர வேறெதுவுமில்லை.

உலக சமாதானத்தைக் காப்பதாகச் சொல்லிக்கொண்டு கூட்டு சேராமையைப் பிரகடனம் செய்த காலமெல்லாம் போய், இப்போது நமது எல்லையையே போரிட்டுக் காத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதை அரசாங்கம் மறக்கலாகாது. இந்த எளிய உண்மையைக் காணத் தவறும் அரசாங்கம், காரிய சாத்தியமற்ற திட்டங்களையெல்லாம் வகுத்துப் பார்க்கிறது.

அமெரிக்காவும் ருஷியாவுமாக இணைந்து சீனாவை எதிர்க்குமாயின் அது பனிப் போரின் முடிவேயாகும். அணு ஆயுதப் போரும் அதோடு முடிவடையும். ஆனால் இத்தகைய நல்ல காலம் இன்னும் பிறக்கவில்லை என்பதை அறிவுள்ளவர்கள் உணர வேண்டும். தடஸ்த நாடுகளின் சுயநல ராஜதந்திரத்துக்காக ருஷியாவையும் அமெரிக்காவையும் உடன்படிக்கை செய்துகொள்ள வைப்பது அசாத்திய சாகஸம் என்பதை உணர வேண்டும். ஒருகால் ஏதேனும் ஓர் அதிசயம் நிகழ்ந்து ருஷியா உடன்படிக்கையில் தற்போது கையெழுத்திட்டாலும், பிற்பாடு சீன அபாயம் நெருங்கும்போது ருஷியா நிச்சயமாகச் சீனாவை எதிர்க்காது. நெருக்கடி காலத்தில் ருஷியாவை அதன் வாக்குறுதிப்படி நடக்கச் செய்வது நம் சக்திக்கு மீறிய காரியம் ஆகும்.

என்ன சேதி?

வேண்டாத யோசனை

பஞ்சாயத்து ராஜ்யங்கள் மேலும் வலுப் பெற வேண்டும் என்றும் நில வரி முழுதும் பஞ்சாயத்துக்களைச் சேர வேண்டும் என்றும் பலவந்தராய் மேதா கமிட்டி யோசனை கூறியிருக்கிறது. இவ் விதம் காந்தியடிகளின் மறைவு நாளை ஒட்டி வெளியாவதால் அவர் விரும்பியவாறு கிராமப் பஞ்சாயத்துக்கள் உண்மையாகவே மக்களாட்சி நடைபெறும் நிறுவனங்களாக இருந்தால் மேதா கமிட்டியின் யோசனையை நாம் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றிருப்போம். ஆனால் தற்போது பஞ்சாயத்துக்கள் யாவும் குட்டிக் காங்கிரஸ் மகாசபைகளாகவே நாடெங்கும் வேரோடி ஊழல் அமைப்புக்களாக நடந்து வருகின்றன. இவற்றிடம் அதிகப் பொறுப்பு அளிப்பதால் மக்களுக்குச் சமமான நலன் கிட்டாது. பாரபட்ச நடவடிக்கைகள் ஏற்படத்தான் வழிவகுத்தாற் போலாகும்.

காமராஜ் சொல்லியும் பயனில்லை

நல்ல யோசனைகளாக இருப்பினும் எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்ற ஒரே காரணத்துக்காகச் சர்க்கார் அவற்றுக்குச் செவி சாய்ப்பதில்லை என்று நீண்ட காலமாக எண்ணி வந்தோம். அத்தகைய பட்சபாதம் எதுவும் இன்றி, ஆளும் கட்சிக்காரர்களே சொன்னாலும் கூட நல்ல யோசனைகளை அரசாங்கம் கேட்பதில்லை என்று இப்போது தெரிகிறது. 'நாலாம் திட்டத்துக்காக மேலும் 3000 கோடி ரூபாய் வரி திரட்டுவது உசிதமாகுமா?' என்று காங்கிரஸின் அக்கிராஸனராகிய திரு காமராஜ் அவர்களே வினவிய பின்பும் பழைய டம்பாச்சாரித்தனத்தைச் சர்க்கார் விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறது.

சர்க்காருக்கும் மேம்பட்ட திட்டக் கமிஷன் நாலாம் திட்டத்தை வெட்டுவதில்லை என்று கூறியது. இதை யடுத்துப் பிரதமர் லால் பஹதூர் அவர்கள் திட்டத்தை வெட்டுவதற்கில்லை என்று ததாஸ்து பாடியதோடல்லாமல், திட்டத்தை இன்னும் விரிவு படுத்த முடியுமா என்று யோசிப்பதாகவும் திருவாய்மலர்ந்திருக்கிறார். முன்பு 21,500 கோடி ரூபாயாக இருந்த பகாசுரத் திட்டம் இப்போது மேலும் ஆயிரம் கோடி ரூபாய் சேர்த்து 22,500 கோடியாகப் பரிணமிக்க இடமுண்டு என்று பத்திரிகைகள் கூறுகின்றன. வரி கொடுக்கும் மக்களை ஆண்டவன் தான் இரட்சிக்க வேண்டும்.





அமோகமான வெற்றியுடன், இம்மாதம் 17-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருச்சி தேவர் ஹாலில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மகாநாட்டின் ஒரு சில காட்சிகளை இந்தப் பக்கத்தில் பார்க்கிறீர்கள். மகாநாடு பற்றிய மேலும் பல விவரங்களை 47ம் பக்கத்திலும் காணலாம்.

1. மகாநாட்டை ராஜாஜி தொடங்கி வைத்துப் பேசுகிறார். அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருப்பவர் நாவலர் திரு நெடுஞ்செழியன். (சென்னை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்.) வலது கோடியில் அமர்ந்திருப்பவர் மகாநாட்டை இவ்வளவு வெற்றிகரமாக நடத்திய திரு கி. ஆ. பெ. விசுவநாதம்.
2. (இடமிருந்து வலம்) தமிழ்க்கொடியை ஏற்றிச் சொற்பொழிவு ஆற்றியவர் திரு கருமுத்து தியாகராச செட்டியார், மகாநாட்டுக்குத் தலைமை வகித்த தமிழவேள் திரு பி.டி.ராசன், ராஜாஜி, வரவேற்புரை நிகழ்த்திய கோவை தொழிலதிபர் திரு ஜி. டி. நாயுடு.
3. திருச்சி தேவர் மன்றத்தில் மக்கள் நிரம்பி வழிந்த காட்சியைப் பாருங்கள். ஹாலிலும், பால்கனியிலும், இரு பக்கங்களிலும் மக்கள் நெருக்கமாக இருந்து கேட்டனர். இதற்கு மும்மடங்கினர் கூட்டமாக வெளியே தெருவில் நின்று கேட்டனர்.





Rexona
GOOD FOR YOUR SKIN



ராஜாஜியின் கருத்துக்கள்

மகாபுருஷரும், நல்லஆன்மாவுமாகிய பாஞ்சால சிம்மம் லாஜபதிராய் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி, நாடு அஞ்சலி செலுத்துகிறது. 'அடிமைத் தனத்திலிருந்து விடுதலைக்கு வழியே இல்லை; எல்லாம் மீளாத இருளாகப் போயிற்று' என்று மக்கள் யாவரும் அங்கமலைவுக்கு பிரிட்டிஷ் ஆதிபத்தியம் இந்தியாவின் சக்தியை அடக்கியிருந்த காலத்தில் லாலா லாஜபதி தோன்றினார். தமது தேசப் பற்றாலும், தீரத்தாலும், விவேகத்தினாலும் நாட்டுக்குப் புது விழிப்புத் தந்தார். பிரிட்டிஷ் சர்க்கார் பாஞ்சால சிங்கத்தைக் கால வரம்பில்லாமல் நாடு கடத்தியதையும், பின்னர் அவர் 1907ம் ஆண்டில் வெற்றி வீரராக ஸூரத்துக் காங்கிரஸில் கலந்துகொள்ள வந்ததையும் கேட்டு அந்தக் காலத்தில் இளைஞனாக இருந்த நான் எப்படி உடல் புல்லரித்துப் போனேன் என்பது இன்றும் நினைவில் பசுமையாக இருக்கிறது. மக்களின் பயமும், மனத் தளர்ச்சியும் பிரிட்டிஷ் ஆதிபத்தியத்துக்கு மேலும் சக்தி ஊட்டி வந்த காலத்தில் லாஜபதி ராயும், பால கங்காதர திலகரும், விபின சந்திர பாலருமே சுதந்திர தீபத்தை அணையாமல் காத்துத் தந்தார்கள். ஆசாரியன் சொன்னதுபோல் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தெய்வப் பிரதிக்ஞையை நிறைவேற்றுவதற்காக வந்து சுதந்திர உணர்ச்சி தந்த மகாபுருஷர்களுக்குப் பூரண மனத்தோடு நன்றி தெரிவிப்போமாக. அவர்களில் ஒருவரான லாலா அவர்களுக்கு நாடு முழுவதும் நூற்றாண்டு அஞ்சலி செலுத்தி நன்றி தெரிவிப்பதைக் காண எனக்கும் மற்ற வயோதிகர்களுக்கும் திருப்தியாக இருக்கிறது.

இத்தலைவர்களின் பெயரைத் தெருக்களுக்குச் சூட்டுவதிலும், சிலை எழுப்புவதிலும், தபால் பில்லை போடுவதிலும் ஒரு பயனுமில்லை. அவர்கள் எழுப்பிய சுதந்திர உணர்ச்சியைப் போற்றி அவர்களுடைய நினைவை நெஞ்சில் அன்போடு நிறுத்திக் கொள்வதே உண்மையான அஞ்சலி.

ஃ ஃ ஃ

நேரு அவர்களின் மறைவுக்காக நாடு துக்கித்தபோது, நில உரிமையை அடியோடு பறிக்கும் பதினேழாவது சாஸனத்தை அவசரமாக நிறைவேற்றித் துக்கத்தை இரட்டிப்பாக்கினார்கள். இப்போது குடியரசுத் திருநாளில் சாஸனத்தின் பதினேழாவது பிரிவாகிய ஆட்சி மொழி விதியை அமுல் செய்து திருநாளில் துக்கம் தருகிறார்கள். பதினேழாவது சாஸன மாற்றமும் பதினேழாவது சாஸனப் பிரிவும் தொலைய வேண்டும். இவை போகிற போக்கில், இவற்றுக்குக் காரணமாகி, பதினேழாண்டுகளாக நாட்டைப் பாழ்படுத்திய கட்சியும் தொலைய வேண்டும்.

ஃ ஃ ஃ

தேசத்தில் நீதி உணர்ச்சியும், ஐக்கியமும், கௌரவமும் ஏகோபித்த பாதுகாப்பும் நிலவ வேண்டுமாயின் அரசியல் சாஸனத்தின் பதினேழாவது பிரிவாகிய ஆட்சி மொழி விதியை ரத்துச் செய்தேயாகவேண்டும். நாட்டின் நன்னெறிகளை வளர்த்து நமது பெருமையை உயர்த்த இன்னொரு யோசனையும் சொல்கிறேன்:

தெற்கு ஆசியாவில் போதிய எதிர்ப்பு இன்றிப் பரவி வரும் கம்யூனிஸக் கொடுங்கோன்மையைத் தடுக்க இந்தியா காரிய ரீதியில் முயற்சி தொடங்கியாக வேண்டும். உயிரைக் கொடுக்க சத்தியம் செய்தவர்களாகத் தீரமும், பலமும் கொண்ட இளைஞர்களில் தென்னிந்தியாவிலிருந்து ஐந்நூறு பேரும் வட இந்தியாவிலிருந்து ஐந்நூறுபேரும் திரட்டி இப்படைக்குக் கொரில்லாப் போரில் பயிற்சி அளிக்க வேண்டும். இந்தோனேஷியாவின் படையெடுப்புக்கு ஆளாகியுள்ள மலேஷியாவின் சார்பிலும் வட வியட்நாமின் படையெடுப்புக்கு ஆளாகியுள்ள தென்வியட்நாமின் சார்பிலும் போராடுவதற்காக இந்த ஆயிரம் சம்சப்தகர்களடங்கிய படையை இந்திய சர்க்கார் அனுப்பி வைக்க வேண்டும். படை வீரர்கள் பயிற்சி பெறும்போதும், உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ போர்ப் பணி புரியும்போதும் அவர்களின் குடும்பங்களுக்குப் போதிய பண உதவி அளிக்கவேண்டும். வீரர்களுக்கு மரணமோ அல்லது அங்கஹீனமோ நேருமாயின் அவர்களின் குடும்பத்தினர் காலதாமதமின்றி உதவி பெறுமாறு ஒவ்வொருவருக்காகவும் சர்க்கார் ரூ. 3000 இன்ஷ்யூர் செய்ய வேண்டும். இதற்கென்று முப்பது லட்ச ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும்.

இந்தப் படையின் ஒவ்வொரு பிரிவிலும் சரி பாதிப்பேர் வட இந்தியராகவும், மீதமுள்ள பாதி தமிழர், கன்னடியர், மலையாளி, ஆந்திரராகவும் இருக்க வேண்டும். காட்டுப் பிரதேசங்களில் போராடுவதற்கும், யுத்த சம்பிரதாயங்களற்ற கம்யூனிஸ கொரில்லாப் போரில் எதிரிகளைப் போலவே போராடவும் தேவைப்படுகிற எல்லா சாதனங்களும் மருந்துகளும் ஒரு குறைவுமின்றி இவ்வீரர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

காங்கிரஸை எதிர்ப்பவன் என்றோ, பிரசார நோக்கத்தில் யோசனை சொல்பவன் என்றோ நினைக்காமல் என்னுடைய இந்த யோசனையைப் பாதுகாப்பு மந்திரி சபை பரிசீலனை செய்யுமென நம்புகிறேன்.

ஃ ஃ ஃ

உணவுப் பதுக்கல்காரர்கள் மீது எடுத்த நடவடிக்கை 'ஓரளவுக்கு' அத்துமீறிவிட்டது

என்று பிரதமர் அவர்கள் கூறுகிறார். முறையின்மையில் கொஞ்சமா, அதிகமா என்ற பாருபாடு கிடையாது. சர்க்காரின் கொள்முதல் கெடுபிடிகள் முழுவதுமே முறையின்மைதான். கோழி முட்டை கெட்டுப் போனாலும் முழுவதுமே கெட்டுப்போன பண்டம்தான்; ஓரளவு அழுகியும் ஓரளவு நன்றாகவும் இராது.

விவசாயிகளைப் 'பதுக்கல்காரர்கள்' என்று சொல்வதன் பொருள் நகரப்புற மார்க்கெட்டுக்குச் சரக்கை விற்க அவர்கள் முன்வரவில்லை என்பதுதான். இது உண்மையானால் காரணமென்ன? பெரிய நில உடைமைகளை அழித்த பின் எஞ்சியுள்ள சிறு உடைமைகளில் விளையும் சிறு மகசூலில் விவசாயி உண்பது போக மீதம் இராது. நீண்ட காலமாக வயிறு நிரம்ப உண்டிராத விவசாயி குடும்பம், தான் வயிறாரச் சாப்பிடுவதற்காகச் சேமித்து வைக்கக்கூடாதென்பது எப்படி நியாயமாகும்? நெடுங்காலமாகப் போதிய காப்பு இன்றி வறுமைக்கு ஆட்பட்டிருந்த குடும்பங்கள் இப்போது தங்களுடைய உழைப்பின் பலனைத் தாங்களே நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள். சர்க்கார் அச்சடிக்கும் ரூபாய் நோட்டை விடத் தாங்கள் பயிர் செய்த தானியமே சிறந்த காப்பு நிதி என்று அவர்கள் கருதுகிறார்கள். இவையெல்லாம் இயற்கையான அபிலாஷைகள் தான். அதை உணராமல், சிறு நிலச் சொந்தக்காரர்களைப் பதுக்கல்காரர்கள் என்று குற்றம் சாட்டுவது அறிவீனம்.

பட்டணங்களின் ஜனத்தொகை மேலும் மேலும் பெருகிக் கொண்டே வருகிற காலத்தில் அவர்களுக்குத் தானியம் ஸப்ளை செய்யக்கூடிய பெரிய நில உடைமைகளை அபிவிருத்தி செய்திருக்க வேண்டியதே அரசாங்கத்தின் கடமை. இதற்கு நேர்மாறாகக் காரியம் செய்தார்கள் வகுப்புத் துவேஷங்களைக் கிளப்பிவிட்டும், நில உடைமைக்கு உச்ச வரம்பு போட்டும் நகர சப்ளை ஆதாரத்தை அடியோடு சிதைத்தார்கள். இன்று விவசாயத்தில் நிர்வாகத் திறமையும் ஊக்கமும் மறைந்தேவிட்டன. இவையின்றி உணவு உற்பத்தி முன்னேற முடியாது என்பதைப் பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்கள் தெளிவாகக் காட்டியிருக்கிறார்.

'நிலமற்றவருக்கு நிலம்' என்ற மாயமானைப் பின்பற்றியதால் விவசாயத் தொழில் சேற்றில் புதைந்து விட்டது. சிறு நிலச் சொந்தக்காரர்களுக்குத் தலைவர் யாரும் இல்லை. எனவே பிரச்னைகளைப் புரிந்துகொண்டு நிர்வகிக்கக் கிராமப்புறத்தில் யாருமே இல்லை.

இவை போதாதென்று பண வீக்கமும், வரிப் பளுவும் விலைவாசிகளை மேலும் உயர்த்தி, பிரச்னையைக் கடுமையாக்கியுள்ளன. இந்தத் தவறுகளை ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டால்தான் சமூகத்தின் எல்லாப் பிரிவினருக்கும் க்ஷேமம் உண்டாகும். அறியாத மக்கள் காங்கிரஸின் ஜாலத்தில் மயங்கித்தான் போவார்கள். அவர்களைத் தந்திரப் பிடியிலிருந்து விடுவிப்பது அறிவாளிகளின் கடமை.

ஃ ஃ ஃ

பணத்தின் மதிப்பைக் குறைக்கும் சர்க்காரைப் பதவியிலிருந்து விலக்குமளவுக்கு வாக்காளர்களுக்கு அரசியலறிவு புகட்டினாலன்றிப் பணவீக்கத்தைத் தடுக்க முடியாது என்று பேராசிரியர் டபிள்யூ. ஹெச். ஹட் கூறுகிறார். அரசியலறிவு புகட்டுவது மட்டும் போதாது. பணத்தின் மதிப்பைக் குறைக்கும் சர்க்காரால் தாங்கள் பெறும் சில சில்லறை லாபங்களைத் தியாகம் செய்யவும் மக்கள் முன்வரவேண்டும். அறிவாளிகள் மக்களுக்கு விஷயங்களைப் புரியவைக்கலாம். ஆனால் தீரமும் தியாக உணர்ச்சியும் ஆண்டவன் தான் அருளவேண்டும். அதற்குச் சமயம் எது என்பதை அவனே அறிவான்.



இலங்கைப் பெரியார் மறைவு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெரியார் க. நடேசபிள்ளை அவர்கள் காலமான செய்தி கேட்டுத் தமிழுலகம் பெரும் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறது. ஸர் பி. ராமநாதன் அவர்களின் மருகரான திரு நடேசபிள்ளை, இலங்கைவாழ் தமிழ் மக்களின் பிரதிநிதியாக இலங்கை அரசாங்கத்திலும், பார்லிமெண்டிலும் பல காலம் அருந்தொண்டாற்றி யிருக்கிறார். தமிழ்ப் புலமையும், ஆங்கிலப் புலமையும், சமயப் பற்றும், உயர்ந்த பண்பாடும் கொண்டு விளங்கிய திரு க. நடேசபிள்ளை அவர்கள் தமிழகத்தினின்று செல்லும் புலவர்களையும் பெரியோர்களையும் பேணி உபசரிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். சிங்கள மொழி ஆட்சி மொழியாவதைக் கண்டித்துத் திரு க. நடேசபிள்ளை, இலங்கைவாழ் தமிழ் மக்களின் உரிமைக் குரலைச் சிங்கள பார்லிமெண்டில் எழுப்பியிருக்கிறார். இரண்டு ஆண்டுகளுக்கு முன் சென்னை சர்வகலாசாலையில் சிலப்பதிகாரத்தின் மீது அரிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கிறார். அவருடைய மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.


நிச்சயமாகத் தெரியுமா?
ஆம், கவர்ச்சி மிக்கவள் தான். அழகான ஆடை அணிந்திருக்கிறாள்; படிப்பிலும் சுறுசுறுப்பானவள் தான். ஆனால் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவள் தானா என்பது நிச்சயமாகத் தெரியுமா?
உடலில் துர்நாற்றம் வீசும் கிருமிகளை உங்களால் தவிர்க்க முடியாது. ஆனால் வழக்கமாக சிந்தால் உபயோகித்து அவைகளை அழித்து விடலாம். இந்தியாவில் அற்புதக் கிருமிநாசினி ஜி-11* கொண்ட ஒரே சோப் இதுதான். லட்சக்கணக்கான மக்கள் உபயோகித்து பரிசீலனை செய்யப்பட்டது. இதனுடைய பிரபல்யம் பெரிதும் அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.
மகிழ்ச்சியூட்டும், நறுமணம் பொருந்திய சிந்தால் சருமத்தைக் கறைப்படுத்தும் கிருமிகளைக் கூட அழித்து விடும். அதனால் மேனி மாசற்று விளங்கும்.
நிச்சயமான பாதுகாப்பிற்கு குழந்தையை சிந்தால் சோப் கொண்டு நீராட்டி, துர்நாற்றம் போக்கும் இனிய மணம் கமழும், இதமான ஜி-11 அடங்கிய சிந்தால் டால்கம் பவுடரைத் தூவித் தடவுங்கள்
* எல். ஜிவாடன் அண்டு கம்பெனியின் ட்ரேட் மார்க்
* விவரமான "ஜி-11 என்பது என்ன?" என்ற இலவச புத்தகத்திற்கு கோத்ரெஜ், பம்பாய்-12', என்ற விலாசத்துக்கு எழுதுங்கள்.
வியர்வை நாற்றத்தைப் போக்கி எழிலுடன் விளங்கச் செய்யும் சோப்
CINTHOL
CINTHOL
Godrej
கோத்ரெஜ்
சோப்புகளில் முதன்மையான பெயர்
CT. 10A. TAM.

கந்தன் கருணை

13. வெற்றிவேல்! வீரவேல்! ஞானவேல்!

முருகப் பெருமானிடம் சிவபெருமானே உபதேசம் கேட்டார் என்பதை அறிந்த அகத்திய முனிவர், தாமும் குடிலை மந்திரத்தின் பொருளை உணர வேண்டும் என்று முருகப் பெருமானை நாடிக் கந்த வெற்புக்கு வந்தார். வீரவாகு தேவரிடம் அனுமதி பெற்று, செம்பொன்னாலயத்தினுள் சென்று, கந்தவேளை வலம் வந்து வணங்கினார். ''எம்பெருமானே! காமனை எரித்தவர் தேவரீருடைய தந்தை; காமன் கணையால் வாடுபவன் நான். காலனை உதைத்தவர் தேவரீர் தந்தை; காலனுக்கு அஞ்சுபவன் நான். எல்லாம் வல்ல இறைவனுக்கே பிரணவ மந்திரத்தின் பொருளை உபதேசித்த தேவரீர், அதனை அடியேனுக்கும் உபதேசித்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கைகட்டி வாய் பொத்தி நின்றார்.

அகத்திய முனிவரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட கந்தவேள், பிரணவ மந்திரப் பொருளையும், வேதாகமங்களின் மெய்ப்பொருளையும் உலகமெல்லாம் உய்யும் பொருட்டு அவருக்கு உபதேசித்தருளினார்.

முருகப் பெருமான் கந்தவெற்பில் எழுந்தருளியிருந்த போது, திருமாலின் கண்ணின் மணியிலிருந்து சொரிந்த ஆனந்த பாஷ்பத்திலிருந்து சுந்தரம் மிகுந்த இரு நங்கையர் தோன்றினர். சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து எழுந்த ஞானாக்கினியில் ஞான பண்டிதனாக ஒரு குமாரன் உதித்தானெனில், திருமாலின் கண்ணினின்று கசிந்த கருணை நீரில் கருணாமயமான இரு குமரிகள் உதித்ததும் பொருத்தம் தானே! கண்மணியினின்று உதித்த அப்பெண்மணிகள் நெற்றிக் கண்ணில் பிறந்த வெற்றிவேலனிடம் அன்பு பூண்டதும் பொருத்தம்தானே! அத்தை மகன் என்ற உறவுமுறையும் உள்ளதே!

திருமாலின் நயனத்தில் உதித்த அவரது புதல்வியராகிய அமிர்தவல்லியும், அவள் தங்கை சுந்தரவல்லியும் கந்தக் கடவுளைத் திருமணம் புரிந்து கொள்ள விரும்பினார்கள். அவர்கள் இருவரும், தங்கள் விருப்பம் நிறைவேறும் பொருட்டு, இமயமலையில் உள்ள சரவணப் பொய்கைக்கு வந்து, சடக்கர மந்திரம் ஜபித்துப் பன்னெடுங் காலம் அருந்தவமிருந்தார்கள். தவத்துக்கு இரங்கிய முருகப் பெருமான் அவர்கள் முன் எழுந்தருளிக் காட்சி தந்தார்.

இறைவனைக் கண்ட கன்னியர் இருவரும், அவரது திருத்தாளைப் பணிந்து துதித்து நாணி நின்றார்கள்.

கந்தவேள் அவர்களை நோக்கி, ''நீங்கள் எதனை விரும்பித் தவம் செய்தீர்கள்?'' என்று வினவினார்.

திருமால் புதல்வியர்கள் கைகுவித்து நின்று, ''எம்பெருமானே! தேவரீர் அடியவர்களாகிய எங்களைத் திருமணம் புரிந்து கொள்ளும் பொருட்டுத்



தவம் செய்தோம்; எங்களுக்குத் திருவருள் செய்யவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

அவர்களை அப்பொழுதே முருகப் பெருமான் மனைவியராக ஏற்றுக் கொள்ளவில்லை. இறைவன் சக்தியோடு இருக்கும்பொழுது அழித்தல் வேலை நிகழாது. சக்தி அருளின் வடிவம் அல்லவா? ஆகவே, சூர சம்ஹாரம் நிகழ்ந்த பின்பே முருகப் பெருமான் அவர்களை மணக்க எண்ணம் கொண்டார். சிவபெருமானும் உமாதேவியாரை மணப்பதற்கு முன்புதான் காமனை எரித்தார்; இராமபிரானும் சீதையைப் பிரிந்த பின்பே இராவணனை அழித்தார்.

ஆறுமுகக் கடவுள் அமிர்தவல்லியை நோக்கி, ''நீ இந்திரனுக்கு மகளாய் வளரக் கடவாய்'' என்று அருள்பாலித்தார். சுந்தரவல்லியை நோக்கி, ''நீ பூமியிலே சிவமுனிக்குப் புதல்வியாகத் தோன்றி, வேட்டுவரிடத்தில் வளரக் கடவாய்'' என்றார்.

ஒருத்தி துரைமகள்; ஒருத்தி குறமகள். ஒருத்தி பொன்னுலகம்; ஒருத்தி மண்ணுலகம். ஒருத்தி கற்பகச்சோலைக்கு அரசி. ஒருத்தி தினைப்புனத்திற்குக் காவற்காரி.

கன்னியர் இருவரையும் நோக்கிக் கந்தக் கடவுள், ''நீங்கள் இருவரும் இவ்வாறு வளரும் பொழுது நாம் வந்து, உங்களை முறைப்படி திருமணம் செய்து கொள்ளுவோம்; செல்லுங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். கன்னியர் இருவரும் கைதொழுது விடை பெற்றுச் சென்றனர்.

அமிர்தவல்லி ஓர் அழகிய குழந்தை வடிவம் கொண்டு மேரு மலையில் வாழ்ந்த இந்திரன் முன் சென்று, ''தேவர்கோமானே! நான் உன்னுடன்



உபேந்திரனுகப் பிறந்த நாராயணரின் மகள்; ஆதலால் நீ எனக்குத் தந்தை முறையாவாய்! நீ என்னை மகளாக வளர்க்கக் கடவாய்'' என்ருள். இந்திரன் அவளை நோக்கி, ''தாயே! இங்கு வா'' என்று சொல்லி எடுத்தணைத்து உள்ளம் பூரித்தான். தனது ஊர்தியாகிய ஐராவதத்தை அழைத்து ''இவள் நம்முடைய மகள்; இவளை நீ அன்போடு வளர்த்து வரக் கடவாய்; இவளால் இனி நமக்கு எல்லையில்லாத சீரும் சிறப்பும் உண்டாகும்'' என்ருன். ஐராவதம் அந்தக் குழந்தையைத் தன் பிடரி மேல் வைத்துக் கொண்டு, சத்திய உலகத்தின் தலைநகராகிய மனேவதியை அடைந்தது. அங்கேயே அக்குழந்தையை வளர்த்து வந்தது. தேவராஜனின் யானை வளர்த்ததால் அக்குழந்தைக்குத் தெய்வயானை என்னும் பெயர் ஏற்பட்டது. சேனையும் அரசும் இழந்து தவித்த தேவராஜனுக்கு ஒரு சேனையே கிடைத்தாற் போன்ற உற்சாகமளித்தமையால் தேவசேனை என்றும் அவளைச் சொல்வதுண்டு.

திருமகளும் நாணும் வனப்புடன் திகழ்ந்தாள் தெய்வயானை. அரை நொடியும் விடாது அறுமுகதேவனைத் தியானித்த வண்ணமாகவே இருந்தாள்.

இளையவளாகிய சுந்தரவல்லி தொண்டை நாட்டிலுள்ள வள்ளி மலைக்கு வந்து முருகப் பெருமானைக் குறித்துத் தவம் செய்து கொண்டிருந்தாள்.

காமமே இல்லாத கடவுளை அடையத் தவம் கிடந்தனர் அமிர்தவல்லியும், சுந்தரவல்லியும். அவர்களுக்கு முருகப் பெருமான் திருவருள் புரிந்தார். பற்று விட்டவர்களைத்தான் செல்வங்கள் பலவும் வந்தடைகின்றன. இச்சா சக்தியும், கிரியா சக்தியும் காமத்தை வென்றவன் கட்டளையை விரும்பி நிறைவேற்றுகின்றன. ஆகவே, பற்றின்றி ஒன்றை எண்ணும்போதும், பேசும்போதும், குகனைச் சிந்தை செய்ய வேண்டும்.

அழகு அழகுடன்தானே சேர வேண்டும்? அழகே உருவான திருமாலின் புதல்விகள் முருகனைத்தானே சேர வேண்டும்? முருகன் அழகுத் தெய்வம். அந்திச் செவ்வானத்தின் அழகுதான் முருகன். முருகன் என்பதே அழகன் என்பதைக் குறிக்கும். முருகு என்ற சொல்லுக்கு அழகு என்பது பொருள்.

''எழுதரிய அறுமுகமு மணிநுதலும் வயிரமிடை
யிட்டுச் சமைந்தசெங் கட்டிக் கலன்களுந்
துங்கநீள்பன்
னிருகருணை விழிமலரு மிலகுபதி னிருகுழையும்
ரத்நக்ருதம்பையும் பத்மக்கரங்களுஞ்
செம்பொனூலும்
மொழிபுகழு முடைபணியு மரைவடமு
மடியிணையு
முத்தச் சதங்கையுஞ் சித்ரச் சிகண்டியுஞ்
செங்கைவேலும்
முழுதுமழ கியகுமர கிரிகுமரியுடனுருகு
முக்கட் சிவன்பெறுஞ் சற்புத்ர
வும்பர்தந் தம்பிரானே''

என்று அருணகிரிநாதர் முருகனை அழகாக வர்ணிக்கிருர். இத்தகைய அழகுத் தெய்வத்தை மணாளனுகத் தேர்ந்தெடுத்த அந்தக் கன்னியர்கள் எப்படிப்பட்டவர்கள்?

அமிர்தவல்லி என்ருல் அமுதமே உருவெடுத்த கொடி போன்றவள்; சுந்தரவல்லியோ அழகே வடிவெடுத்த கொடி போன்றவள். கலைமகளுக்குச் சொல்லில் அழகு. திருமகளுக்கு முகத்தில் அழகு. திருமாலுக்குக் கண்கள் அழகு. இப்படி ஒவ்வொருவருக்கும் முக்கியமான அழகு தருவது ஓர் அவயவம். ஆனல் அமிர்தவல்லியும், சுந்தரவல்லியும் எல்லா அழகும் பெற்று இலங்கினர்.

திருமாலின் புதல்வியர்கள் இருவருக்கும் வரமளித்தபின் முருகப் பெருமான் கந்தவெற்பை யடைந்தார். பெருங் கருணையோடு அங்கு சில காலம் வீற்றிருந்தபின், இலக்கத்தொன்பது வீரர்களும் பூதகணங்களும் சூழத் திருக்கயிலாய மலையடைந்தார். தாய் தந்தையரான சிவபெருமானையும், உமாதேவியாரையும் அன்புடன் வணங்கி, அவர்களுக்கு நடுவே கவினுற எழுந்தருளியிருந்தார். இவ்வாறு எழுந்தருளியிருக்கும்போது, இந்திரன், பிரமன், திருமால் முதலிய எல்லா தேவர்களும் சூரபன்மன் கொடுமையால் உள்ளம் தளர்ந்து திருக்கயிலாய மலையையடைந்தார்கள்.

இந்திரன் சிவபெருமானை நோக்கி, ''அருட் சக்தியாகிய அம்பிகையுடன் எழுந்தருளியுள்ள முழுமுதற் கடவுளே! அடியவர்களாகிய நாங்கள் எண்ணில்லாத யுகங்களாகச் சூரன் முதலிய அசுரர்களால் துன்பப்பட்டு ஒடுங்கினேம். அடியேனுடைய புதல்வனுகிய சயந்தனும் தேவர்களும் அரம்பையர்களும் சூரனுல் சிறைப்பட்டு வருந்தி வாடுகிருர்கள். அரக்கர்கள் விண்ணுலகத்தை அழித்தார்கள். இவையெல்லாம் தேவரீர் அறியாததோ? கருணைக் கடலே! அடியேன் முன்னர்த் தவம்

செய்த பொழுது தேவரீர் எழுந்தருளி, 'நம்மிடத்தே ஒரு குமாரன் பிறந்து சூரன் முதலிய அரக்கர்களைக் கொன்று உங்களைக் காத்தருளுவான்' என்று திருவாய் மலர்ந்தருளினீர்கள். அவ்வாறே தேவரீர்க்குத் திருக்குமாரன் தோன்றியும் எங்கள் துன்பம் இன்னும் நீங்கவில்லையே ! அடியேங்கள் துன்பம் இன்னும் தொலையவில்லை போலும் !'' என மனமுருகிக் கூறினான்.

சிவபெருமான் தேவர்களின் குறைகளைக் கேட்டுப் பெருங் கருணை புரிந்தார். தேவர்களின் துயர் தீர்ப்பதற்குரிய தருணம் வந்துவிட்டது எனத் திருவுளம் கொண்டார். தமது பக்கத்தில் எழுந்தருளி யிருந்த கந்தவேளை நோக்கி, ''குமர ! உலகத்திலுள்ள உயிர்களுக்குத் துன்பம் செய்து தேவர் உலகத்தை அழித்து, மிகுந்த வலிமை படைத்த சூரபன்மனை அசுரர்களோடு கொன்று, அதர்மத்தை அழித்து, அறமார்க்கத்தை நிலைநிறுத்தி, அமரர்களுடைய துன்பத்தை நீக்கி, இந்திர



னுக்கு அவன் அரசை மீட்டுக் கொடுத்துத் திரும்பி வருவாயாக'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

''எந்தையே! கட்டளைப்படியே அடியேன் இப்பணியைச் செய்வேன்'' என்று முருகன் விண்ணப்பம் செய்தார். அவதாரப் பணி தொடங்கிவிட்டது.

சிவபெருமான் பதினொரு உருத்திரர்களையும் தம் திருவுளத்தில் நினைத்தார். அவர்கள் அங்கு வந்து தோன்றினார்கள். ''நீங்கள் முருகன் கையில் படைக்கலங்களாக இருக்கக் கடவீர்'' என்று முக்கண் மூர்த்தி திருவாய் மலர்ந்தார். உடனே அவர்களைத் தோமரம் (எறியீட்டி) கொடி, வாள், குலிசம் (வஜ்ராயுதம்) அம்பு, அங்குசம், கண்டாமணி, தாமரை (மோகிக்கச் செய்யும் ஆயுதம்) தண்டம், வில், மழு என்னும் பதினொரு படைக்கலங்களாக்கிக் கந்தக் கடவுளின் திருக் கரங்களிலே கொடுத்தருளினார்.

பொன்றிகழ் சடிலத் தண்ணல்தன் பெயரும்
பொருவிலா உருவமும் தோன்றும்
நன்று பெற்றுடைய உருத்திர கணத்தோர்
நவிலருந் தோமரம் கொடிவாள்
வன்றிறற் குலிசம் பகழியங் குலிசம்
மணிமலர்ப் பங்கயம் தண்டம்
வென்றிவில் மழுவு மாகவீற்றிருந்தார்
விறல்மிகும் அறுமுகன் கரத்தில்

பின்னர் சிவபெருமான் அப்பதினொரு ஆயுதங்களுக்கும் நாயகமாகப் பன்னிரண்டாம் ஆயுதமாக வேலாயுதம் ஒன்றைப் படைத்தருளினார். அஃது ஏவியவுடன் ஐம்பெரும் பூதங்களையும் அழிக்கக் கூடியது; சகல உயிர்களையும் ஒருங்கே முடிக்கவல்லது; யாவர் மேல் விடுத்தாலும் அவருடைய வன்மைகளையும் வரங்களையும் கெடுத்து உயிரைப் போக்கக் கூடியது; எல்லாப் படைக்கலங்களுக்கும் நாயகமானது. அதனை முருகப் பெருமானின் பன்னிரண்டாவது திருக்கரத்தில் முக்கட் பரமன் கொடுத்தருளினார்.

ஆயதற் பின்னர் ஏவில்மூ தண்டத்(து)
ஐம்பெரும் பூதமும் அடுவது:
ஏயபல் லுயிரும் ஒருதலை முடிப்பது:
ஏவர்மேல் விடுக்கினும் அவர்தம்
மாயிருந் திறலும் வரங்களுஞ் சிந்தி
மன்னுயிர் உண்பதேப் படைக்கும்
நாயகமாவது: ஒருதனிச் சுடர்வேல்
நல்கியே மதலைக்குக் கொடுத்தான்

ஞானசக்தியாகிய இவ் வேற்படையால் ஆகாததே இல்லை. வெல்வது வேல். 'வெல்' என்ற பகுதி 'வேல்' என்று நீண்டது. (இதனை முதல் நிலை நீண்ட தொழிற் பெயர் என்பர் இலக்கண நூலார்.) விடு என்பது வீடானது போல, கெடு என்பது கேடானது போல, வெல் என்பது வேல் ஆயிற்று. வேல் என்பது ஆயுதமல்ல. எல்லாவற்றையும் வெல்வது என்று பொருள். அறிவுதான் எல்லாவற்றையும் வெல்லும்; ஆயுதம் வெல்லாது. ஞானம்தான் வெல்லும். அதனால் ஞான சக்தியே முருகனுக்கு வேல் ஆயிற்று.

அறிவுக்கு மூன்று லட்சணங்கள் உண்டு. அவை ஆழம், அகலம், கூர்மை என்பன. தீட்சண்யமாகவும், பரந்தும், ஆழ்ந்தும் உள்ள அறிவே அறிவல்லவா?

''வேதங்கள் ஐயா என ஓங்கி
ஆழ்ந் தகன்ற நுண்ணியனே''

என்று மாணிக்கவாசகர் சிவஞானத்தைப் பாடுகிறார்.

அடிப் பகுதி ஆழ்ந்தும், இடைப் பகுதி அகன்றும், நுனிப் பகுதி நுண்மையாகக் கூர்ந்தும் இருப்பது வேல். எனவே, வேல் என்பது ஞானமே. கொலைக் கருவி அல்ல. முருகப் பெரு

மான் தம்மிடம் விரோதம் கொண்டவர் மீது வேலை ஏவி ஞானத்தைத் தருகிறார். முருகப் பெருமானே ஞான தாதா அல்லவா ?

தீவினையாகிய மலையைத் தூளாக்கும் ஆற்றல் அந்த வேலுக்கே உண்டு.

வினை ஓடவிடும் கதிர்வேல் மறவேன்
வேலுண்டு வினையில்லை

ஆணவத்தையும், தீவினையையும் ஞானம் தவிர வேறு எதனாலும் அழிக்க முடியாது. அவ்வாறு அழிக்கும் ஞானத்தின் உருவமே முருகவேள் கையிலுள்ள வேல்.

முருகப் பெருமான் சிவபெருமானையும், உமாதேவியாரையும் தொழுது நின்றார். கண்ணுதற் கடவுள் தமது அருமைத் திருக் கரத்தினால் கந்தவேளை எடுத்துத் திருத் தொடையில் இருத்திப் பெருங் கருணையோடு தழுவினார்; உச்சி மோந்து திருவருள் புரிந்து, எம்பெருமாட்டியாருடைய திருக் கரங்களிலே கொடுத்தருளினார். தமது அன்புக்கு உறைவிடமான இன்பக் குமாரரை எம்பெருமாட்டியார் தமது மடியில் இருத்திப் பேரருட் பொலிவோடு அணைந்து உச்சி மோந்தார். ''குழந்தாய் ! இலக்கத்தொன்பது வீரர்கள் புடைசூழச் சென்று, அசுரர்களைக் கொன்று, தேவர்களின் குறையை நீக்கி மீள்வாயாக'' என்று எம்பெருமாட்டியார் ஆசி கூறினார்.

ஞானம்பாள் அல்லவா பார்வதி ? முருகனையும், அவன் பெற்ற ஞான வேலையும் சேர்த்து வாழ்த்தினார்.

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

ஆறுமுகங்களுக்கும் ஒரு முறைதான் போற்றி கூறினார் கவி; பன்னிரு தோள்களுக்கும் ஒரு முறைதான் போற்றி கூறினார்: இரு திருவடிகளுக்கும் ஒரு போற்றிதான் கூறினார்; சேவல் மயில் இரண்டுக்குமாகச் சேர்த்தும் ஒரே போற்றிதான் கூறினார். இப்படிப் போற்றிப் பாடிய பாவேந்தர், கடைசி அடியில், ''திருக்கைவேல் போற்றி; போற்றி !'' என்று ஒன்றேயான வேலை மட்டும் இரண்டு முறை போற்றுவதைப் பாருங்கள்!

ஆறுமுகக் கடவுள் அம்மையப்பரை வணங்கி விடைபெற்றார். ஐம்பெரும் பூதங்களின் வன்மை கொண்டதும், இலக்கம் குதிரை பூண்டதும், மனத்தை விட விரைந்து செல்வதுமாகிய ஒரு தேரைத் திருவுளத்தினாலே சிருட்டித்து, முருகப் பெருமானிடம் கொடுத்தார் பரமேசுவரர். ''குமர! இனி நீ செல்லக் கடவாய்; வெற்றி பெற்று யாவருக்கும் இன்பம் தரக் கடவாய்'' என்று வாழ்த்தினார். இலக்கத்தொன்பது வீரர்களை நோக்கிய எம்பெருமான், ''நீங்கள் முருகனுக்குத் துணையாக அசுரர்களை அழிக்கச் செல்லுங்கள்'' என்று பணித்தார். அவர்களுக்கும் படைக்கலங்கள் பலவற்றை அளித்தார்.



அண்டாபரணர், நந்தி, உக்கிரர், சண்டர், அக்கினி நேத்திரர், சிங்கர் முதலாகிய பெரிய கணநாதர்களை நோக்கி, ''நீங்கள் இரண்டாயிரம் வெள்ளம் பூதங்களோடு செவ்வேளுக்குச் சேனாதிபதியாய்ச் செல்லக் கடவீர்'' என்று திருவாய் மலர்ந்து, முருகக் கடவுளுக்கு அவர்களைப் படைத் தலைவர்களாகக் கொடுத்தருளினார்.

திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் எம்பெருமானை வணங்கினர். ''இனி அடியேங்கள் துன்பம் நீங்கியது'' என்று மகிழ்வுடன் நன்றி கூறினர். சிவபெருமான் அவர்களை நோக்கி, ''உங்களுக்கு அருள் செய்யும் நாயகனாகிய நம் குமாரனோடு நீங்களும் செல்லுங்கள்'' என்று விடை கொடுத்தருளினார். (தொடரும்)

அன்னையைப் போன்ற அழகோவி படைத்தவள்.



ஜீவகீதம்

அத்தியாயம் ஐந்து

நண்பனின் நண்பன்

அந்தச் சில விநாடிகளில் அங்கு என்ன நடந்தது என்பதைக் கவனியாமல் தன் கவலையிலேயே ஆழ்ந்தவனுய் நின்று கொண்டிருந்த சபேசன், அப்போதுதான்

நோக்கி விறைப்பாகநடந்துசெல்ல ஆரம்பித்தான்.

இதைக் கண்ட சபேசனுக்கு வியப்பும் திகைப்புமாகி விட்டது. 'இவன் ஏன் அந்தப் பெண்ணிடம் போகிறுன்? இவனுக்கு அவள் ஏற்கனவே பரிச்சயமானவளாயிருப்பாளோ? அல்லது நகரமன்ற அலுவலகத்தில் என்னிடமிருந்து அவள் கடனுகப் பணம் வாங்கிச் சென்றதை இந்த எமகாதகப்

அந்தப் பெண்ணையே கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டு சென்றவன், அவளுக்குப் பக்கவாட்டில் போய் நின்றதும் அவளைப் பாராதவன்போல் சட்டென்று திரும்பி, நடைபாதையில் ஒட்டப்பட்டிருந்த ஒரு பொதுக் கூட்டப் போஸ்டரை வெகு அக்கறையாகக் குனிந்து படிக்க ஆரம்பித்தான்.

நிஜமாகவே அவன் அந்தப் போஸ்டரைப் படிக்கத்தான் அங்கு போனானா? அல்லது அவனுடைய பாஷைப்படி அதுவும் ஒரு 'கமால்' வேலையா ?

அவள் இன்னமும் வெளிறிய முகத்துடன் தலை

"பிரதர் ! இந்தப் போஸ்டரைப் பார்த்தியா? திர்லக்கண்ணி பீச்சிலே மீட்டிங்காம். பலானவர் பேசறாராம், ரொம்ப டமாசாயிருக்கும். வர்றியா, போவலாம்?" என்று உற்சாகமாகக்கேட்டுக்கொண்டே மேலே நடந்தான் நச்சி.

இளைஞனுக்கு மிகவும் வெட்கமாகி விட்டது. அந்தப் பெண்ணைத் தரக்குறைவாக முறைத்துப் பார்த்து விட்டு வந்த நச்சி, அவளுக்கெதிரே தன்னை அவனது நண்பனாகக் காட்டிக்கொண்டது அவனுக்குப் பெருத்த அவமானமா

யிருந்தது. உடனே அவனுடைய காதில் விழும்படியாக, 'யாரப்பா நீ, ஆள் தெரியாமல் வந்து தோள் மேல் கையைப் போடுகிறாய்?' என்று இரைந்து கேட்டு அவனைத் தனக்குத் தெரியாத மாதிரி காட்டிக்கொள்ள வேண்டுமெனத் துடிப்படைந்தான்.

அதற்குள் நச்சி அவனைப் பின்னுக்கு இழுத்து நிறுத்தி விட்டு எதிரில் போய் நின்றுகொண்டு, ''இன்னா, தம்பி! அந்த அகாதுகா வேலையிலே துங்க பைசாக்கூடச் சம்பாதிக்கலையேங்கிற கவலையை இன்னமும் நீ உதறிப் போடலியா?'' என்று சற்றே கோபமாக அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கேட்டவன், எதையோ புரிந்துகொண்டாற் போல் சட்டென்று நிமிர்ந்து, ''ஓ,.... காலம்பற நாஸ்தா பண்ணினதோடு இன்னும் ஒண்ணுமே சாப்பிடலை இல்லையா? அதுதான் முகம் இப்படித் தொங்கிப் போயிருக்குது! இதை அப்பவே சொல்லியிருக்கப்படாது?'' என்றவாறு தன் கால்சராய் ஜேபியைத் தட்டிப் பார்த்துக்கொண்டே எதிர்ப்புறமிருந்த ஒரு பெரிய 'ஹோட்டலை நோக்கி நடந்தான்.

அவமானத்தால் வெகுண்டிருந்த சபேசனின் மனம் இப்போது அடங்கிப் பணிந்து துவண்டது. 'அந்த மோசக்காரப் பெண்ணுக்காக இவ்வளவு நல்லவனைப் பகைத்துக் கொள்ளப் பார்த்தேனே' என்று உள்ளூற வருந்தியவனாய் நச்சியுடன் நடந்து கொண்டே பின்னால் திரும்பி பஸ் நிலையத்தை நோக்கினான்.

இந்நேரம் வரையில் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள் போல் அங்கு நின்றிருந்த அந்தப் பெண், ஒரு பஸ் வரவே ஓடிப் போய் அதில் ஏறிக்கொண்டாள். பஸ் புறப்பட்டுச் சென்ற போதும் அவள் சன்னல் பக்கமாய் அவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்ததாகத் தோன்றியது.

வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு நச்சியுடன் சேர்ந்து நடந்த சபேசன், தான் உற்சாகமாயிருப்பதாக அவனிடம் காட்டிக்கொள்ள எண்ணி, ''ஏன், அண்ணா! ஏதோ கூட்டம் என்றாயே, அது என்ன கூட்டம்?'' என்று விசாரித்தான்.

''நான் அதைக் கேட்கவில்லை. என்ன கூட்டம், எதைப் பற்றிப் பேசப் போகிறார்கள் என்றுதான் கேட்கிறேன்!''

''அட யார்ராவன், விஷயம் தெரியாதவனா யிருக்கிறான்! பீச்சிலே, மைதானத்திலே, பார்க்கிலே, தெருவிலே மீட்டிங் போட்டா, சோறு, துணி அணுகுண்டு இந்தி இங்கிலீஷ் விலைவாசி எதிர்க்கட்சி ஆளுங்கட்சி தேர்தல் வோட்டு காந்தி நேரு போராட்டம் புரட்சி — இப்படி எதனுக்கும் பேசுவாங்க; ஹாலு, சபா, மன்றம் இங்கெல்லாம் கூட்டம் நடத்தினா, கலை இலக்கியம் ஆண்டவன் ஆத்மா நரகம் மோட்சம் — இப்படி எதைப் பத்தியாவது லெச்சர் அடிப்பாங்க! கூட்டம் போடற இடத்தைப் பார்த்தே அங்கு இன்னா பேசப் போறாங்கறதைத் தெரிஞ்சுக்கலாம்!.... ஆங், இன்னைக்குப் பீச்சிலே பேசப் போறாரே; அவரு படா தமாசா பேசுவாரு! அவர் எங்கே பேசினாலும் நான் விடறதில்லை, போயிடுவேன்! தினத்துக்கும் ஒரு சினிமா; அது இல்லேன்னா மீட்டிங் — இதுதான் நம்ம பொழுதுபோக்கு! ரெண்டுக்கும் இன்னா வித்தியாசம்னு கேட்கறயா? ஒண்ணுமில்லை. அங்கேயும் நம்பளைப் பத்தித்தான் டயலாக் படிக்கிறான், பாடறான், ஆக்ட் பண்றான்; இங்கேயும் நம்பளைப் பத்தித்தான் பேசறான், அழறான், கதர்றான், கூச்சல் போடறான். இப்படி நம்பளைப் பத்தி மேடையிலே நடிக்கிறவனும் பேசறவனும் மாடி மேலே மாடி வைச்சுக் கட்டிக்கிட்டே போறான்; அவன்களால் பேசப்படற நாம் மட்டும் எப்பவும் இருக்கிற மாதிரிதான் இருந்துக்கிட்டிருக்கிறோம். இது நல்ல தமாசாயில்லே?....அவரு பேசறதைக் கேட்டிருக்கிறியா? நீதான் இந்த ஊருக்கே புதுச்சாச்சே! இன்னைக்கு வந்து கேட்டுப் பாரு; கேட்டா அப்படியே அசந்துடுவே!''

பல்வேறு அங்க சேஷ்டைகளுடன் இவ்வாறு உற்சாகமாகப் பேசிய நச்சியின் பெரிய வாயையே கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டு வந்த சபேசனுக்கு ஒரே மலைப்பாகி விட்டது. 'இவன்தான் எவ்வளவு விஷயங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறான்! அவற்றை எவ்வளவு சுவையாகச் சொல்லி

அது போயிடுச்சா இருக்குதா, பார்த்துச் சொல்லு?'' என்றான் இரகசியக் குரலில்.

''அந்தப் பெண்ணு? அவள் அப்போதே பஸ் ஏறிப் போய்விட்டாளே!'' என்று சிறிதும் தாமதிச்சாமல் உடனே பதில் சொன்னான் சபேசன்.

வியப்புடன் நிமிர்ந்து கைகளை இடுப்பின் மேல் ஊன்றிக் கொண்டு அவனை உற்றுப் பார்த்த நச்சி ஒரு கோணல் சிரிப்புடன், ''ஆங்... படா ஆளுதான்போல் இருக்கே நைனு நீ! அந்தப் பொண்ணைப் பார்த்திருக்க மாட்டேன்னுலே நினைச்சேன்? நீ இன்னுடான்னு நம்பளைவிட ஒருபடி மேலே போயிட்டியே! அதுக்குத்தான் சொல்றது, ஆமையை நம்பினாலும் நம்பலாம்—ஊமையை நம்பக் கூடாதுன்னு!'' என்றவாறு ஹோட்டலுக்குள் நுழைந்தான்.

சபேசனுக்கு ரொம்பவும் வெட்கமாகி விட்டது. அத்துடன் அந்தப் பெண்ணைப்பற்றி அவன் அத்தனை அக்கறையாக விசாரித்தது அவனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

அவ்விருவரும் ஒரு வட்டமேசையின் எதிரே போய் அமர்ந்தனர். 'டிப்—டாப்'பாக டிரஸ் பண்ணிக் கொண்டிருந்த 'வெயிட்டர்' ஒருவன் விரைந்து வந்து நச்சிக்குச் சலூட் அடித்து விட்டு 'மெனு கார்டை' நீட்டினான். நச்சி அதை அலட்சியமாக வாங்கிப் படிப்பது போல் சற்று நேரம் 'பாவலா' பண்ணி விட்டு நிமிர்ந்து சில பறவை — பிராணி இனங்களின் பெயர்களைச் சொல்லி, ''ரெண்டு பிளேட்! கொஞ்சம் குயிக்கா கொண்டு வாப்பா!'' என்று ஆர்டர் கொடுத்துவிட்டுத் திரும்பித் தணிந்த குரலில், ''கேட்டியா, தம்பி! இந்தச் சர்வர் இருக்கானே, இவன் ஆரம்பத்திலே நம்மகிட்டே ரொம்பவும் 'ராங்' பண்ணிக்கிட்டு இருந்தான். எதனைச்சும் சொன்னு அதைச் சரியா காதிலே வாங்க மாட்டான்; 'சால்னு கொண்டு வாடா'ன்னு, சாப்ஸ் எடுத்துக்கிட்டு வருவான்; 'வேண்டாம்'னு, 'ஆர்டர் கொடுத்தப்புறம் வாபீஸ் கிடையாது' என்பான். எல்லாருக்கும் முன்னு கரண்டி கத்தி வைக்கிறமாதிரி எனக்கு வைக்க மாட்டான். கையிலே துண்ணுட்டும்னு விட்டுப்பிடுவான். பிளேட்டை மேசை விளிம்பிலே வைச்சு எதிரே தள்ளி விடுவான். நாலணு, எட்டணு 'டிப்' கொடுத்தாலும் அதை ரொம்ப அலட்சியமா இடது கையாலே எடுத்து ஜோபியிலே போட்டுக் கொண்டு போவான். இதுக்கெல்லாம் சேர்த்து



''உங்க அப்பாவுக்குத் தாராள மனசுடா! நீ விளையாடறதுக்கு டிரான்ஸிஸ்டர் ரேடியோ வாங்கிக் கொடுத்திருக்கிறாரே!''

இவனை இன்னு பண்ணி முட்டியை உடைக்கலாம்னு யோசிச்சேன். கடைசியிலே ஒரு நாள் திடீர்னு ஒரு யோசனை தோணிச்சு. எழுந்திருச்சேன். நேரே கேஷ் கவுண்டர்கிட்டே போய்ப் பதினைஞ்சு பைசாவை எறிஞ்சுட்டுப் 'போனை' எடுத்து ஏதோ கைக்கு வந்த ஒரு நம்பரை 'ரிங்' பண்ணிட்டு, 'ஹலோ!... ஆமாம்..... நான்தான் பேசறேன்...... தங்கச்சி சூட்டிங்குக்குப் போயிடுச்சா?.... ஆங்!... அவுட்டோரா? ஏனய்யா அந்தக் கம்பெனிக்காரனுக்குக் கால்ஷீட் கொடுத்தே? தங்கச்சியை மேக்கப் கலைச்சுட்டு வந்து பேசாம படுத்து ரெஸ்ட் எடுக்கச் சொல்லு! மத்ததையெல்லாம் நான் கவனிச்சுக்கறேன்' — அப்படீன்னு கொஞ்சம் உரக்கவே பேசிப் போனை 'டக்'குன்னு வைச்சுட்டுத் திரும்பினேன். இதையெல்லாம் கேட்டுக்கிட்டிருந்த இந்தப் பயல் அப்படியே கிர்ரடிச்சுப் போயிட்டான். 'சார், நீங்க யாரு சார்'ருன்னு வாயெல்லாம் பல்லாகக் கேட்டான். 'அடங்க, இஸ்கி! இவனோ நானா நான் யாருன்னு உனக்குத் தெரியாதா? ஏ ஸ்டார் ரம்பாதேவி இல்லே, அத்தோட அக்கா புருசனுடைய மச்சான் மவன். இப்ப நான்தான் அதுக்குப் பர்சனல் செக்ரட்டரி' — அப்படீன்னு விட்டேன் ஒரு டூமீல்! அதோடுகூட ஓர் ஆப்பிள் ஜூஸுக்கும், தக்காளி சூப்புக்கும்

ஆர்டர் கொடுத்தேன்! அதுக்கப்புறம் பயலைப் பார்க்கணுமே; நான் வரும் போது ஒரு சலூட், போவும்போது ஒரு சலூட் அடிக்க மறக்கமாட்டேங்கிறான்! இப்பவெல்லாம் சமூஸா டீ சாப்பிட வந்தாக்கூட ரெண்டு மூணு கத்தி கரண்டி முள்ளுகளைக் கொண்டாந்து பரப்பி வைச்சுடறான்!'' என்று சொல்லி விட்டுக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான்.

ஆனால் சபேசனோ இதையெல்லாம் கேட்டுச் சிரிக்கவில்லை; தன்னை மீறிய வியப்புடனும் பயபக்தியுடனும் அவனைப் பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தான் அவன்.

உணவு வகைகள் வந்தன. தனக்குரியதைச் சபேசனிடமே நகர்த்தி வைத்து விட்டு, அவன் பசியாவலோடு சாப்பிடுவதைப் பாசப் பரிவுடன் பார்த்துக்கொண்டே சட்டை ஜேபியிலிருந்து சிகரெட் கேஸை எடுத்த நச்சி, அத்துடன் ஒற்றை ரூபாய் நோட்டுக்கள் மூன்று மடிந்து வந்ததைப் பார்த்து அவற்றைப் பிரித்துக் காட்டியவாறு, ''இங்கே பாரு, தம்பி! நீ படிச்சவன்; கார்ப்பொரேசன் ஆபீஸிலே ஏதோ எழுதிச் சம்பாரிச்சுடுவேன்னு போனே, வெறுங் கையோடு வந்துட்டே! ஆனால் அந்த நேரத்திலே நான் என்ன பண்ணினேன் தெரியுமா? என்கிட்டே எட்டணா சில்லறைதான் இருந்துச்சு. இன்னைய பொழுது செலவுக்கு இன்னடா பண்றதுன்னு யோசிச்சேன். நேரே சென்ட்ரல் ஸ்டேசனுக்குப் போனேன். அப்போதான் பெங்களூர் போற எக்ஸ்பிரஸ் வண்டி 'ஷண்டிங்' ஆயிக்கிட்டு இருந்துச்சு. ஒரு பொட்டியிலே ஏறிச் சீட்டிலே நீட்டா துணியை விரிச்சுப் போட்டுப் படுத்துக்கிட்டேன். இதுக்கு நம்ப தோஸ்துகள் ரொம்பப் பேர் போட்டி: எல்லாரையும் பிளேடு கத்தியைக் காட்டி 'அசால்ட்' பண்ணி விரட்டிப்பிட்டேன். வண்டி பிளாட்பாரத்துக்கு வந்துச்சு. ஏராளமா பொட்டி படுக்கை பொண்டாட்டி புள்ளைகுட்டிகளோடு ஓடியாந்தான் ஒரு சித்திக்காரன். அவன்கிட்டே பேரம் பேசி மூணு ரூபா கயிட்டிக்கிட்டு அந்தச் சீட்டை அவனுக்குக் கொடுத்துப்பிட்டுவந்துட்டேன். என் பொழைப்பே இப்படித்தான். ஆனால் இதே பொழைப்பு இல்லே. நாளைக்கு வேற எதனாச்சும் 'சம்மர் சால்ட்' அடிச்சுப் பணம் பண்ணப் பார்ப்பேன். எதுக்கு இதைச் சொல்றேன்னா, இந்தக் கயிலாத்து உலகத்திலே நாம் காலம் தள்ளணும்; அதுக்கு எந்த வேலை செய்யறதுக்கும் 'ஜகா' வாங்கக் கூடாது. பணம் சம்பாரிக்கிறதிலே மானம், மரியாதி, பேஜாரு எதையும் பார்க்கப்படாது. எதுவாயிருந்தாலும் பூந்து விளையாடிப்பிடணும். நம்மைப் பொறுத்தவரை ஒருநாள் நமக்கு வீணாவக்கூடாது. ஜாலி பண்ணணும். அதுதான் நம்ப பாலிஸி!'' என்று கூறி உதட்டை மடித்து விசுக்கெனக் காற்றை உள்ளுக் கிழுத்து ஒரு 'ஹம்மிங்' சிரிப்புச் சிரித்துவிட்டு வெகு அவசரமாகச் சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான்.

அவன் சொன்னதை யெல்லாம் ஏதோ ஒரு புதிய வேதத்தைப் படித்துக் கேட்பவன்போல் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் சபேசன். தன்னை நோக்கித் தான் இது வரை கண்டறியாத ஒரு புது உலகம் நெருங்கி வருவது போலவும், அதனுள் நுழைந்து நடமாடத் தான் இப்போது தயாராகிக் கொண்டிருப்பது போலவுமான பிரமை ஏற்பட்டது அவனுக்கு. அந்தப் பிரமை அவனது உள்ளத்திலும் உடலிலும் ஒரு புதுத் தெம்பையும், தைரியத்தையும் ஊட்டுவது போலவும் இருந்தது.

நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து ஆனந்தமாகச் சிகரெட் குடித்துக் கொண்டிருந்த நச்சி, தன் முகத்துக்கு எதிரே சுருள் சுருளாகச் சுழன்றுகொண்டிருந்த புகையை இடது கையால் அடித்துக் கலைத்தவாறு, ''இன்னைக்கு என்ன கிழமை?... திங்கக் கிழமையா? ஆமாம்; வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள்!.... ஓ,... ஊட்டுக்குப் போய் நாலு நாள் ஆவுதா?.... அப்போ இன்னைக்குக் கண்டிப்பா தலையைக் காட்டிவிட்டு வரணும்!'' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். பிறகு ஜேபியைத் தொட்டுத் தட்டிப் பார்த்து விட்டு, ''அய்ங்!... அப்படிப் போறதுன்னா ரெண்டு மூணு ரூபாயாவது வேணுமே! அதுக்கு இன்னா பண்றது?'' என்றான் ஒருகோணல்சிரிப்புடன்.

வெந்நீர் பேஸினில் கை வாய் அலம்பிக் கொண்டு தன் சட்டையைத் தூக்கித் துடைக்கப் போன சபேசன் சட்டென்று அதை விட்டுவிட்டு, மேசை விளிம்பில் மடித்து வைக்கப்பட்டிருந்த 'நப்கினை' எடுத்துத் துடைத்தவாறு அவனைத் திரும்பிப் பார்த்தான்.

''ஒன்னுமில்லை, தம்பி! ஊட்டு ஞாபகம் வந்துச்சு; அதுதான் என்னமோ பிணாத்தினேன்'' என்று சிரித்த நச்சி, முகத்தை 'உர்'ரென்று வைத்துக்

கொண்டு ஏதோ யோசித்தான். பிறகு கண்களைச் சுருக்கியபடி கரகரத்த குரலில் சொன்னான்: ''ஆமாம், பிரதர்! வாரத்துக்கு ஒண்ணு ரெண்டு தபா தான் நான் ஊட்டுக்குப் போறது வழக்கம். அதுகூடப் போவமாட்டேன்; அங்கே எனக்கு ஒரு கால்கட்டு இருக்குது. இல்லேன்னு இன்னும் ரொம்ப ஜாலியாயிருப்பேன்.''

சபேசன் அவனை வியப்புடன் பார்த்தான். 'கால் கட்டு' என்று அவன் சொன்னதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. 'ஒருகால் நச்சி கல்யாண மானவனாயிருப்பானோ?' — இந்த விஷயமாக அவனிடம் பேசச் சபேசனுக்கு அச்சமாக இருந்தது. ஏற்கனவே அவன் தன்னைப்பற்றிச் சொன்ன ஒவ்வொரு விஷயமும் ஏதோ கசப்பு மாத்திரையை விழுங்குவதுபோல் இருந்ததால், இதை வேறு கேட்டு மனத்தை விகார மிரட்சியுறச் செய்துகொள்ள வேண்டாமே என்று மௌனமாயிருந்து விட்டான்.

அவர்கள் இருவரும் ஹோட்டலை விட்டு வெளியே வந்து ஜெனரல் ஆஸ்பத்திரி பக்கமாக நடந்தனர்.

''இன்னு பிரதர், பலான மீட்டிங்குக்குப் போவலாமா?'' என்று கேட்டுக் கொண்டே ஒன்றும் நம்பர் பஸ்ஸில் ஏறி விட்டான் நச்சி. 'பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் பனைமரம் ஏற அஞ்சலாமா?'-சபேசனும் ஏறிக்கொண்டான்.

அந்தப் பஸ்ஸில் நச்சிக்கு ஓர் எதிர்பாராத சந்திப்பு ஏற்பட்டது.

''அடடே! நச்சியா? இப்போ உன்னைத் தேடிக்கிட்டுத்தான் உன் வீட்டுக்கு அர்ஜண்டா போறேன்.''

''வணக்கம், சார்!.... இன்னு அப்படி அர்ஜண்ட்?''

''இப்படி வந்து உட்காருடா, சொல்றேன்.''

''இருக்கட்டும், மச்சான்! சும்மா சொல்லு!''

''பார்த்தியா, இடத்தைக் கவனிக்காம பேச ஆரம்பிச்சுட்டியே?....''

''கோபிச்சுக்காதிங்க, சார்! சும்மா வாயிலே வந்துடுச்சு. விஷயத்தைச் சொல்லுங்க.''

''நீ பெரிய ஆளாச்சே!.... அது சரி; இண்ணைக்குப் பீச்சிலே மீட்டிங், உனக்குத் தெரியுமா?''

''பலானவர் பேசறார் இல்லே? இப்போ அதுக்குத்தான் போய்க்கிட்டு இருக்கிறேன்.''

''சிங்கக் குட்டிடா, நீ!''

''சும்மா சத்தாய்க்காதே, மச்சான்.''



என்ன! ஒரு சின்ன எவர்சில்வர் ஸ்பூன் வாங்க, இருபத்தஞ்சு ரூபாயா வேணும்?''

''நான் சீதா, தேவகி, ருக்கு, பாப்பா, பத்மா, ஜானகி, சந்திரா, கலா, வைதேகி உஷா. இத்தனை பேருமாக எக்ஸிபிஷனுக்குப் போய் அங்கே செலக்ட்பண்ணி வாங்கணும்!''

''பார்த்தியா, பார்த்தியா, ஆரம்பிச்சுட்டியே?....''

''விஷயத்தைச் சொல்லுங்க, சார்!''

''பஸ் நிற்கட்டும்; சொல்றேன்.''

''நல்ல சமாசாரம்தானே?''

''உனக்கும் எனக்கும் லாபகரமான விஷயம்தான்.''

திருவல்லிக்கேணி கடற்கரைச் சாலையில் பஸ் நின்றது. அன்று காலை மாநகராட்சி மன்றத்துக்கு டாக்சியில் வந்து அமர்க்களமாக இறங்கிப் போன அந்த மப்ளர்காரர், நச்சியின் தோள் மேல் கையைப் போட்டவாறு பஸ்ஸை விட்டு இறங்கினார். அவர்களிருவரும் கடற்கரையில் கூட்டம் நடக்கவிருந்த இடத்தை நோக்கி வெகு சுவாரசியமாகப் பேசிச் சிரித்துக் கொண்டு நடந்தனர். தன்னுடன் சபேசனும் வருகிறான் என்ற நினைப்பே இல்லாதவன் மாதிரி சென்றான் நச்சி.

சபேசனோ அவர்களுக்குப் பின்னால் தயங்கித் தயங்கி நடந்தான்.

நீலக்கடலையும் சென்னைத் துறைமுகத்தையும் பார்த்தபோது, பர்மா அகதிகளோடு அகதிகளாகத்தான் அன்று சென்னைத் துறைமுகத்தில் வந்து இறங்கியதும், அகதிகளோடு அகதிகளாக நின்றபோது நச்சியைக் காணக் கிடைத்த அந்த எதிர்பாராத நிகழ்ச்சியும் மனத்தில் எழுந்தன. (தொடரும்)



ஏப்ரல் முட்டாள் !

ஏப்ரல் முட்டாள் என்னும் இந்த இந்திப் படத்திலே ஒரு பாட்டு. 'ஏப்ரல் முட்டாளாக்கினோம். அவருக்குக் கோபம் வந்தது. இதில் என் தவறென்ன? உலகத்தின் தவறு, இப்படி ஒரு பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளது' என்று.

படம் எடுத்தவர்கள் உண்மையை அப்பட்டமாக ஒப்புக்

சர்வர் சுந்தரம்

அழகில்லாத ஒருவன் தாழ்வு மனப்பான்மைக்குள்ளாகித் தன்னையும் ஒரு பெண் காதலிப்பாளா என்று ஏங்குகிறான். ஒரு பணக்காரப் பெண் அவனை மதித்து அன்பாய்ப் பழகுகிறாள். அந்த அன்பை அவன் தப்பாய்ப் புரிந்து கொண்டு அவளது அந்தஸ்துக்கு ஏற்பத் தன்னை வளர்க்கச் சிரமப்பட்டுப் பெரிய நடிகனாகிறான். கடைசியில் அவள் தன்னைக் காதலிக்கவில்லை என்பதை அறிந்து மனம் உடைந்து, பிறகு மனம் தேறிப் பழைய தொழிலையே மேற்கொள்ளுகிறான்.

சிரிப்பும், ஏமாற்றமும் நிறைந்த கதையில் சோகம் வேண்டுமென்பதற்காக, சர்வர் சுந்தரத்தின் தாயாரை மாடிப் படியில் உருண்டு விழச் செய்து கொன்றிருக்கிறார் கதாசிரியர்! அதற்காக நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

நாகேஷைவிட வேறு யாரும் ''சர்வர் சுந்தர''மாகப் பொருத்தமாக நடித்துவிட முடியாது என்பதைப் படத்தைப் பார்ப்பவர்கள் நிச்சயமாக ஒப்புக் கொள்ளுவார்கள். நகைச் சுவையைச் சிறிதும் சிரமப்படாமல் இயல்பாகவே கையாண்டு சிரிக்க வைக்கும் நாகேஷினால் கண்ணீரைச் சிந்தி எல்லோருடைய உள்ளத்தையும் நெகிழச் செய்யவும் முடிவது பெரிய சாதனைதான். சர்வர் சுந்தரம், நடிகர் சுந்தரமாக மாறிப் படப்பிடிப்பில் கலந்துகொள்ளும் காட்சியில் மனோரமாவுடன் நாகேஷ் அடிக்கும் கூத்து பிரமாதம்.

கே. ஆர். விஜயாவின் நடிப்பு வெறும் நடிப்பாகவே போய் விடுகிறது. ஆனால் அவர் சிரமப்பட்டிருக்கிறார். தோழிகளுடன் மாமல்லபுரத்தில் அவர் ஆடிப் பாடிக் குதிப்பதைத் தமாஷாக எண்ணித் தள்ளி விடலாம்! ஆனால் நிறைய நேரத்தை விழுங்கி விடுகிறதே! அதை எப்படி மன்னிப்பது?

திரைக் கதையில் நிறைய நகைச்சுவையும், சோகமும் ததும்பி நிற்கும்போது தேனுக்குச் சுவையூட்டுவதுபோல் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசார நாடகம் தேவையா?



எங்க வீட்டுப் பிள்ளை

தியேட்டர் முன்னணி ரசிகர்களில் இருவர் பேசிக் கொண்டனர்: ''என்ன அண்ணே! நம்ம எம். ஜி. ஆர். அண்ணன் நம்பியார்கிட்டே அடியும், உதையும், குத்தும் வாங்கிக் கட்டிக்கிறாரு! பரிதாபமாக இருக்கே!''

''கவலைப்படாதே தம்பி! அவரு சாதுப் பிள்ளை ராமு. முரட்டுப் பிள்ளை இளங்கோவாக வந்து இதை வட்டியும் முதலுமாக அவருக்குச் சேர்த்துக் கொடுத்துடுவாரு!''

அந்த ரசிகர் சொன்னது சொன்னபடி நிகழ்ந்தது! ஆள் மாறாட்டம், இரட்டைக் குழந்தைக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட 'எங்கள் வீட்டுப் பிள்ளை'யில் அடி, குத்து, உதைக்குப் பஞ்சமில்லை. எம். ஜி. ஆர். முரடன் இளங்கோவாக நடித்ததில் அதிசயம் ஒன்றுமில்லை. ஆனால் அவர் சாதுப் பிள்ளை ராமுவாக, அடியும் உதையும் பட்டு வேதனைப்படும் தருணத்திலும், பெண் பார்க்கும் படலத்திலும் நடிப்பு மெச்சும்படியாக இருந்தது. அவரது நடிப்புக்குக் குழந்தை ஷீலா மெருகூட்டுகிறாள்.

கண்ணுக்குக் குளிர்ச்சியான வர்ணக் கலரில் எடுக்கப்பட்டுள்ள 'எங்க வீட்டுப் பிள்ளை'யில் எம். ஜி. ஆர். - சரோஜா தேவியின் வழக்கமான காதல் கட்டமும் காமிராக்காரர்கள் வின்சென்ட் — சுந்தரம் கைவண்ணத்தால் அழகு பெற்றுள்ளது.

தங்கவேலு — நாகேஷ் ஹாஸ்யத்தில் புதுமை ஒன்றும் இல்லை. அதிகமாக ஆடிக் குலுங்கும் புது முகம் ரத்னாவுக்கு விரைவில் நட்சத்திர பதவியை அடைந்துவிட வேண்டும் என்ற ஆசைத் துடிப்பு இருக்கிறது. எம். ஜி. ஆரின் சாதுப் பிள்ளை நடிப்புக்காகவும், அழகிய வர்ணப் படப் பிடிப்புக்காகவும் 'எங்க வீட்டுப் பிள்ளை'யைப் பார்க்கலாம்.





வளம் பெறும் நாடு



இரவு பத்து மணி: வாயிற் கதவைக் குரல் கொடுத்துத் தட்டிய போது குழந்தைகள் பேசிய வார்த்தைகள் தெளிவாகவே கேட்டன.

"அப்பா சினிமாப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார் போலிருக்கிறது!"

சட்டையைக் கழற்றிக் கொண்டே "நான் சினிமாவுக்குப் போய் வரவில்லை. பெடரல் ரிபப்ளிக் ஆப் ஜெர்மனி என்று குறிப்பிடப்படும் மேற்கு ஜெர்மனி நாட்டுக்குப் போய் விட்டு வருகிறேன்" என்றேன்.

அவர்களுக்குப் புரியவில்லை. பதில் பேசவில்லை. என்னைப் பார்த்தார்கள்.

"சாயங்காலம் டிபன் சாப்பிட்டுவிட்டு வெளிக் கிளம்பினேனல்லவா? எதிர்பாராமல் மேற்கு ஜெர்மனிக்குப் போய்த் திரும்ப வாய்ப்புக் கிட்டியது. இதோ சாப்பிட வந்துவிட்டேன்" என்று உட்கார்ந்தேன்.


நான் சொன்னது அத்தனையும் உண்மை என்று எனக்குத் தெரியும். சென்னையிலிருந்தவாறே என்னை மேற்கு ஜெர்மனிக்கு அழைத்துக் கொண்டு போய்த் திருப்பி ஒரு மாலைப் பொழுதுக்குள் அனுப்பிய பெருமை நண்பர் ராமாநுஜத்தையே சாரும்.

புது தில்லியிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கிலத் தினசரியான 'ஹிந்துஸ்தான் டைம்ஸி'ன் சென்னைப் பிரதிநிதியும் பிரத்தியேக நிருபருமான திரு கே. எஸ். ராமாநுஜம் சுமார் பதினெட்டு வார காலம் உலகம் முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இப்போதுதான் சென்னை திரும்பியிருக்கிறார். அவருடைய பிரயாண காலத்தின் முதல் மூன்று வாரங்கள் மேற்கு ஜெர்மனியில் கழிந்தன. பத்திரிகைக்காரரல்லவா? தாம் விழிப்புடன் செலவழித்த ஒவ்வொரு நிமிடத்திலும் தாம் கண்டது கேட்டது பற்றி வண்டி வண்டியாகக் குறிப்புக்களை அவ்வப்போது குறித்துக் கொண்டு வந்திருக்கிறார். ஆகவே அவர், "கல்கத்தா டம் டம் விமான நிலையத்திலிருந்து கிளம்பி ஃப்ராங்பர்ட் விமான நிலையத்தில் பதினாறு மணி நேரப் பிரயாணத்துக்குப் பிறகு இறங்கியதும்..." என்று ஆரம்பித்ததுமே நானும் கூடவே மானசீகமாக அங்கே போய் இறங்கினேன்.

ஃப்ராங்பர்ட்டிலிருந்து ஹாம்பர்க் நகரம் வடக்காக முந்நூறு மைல்கள். ஒரு மணி நேர விமானப் பிரயாணம். பிரும்மாண்டமான எல்பே நதிக்கரையில் அமைந்துள்ள இந்த ஹாம்பர்க் நகரம் ஒரு தனி மாகாண அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. கடந்த இரண்டாவது உலக யுத்தத்தில் முற்றிலும் நிர்மூலமாக்கப்பட்ட இந்த நகரை அசுர வேகத்தில் அபூர்வமாகப் புதுப்பித்துவிட்டார்கள். இந்த நாட்டின் அதிகபட்ச கடல் வழி வியாபாரம் ஹாம்பர்க் துறைமுகத்தின் வழியாகத்தான் நடக்கிறது.

இந்த நகரவாசிகளுக்குப் புஷ்பங்கள் மீது அலாதிப் பிரியம். முப்பது ரகங்களுக்கு மேலான பூக்களை விற்கும் கடைகள் இங்கு ஆயிரத்துக்கு மேலும் உண்டு. அவைகளில் பத்துப் பதினைந்து கடைகளில் தினசரி வியாபாரம் இரண்டாயிரம் மார்க்குகளை (சுமார் இரண்டாயிரத்து நானூறு ரூபாய். ஒரு மார்க் ஒரு ரூபாய் இருபது பைசாவுக்குச் சமம்) எட்டுகிறதாம்.

ரஸ்தாப் போக்குவரத்தைச் சீர்செய்யும் வகையில் மேற்கு ஜெர்மனி தீவிர அக்கறை காட்டுகிறது. கார்கள் போக்குவரத்து




அதிகம். சராசரி எண்பது மைல் வேகத்தில் தடங்கல் இல்லாமல் ஓடும் கார்களுக்காகப் பாதைகளில் வரையறை செய்து வைத்திருக்கிறார்கள். மோட்டார் ஓட்டிகளின் சொர்க்கம் என்றுகூட இந்தப் பாதைகளைச் சொல்லலாம்.

யார் வேண்டுமானாலும் தங்கள் சொந்தக் கார்களை டாக்ஸியாக மாற்றி ஓட்டலாம். அதற்காக விசேஷக் கட்டணம் செலுத்தித் தனி லைசென்ஸ் பெற வேண்டியதில்லை. டாக்ஸி ஓட்டுவதைச் சமூக சேவையாகவே நினைக்கிறார்கள். மீட்டர் பொருத்தி டாக்ஸியாக மாற்றின தேதியிலிருந்து வருட முடிவு வரையிலான வரும்படியைக் கணக்கிட்டு வருமான வரியை மாத்திரம் தனியாகச் செலுத்திவிட வேண்டும். மற்றப்படி எல்லாக் கார்களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு வரியாக நூற்றி எண்பது மார்க்குகளும் இன்ஷியூரன்ஸுக்காக நூற்றி எண்பது மார்க்கும் வசூலிக்கிறார்கள். டாக்ஸி ஓட்டியாகப் பணியாற்றுபவருக்குத் தினசரி வசூலில் இருபது சதவிகிதம் கொடுக்கிறார் கார் சொந்தக்காரர். டாக்ஸி டிரைவர்கள் எல்லோருமே ரசீதுப் புத்தகங்கள் வைத்திருக்கிறார்கள். பிரயாணிகள் இறங்கும்போது உரிய கட்டணத்தை வாங்கிக் கொண்டு ரசீதும் கொடுத்து விடுகிறார்கள்.

டாக்ஸிகள் ஒவ்வொன்றிலும் ஒலிபரப்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. டாக்ஸிகளின் 'மத்திய கண்ட்ரோல்' ஸ்தாபனத்துக்கு டெலிபோன் செய்ததும் அங்கிருப்பவர்கள் அந்தப் பிரதேசத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் டாக்ஸியுடன் ரேடியோ தொடர்பு கொண்டு அந்த ஹோட்டல் வாயிலுக்கு அனுப்பி வைக்கிறார்கள். இதனால் காத்திருக்கும் நேரம் மிச்சமாகிறது. எந்த டாக்ஸியுமே இரண்டு வருடங்களுக்கு மேல் தொடர்ந்து ஓட்டப்படுவதில்லை. எல்லாம் புதிது! எல்லாம் மெர்ஸிடிஸ் பென்ஸ் ரகம்!

ஹோட்டல் வாசம் செலவு மிகுந்ததாக இருந்தாலும் வசதிகள் நிறைந்தது. சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்கு 'பென்ஸான் ஹோம்ஸ்' என்ற விடுதிகள் இருக்கின்றன. அங்கு ஒரு நாளைக்கு ஐந்திலிருந்து பத்து மார்க்குகள் வரை ஆகிறது.

சலவை செய்பவர்களின் பொறுப்புணர்ச்சி இந்த நாட்டில் பாராட்டப்பட வேண்டிய அம்சம். நான்கு மணிக்கு வெளுத்த உடை வரும்



என்று சொல்லிப் போனால் மூன்று ஐம்பத்து ஐந்துக்கே தயாராக வந்துவிடுவார்கள்.

தொலைபேசியில் பேசுபவர்களுக்கு அங்கு மற்றோர் ஆச்சரியமான அனுபவமும் கிட்டுகிறது. மறுமுனை கிடைக்காமல் இருந்தால் நம் நாட்டில் ஏற்படுவது போல் 'லொய் லொய்' என்ற 'எங்கேஜ்டு' ஒலி கேட்பதில்லை. அதற்குப் பதில் 'தயவு செய்து கொஞ்சம் பொறுங்கள்' என்ற இதமான ஒலி பிரத்தியேகமாகப் பொருத்தப்பட்ட 'ரிக்கார்டி' லிருந்து வருகிறது.

டெலிபோன், தந்தி போக்குவரத்துக்கள் எவ்வளவு வேகமாக இயங்குகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளத் திரு ராமானுஜத்துக்குக் கிடைத்த ஓர் அனுபவமே சான்று.

அவர் மேற்கு ஜெர்மனியிலிருந்தபோது இங்கு அவர் உறவினர் ஒருவருக்குக் குழந்தை பிறந்திருப்பதாகத் தகவல் வந்தது. திரு ராமானுஜமும் கேபிள் மூலம் தம் மகிழ்ச்சியை வாழ்த்தாகத் தெரிவித்துக் கொள்ள நினைத்தார். முதலில் அந்தச் செய்தியை அனுப்ப எவ்வளவு கட்டணம் ஆகும் என்று தெரிந்து கொள்ள விரும்பினார்.

'புதுக் குழந்தைக்குப் பத்து லட்சம் முத்தங்கள்' என்று எழுதி ஹோட்டலில் உள்ள

டெலிபோன் கிளார்க்கிடம் கொடுத்தார். அந்த அம்மையார் டெலிபோனில் ஏதோ விசாரித்து விட்டு ''இருபத்திரண்டு மார்க்குகள் கட்டணம்'' என்றார்.

''ஹா! அத்தனை கட்டணமா! தபாலிலேயே வாழ்த்தை அனுப்புகிறேன்'' என்று திரும்பினார். இந்த அந்நியச் செலாவணி நெருக்கடி காலத்தில் வெளிநாடுகளில் செலாவணியைத் திட்டமிட்டு நடத்தியாக வேண்டுமே!

''அதெப்படி முடியும்? நீங்கள் என்னிடம் அந்தச் செய்தியைக் காண்பித்தவுடனேயே அதைத் தலைமை நிலையத்துக்கு 'கேபிளாக' அனுப்பிவிட்டேனே!'' என்றாளாம் டெலிபோன் கிளார்க்.

அங்கிருந்தவரை இந்தச் செய்தி தெரிந்த திரு ராமானுஜத்தின் நண்பர்கள் அடிக்கடி ''பத்து லட்சம் முத்தங்களை எத்தனையோ மலிவாக இருபத்திரண்டே மார்க்குகளுக்கு அனுப்பிவிட்டுப் பணம் செலவானதைப் பற்றிக் கவலைப்படுகிறாரே!'' என்பார்களாம்.

பான் நகரில் மேற்கு ஜெர்மனி ஜனாதிபதி லூப்கே அவர்களுக்கு, காலம் சென்ற பாரதப் பிரதமர் ஜவாஹர்லாலின் கையெழுத்திட்ட படங்களைத் திரு ராமானுஜம் அன்பளிப்பாக அளித்தார்.

பான் நகரிலிருந்து கோலோன் நகருக்குச் சென்றார். கோலோன் நகர் யூடி — கொலோனுக்குப் பெயர் போனது. ஐரோப்பிய நாடுகளிலேயே மிகுந்த கவர்ச்சிகரமான கடைத்தெருக்களைத் திரு ராமானுஜம் அங்குதான் பார்த்தார். அத்தனை சாமான்களுக்கும் விலைச் சீட்டுக்கள் ஒட்டி விருக்கிறார்கள். பேரம் பேச இடமே இல்லை. கடைகளிலும் வியாபார ஸ்தாபனங்களிலும் தொழிற்சாலைகளிலும் பெண்கள் மிகுந்த அளவு பணி புரிகிறார்கள்.

கோலோன் நகரில்தான் 'வாய்ஸ் ஆப் ஜெர்மனி' என்று அழைக்கப்படும் மேற்கு ஜெர்மனியின் வானொலி நிறுவனம் இயங்குகிறது. அங்கு திரு ராமானுஜம் பேச அழைக்கப்பட்டார். பத்து நிமிடப் பேச்சுக்குச் சுமார் இருநூற்றி ஐம்பது மார்க்குகள் கொடுத்தார்களாம்.

வாக்ஸ் வாகன்வொர்க் என்னுமிடத்திலிருக்கும் மோட்டார் தயாரிப்பு ஸ்தாபனம் திரு ராமானுஜத்தை வியப்புக்கும் பிரமிப்புக்கும் ஆளாக்கி விட்டது. ஒன்று இரண்டு மூன்று... என்று பதினொன்று சொல்லி முடிக்கும் நேரத்தில் முழுமையாகத் தயாரான ஒரு கார் வெளியே வருகிறது என்றால் வியப்பாக இராதா?

எண்பத்தி மூவாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்யும் இந்த ஸ்தாபனம் தினசரி சுமார் ஐயாயிரத்து நானூறு மோட்டார் கார்களைத் தயாரிக்கிறது. 1960 வரை சர்க்கார் நிறுவனமாக இருந்த தொழிற்சாலை தனியார் கார்ப்பரேஷனாக மாறித் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், போர்டு டைரக்டர்கள் முதலியோரால் நிர்வகிக்கப்படுகிறது. 1963ல் தயாரான பன்னிரண்டு லட்சம் கார்களில் அறுபது சத விகிதம் ஏற்றுமதி செய்யப்பட்டன. மூன்று மாத காலத்துக்கு ஒரு முறை தொழிலாளர்களிடமிருந்து வளர்ச்சிக்கான யோசனைகள் கோரப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட யோசனைகளுக்கு லட்சம் மார்க்குகள் வரை அன்பளிப்பாகக் கொடுக்கிறார்கள்.

மேற்கு பெர்லின் நகருக்கும் திரு ராமானுஜம் சென்றிருந்தார். மேற்கு பெர்லினில் வாழும் மக்களுக்கும், வளரும் தொழில்களுக்கும் ஊக்கமளிக்கக் கணிசமான வரிச் சலுகைகள் அளித்திருக்கிறார்கள்.

பெர்லின் சர்வகலாசாலை மாணவர்களிடையே திரு ராமானுஜம், 'ஜனாதிபதிகள்-அரசியல் அமைப்புகள்' என்ற தலைப்பில் பேசினார். அப்போது மேற்கு ஜெர்மனியில் ஜனாதிபதி தேர்தல் நடக்கும் சமயம். அவர் முப்பத்தி ஐந்து நிமிட காலம்தான் பேசினார். மாணவர்கள் புத்திசாலித்தனமாக எண்பது நிமிட அவகாசம் வரையில் அவரைக் கேள்விகள் கேட்டுப் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டார்களாம்.

கிழக்கு பெர்லினுக்கும் சில மணி நேரம் அனுமதி பெற்றுப் போய்த் திரும்பிய ராமானுஜம், மேற்கு பெர்லின் எத்தனைக்கெத்தனை கலகலப்பாக இருக்கிறதோ அத்தனைக்கத்தனை கிழக்குப் பெர்லின் தூங்கி வழிவதைக் கண்டார். அதீத கண்காணிப்பும் அதிகாரமுமே காரணமாம்.

பொதுவாக மேற்கு ஜெர்மானியர்கள் சங்கீதத்தில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். பல பெரிய 'ஆப்பரா' நிறுவனங்கள் அநேகமாகச் சர்க்கார் மானியம் பெற்றுக் கச்சேரிகள் நடத்துகின்றன.

ஹாம்பர்க் நகரில் உள்ள ஒரு பெரிய நீரூற்றுக் குளத்தில் இசைக்கு ஏற்றவாறு பல வண்ண ஒளிகளில் நீரூற்றுக்கள் பொங்கி எழுகின்றனவாம்.

இரண்டு பெரிய யுத்தங்களினால் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மேற்கு ஜெர்மானியர்கள் அமைதியையும் சீரான வாழ்க்கையையும் விரும்புகிறார்கள். கடந்த பத்தொன்பது ஆண்டுகளில் தொழில் வளத்தில் எத்தனையோ முன்னேற்றமும் அவர்கள் கண்டுவிட்டார்கள்.

'பில்ட்' (Bild) என்ற தினசரிப் பத்திரிகை எட்டு நகரங்களிலிருந்து ஒரே சமயத்தில் வெளியாகின்றது. மொத்தத்தில் நாற்பது லட்சம் பிரதிகள் செலவாகின்றனவாம்.

சர்க்கார் ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது அறுபத்தி ஐந்து. பென்ஷன் எண்பது சத விகிதம் வரை கொடுக்கிறார்கள். ஓய்வுபெற்ற பின்னரும் அவர்கள் வாழ்க்கைத் தரம் குன்றாமலிருக்க வேண்டும் என்று சர்க்கார் கவலைப்படுகிறது.

''இருபத்திமூன்று நாட்கள் மேற்கு ஜெர்மனியில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு நான் இங்கிலாந்துக்குக் கிளம்பினேன்'' என்று நிறுத்தினார் திரு ராமானுஜம்.

''இப்போதைக்கு நான் இங்கிருந்து வீட்டுக்குக் கிளம்புகிறேன். நீங்கள் இங்கிலாந்து, பாரீஸ், ஸ்விட்சர்லாந்து, அமெரிக்கா, கானடா போய்விட்டு, ஹவாய், ஹானலுலுவுக்கு வாருங்கள்; அங்கு உங்களைச் சந்திக்க முயற்சி செய்கிறேன்!'' என்று விடைபெற்றுக் கிளம்பினேன். — **திருமூலர்**

கயல்விழி

அகிலன்



அந்த ரதங்களில் அறவோர், புலவர், பாணர், சிற்பியர் இங்ஙனம் பல்வகைக் கலைஞர்களும் தங்கள் தங்கள் கருவிகளுடன் சென்றனர். கலைப் பெண்டிரும், பணிப் பெண்டிரும்கொண்ட ரதங்களும் அவற்றிடையே இருந்தன. அந்த அணியில் முதலாகச் சென்ற ரதத்தில் ஆதிச்சதேவர் கயல்விழியோடும் உய்யவந்தாளோடும் காணப்பட்டார்.

கோப்பெருந்தேவிக்கு இது புதுமையான காட்சி. புலவர்களும் கலைஞர்களும் வெற்றிக்குப் பின்னரே பரிசில்கள் பெறுவதற்காக வந்து கூடுவார்கள்.

''அரசே! இது தங்களுக்குப் புதுமையாகத் தோன்றவில்லையா?'' என்று ரதங்களைச் சுட்டிக் காட்டினார் கோப்பெருந்தேவி. ''பாடுவோரும் ஆடுவோரும் போர்க்களங்களுக்குச் செல்வதை நான் இப்போதுதான் காணுகிறேன்!''

''புதுமைதான்!'' என்றார் பாண்டியர். ''சுந்தரபாண்டியன் கூறிய காரணங்களைக் கேட்டேன். அப்போதுதான் இது வெற்றியை நமக்கு விரைந்து தரக்கூடிய படை என்பது புலப்பட்டது.''

''என்ன! படையா?''

''ஆம், புலவர் படை; கலைஞர் படை! வீரர்களுடைய வயிற்றுப் பசி போக்கவும் அவர்களுடைய உடல் காயங்களுக்கு மருத்துவப் பணி செய்யவும்

தான் இதுவரை நாம் ஏற்பாடுகள் செய்து வந்தோம். இவர்களோ படு களத்தில் சாகஸம் புரியும் வீரர்களின் உள்ளத்துக்கு உணவு வழங்குபவர்கள். அவர்களுடைய மனத்தில் ஏற்படும் விழுப்புண்களுக்குத் நீருகவை மருந்து கொடுப்பவர்கள். மகத்தான சக்தி வாய்ந்த இந்தப் போர்க் கருவிகளை எப்படிப் பயன்படுத்துவது என்பதைக் கண்டுகொண்டான்சுந்தரபாண்டியன்!''

சுந்தரபாண்டியனின் படை கணந்தோறும், நாழிகைதோறும், நாள் தோறும் வெற்றிப் பாதையில் முன்னேறிக் கொண்டேயிருந்தது. அவனுடைய முதல் இலக்கு உறையூர், அடுத்த இலக்கு தஞ்சை, இறுதி இலக்கு கங்கை கொண்ட சோழபுரம் !

விழுப்பரையரிடம் அவன் கூறினன்: ''சோழர்களின் பழைய தலைநகரமான பூம்புகார் இப்போது பொலிவிழந்த சிற்றூராகி விட்டது. இல்லையேல் அதனையும் நம்முடைய இலக்கில் சேர்த்துக் கொண்டிருக்கலாம்.''

புன்முறுவல் பூத்தார் விழுப்பரையர். ''அவர்களுடைய முந்நாள் தலைநகரம், இடைநாள் தலைநகரம், இன்றையத் தலைநகரம் எதையுமே விட்டு வைக்கப்போவதில்லை போலும்!''

''இன்றையத் தலைநகரமே அவர்களது கடைசித் தலைநகரமாக இருக்கட்டும் ! நமது ஒரே தலைநகரத்தை அவர்கள் ஒன்பது முறையாவது தாக்கித் தகர்த்திருப்பார்கள் அல்லவா? சாம்ராஜ்ய வெறியின் ஆணிவேரை நாம் பூண்டோடு பறித்துத் துவைத்துவிட வேண்டும். சாம்ராஜ்ய வெறி பிடித்தவர்களை அருகில் விட்டு வைத்திருப்பது மற்ற நாடுகளுக்கு என்றென்றும் ஆபத்தாகும். ஆகவேதான் முதல், இடை, கடை என்று உறந்தை, தஞ்சை, கங்காபுரியை வைத்துக் கொண்டிருக்கிறோம் !''

தொலைவில் தலைநிமிர்ந்து நின்ற தாயுமானவர் குன்று உறந்தையின் இருப்பிடத்தை விழுப்பரையருக்குச் சொல்லியது. அந்தக் குன்றின் உறுதியையும் உயரத்தையும் அவர் தாம் உருவாக்கிய இளம் தலைவனின் உள்ளத்தில் கண்டு பூரித்தார்.

எல்லையில் பாசறைக் கூடாரங்கள் எழுப்பப் பெற்றன. படைத் தலைவர்களை அழைத்துக் கட்டளைகள் பிறப்பித்தான் சுந்தர பாண்டியன்: ''பெண்டிர், சிறுவர், முதியோர் இவர்களைப் பாதுகாக்கும் படை தனியே இயங்கும். அதனிடம் அவர்களை அனுப்பி விடுங்கள். குடிமக்களில் பணிந்து விடுவோருக்கு எவ்விதத்திலும் தீங்கும் செய்ய வேண்டாம். பகைவீரர்களில் எதிர்ப்போரை வீழ்த்தி விடுங்கள்; அல்லது சிறை செய்யுங்கள். — சோழ நாட்டு வீரர்களில் எவனும் புறமுதுகிட்டு ஓடினல் அவனை அதே இடத்தில் சிரமறிந்து தள்ளுங்கள்!''

கடைசியாக அவன் கூறியதைக் கேட்டுப் பழைய தலைவர்கள் அதிர்ச்சியுற்ருர்கள். மழவச் சக்கரவர்த்தி மெதுவாக எழுந்து ''இளவரசருக்கு ஒரு வேண்டுகோள்...'' என்ருர். ''புறமுதுகிட்டு ஓடுவோரைக் கொல்வது வீரமாகாது என்ற கருத்து நம்முடைய பரம்பரைக் கருத்து. அதனுல்...''- என்று தயங்கினுர்.

''புறமுதுகிட்டு ஓடுகிறவன் சோழ நாட்டானுக இருந்தாலும் பாண்டிய நாட்டானுக இருந்தாலும் அவனவன் நாட்டுக்குத் துரோகம் செய்தவனுவான். படைத் தலைவனின் கட்டளைப் படி சரணடைபவர்களை நாம் சிறைப் படுத்தலாம். ஆனுல் தலைவன் கட்டளை இல்லாமல் உயிருக்கு அஞ்சிப் புறமுதுகு காட்டும் கோழைகளை நாம் உயிர் சுமக்க விடக் கூடாது. பகைவர் மட்டுமல்ல; நம்மவர் புறமுதுகிட்டால் நம்மவரே வீழ்த்திவிட வேண்டும்! காலத்துக்கேற்றபடி நாம் நமது பரம்பரைக் கருத்துக்களை மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும். மாற்றத்தில் நியாயம் இருக்கிறது. மாற்றிக் கொள்வோம்!''

முதுமை மிக்க தலைவர்களெல்லாம் இதைக் கேட்டு இளமையின் வீறு பெற்ருர்கள்.

''இளவரசர் கூறுவது முற்றிலும் பொருத்தமானது. அவ்வாறே செய்வோம்!'' என்ருர் அவர்.

''ஆமாம்!'' என்று உரத்த குரலில் தொடர்ந்து முழங்கினுன் தலைவன். ''சோழ சாம்ராஜ்யத்துக்குச் சொந்தமான ஒரு மாட மாளிகை, ஒரு கூட கோபுரம், ஓர் ஆடரங்கு, ஒரு மணி மண்டபம், ஒரு வீடு, ஒரு சுவர், ஒரு தூண் நம்முடைய படை புகும் எந்த நகரிலும் எஞ்சியிருக்கக் கூடாது. சுடர் மழுவால் கொளுத்திவிடுங்கள்; தண்டுகளால் தகர்த்திடுங்கள்; உலக்கைகளால் பொடிப் பொடியாக்கித் தூள் பறக்க விடுங்கள்! நீங்கள் தனி மாளிகைகளையோ தனி மனிதர்களையோ அழிக்கவில்லை. நம்மைக் காலங் காலமாக அழுத்தி நசுக்கி வந்த சாம்ராஜ்யத்தை அழித்துப் போகக்கு கிறீர்கள்! — புறப்படுவோம்!''

உறந்தை மாநகரம் பாண்டியப் படையிடம் பட்ட பாட்டை என் எழுத்துக்களால் எழுத இயலாது. அதையும் மற்ற நிகழ்ச்சிகளையும் சேர்த்துப் பாண்டியப் புலவர் ஒருவரே பாடுகிறார்.

தீக்கொழுந்துகளுக்கிடையில் வெஞ்சினங் கொண்ட வேழத்தின் மீது உறைந்துக்குள் புகுந்து கொண்டிருந்தான் சுந்தர பாண்டியன். திரும்பிய பக்கமெல்லாம் தீக்கொழுந்துகள், இடிபாடுகள், வீரர்களின் சடலங்கள் செங்குருதிச் சேறு....

தொலைவில் தெரிந்த பதினாறு கால் மண்டபம் ஒன்றை வெறியோடு தாக்க முற்பட்டனர் பாண்டிய நாட்டு வீரர்கள். "நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று கூறிக்கொண்டே சென்று அவர்களைத் தடுத்தான் சுந்தர பாண்டியன்.

அந்த மண்டபத்தில் விழுந்து நெடுஞ்சாண்கிடையாக வணங்கினான். வீரர்களுக்கு ஏதும் விளங்கவில்லை. வியப்பும் திகைப்புமாக அவன் செயலைக் கண்டு அஞ்சி நின்றனர்.

ஏழாம் அத்தியாயம்

புலமை உணர்ந்த அரசு!

காவிரிக் கரையை அடுத்தாற் போல் தனியே நின்று கொண்டிருந்தது அந்தப் பதினாறு கால் மண்டபம். பழங் காலத்து உறுதியான கல்தூண்கள் நான்கு புறங்களிலும் காணப்பட்டன. சுந்தர பாண்டியன் பய பக்தியுடன் அங்கே விழுந்து வணங்கியதைக் கண்ட வீரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். 'இது கோயிலுமல்ல; இங்கு மூர்த்திகளுமில்லை; எதற்காக இளவரசர் இங்கு வீழ்ந்து வணங்குகிறார்!' என்று திகைத்தனர்.

"நல்லவேளை, தக்க சமயத்தில் நான் இங்கு வந்து சேர்ந்தேன்" என்று அங்கு நின்ற படைத் தலைவனிடம் கூறினான் பாண்டியன். "இல்லாவிட்டால் இந்த மண்டபத்தையும் இடித்து நொறுக்கிக் காவிரியில் தள்ளியிருப்பீர்கள்!" என்றான்.

"என்ன மண்டபம் இது?" என்று கேட்டான் படைத் தலைவன்.

"இது புலவர் மண்டபம். இதற்கு எந்த இடையூறும் நேராமல் பார்த்துக் கொள். நம்முடைய காவலர்கள் சிலரை இங்கே நிறுத்தி வை!"

சுந்தர பாண்டியன் நகரத்துக்குள் புகுந்து போர் நிகழ்ச்சிகளைக் கண்காணிக்கச் சென்று விட்டான். நகரத்தின் எல்லாப் பகுதிகளிலும் மும்முரமாகப் போர் நடந்து கொண்டிருந்தது. காலங் காலமாகச் சோழர்களின் முதல் தலைநகரமாக, இரண்டாவது தலைநகரமாக, மூன்றும் தலைநகரமாக மாறி மாறித் திகழ்ந்த பெரு நகரம் இப்போது ஒரே இக்காடாகக் காட்சியளித்தது. சோழ மாளிகைகளில் ஒன்றுகூட விட்டு வைக்கப்படவில்லை.

உறந்தைப் போர் ஒருவாறாக முடிந்தது. திரும்பிய திசைகளிலெல்லாம் மீனக் கொடிகள் பறந்தன. பாண்டிய அதிகாரிகள் பொறுப்பில் நகரத்தின் ஆட்சியைக் கொடுத்தான் பாண்டியன்.

மாலை நேரம் வந்தது. விழுப்பரையரும் மற்றும் சில புலவர்களும் புடைசூழக் காவிரிக் கரை மண்டபத்துக்கு வந்து சேர்ந்தான். தீப்பட்ட நகரம் அருகே இருந்தாலும் அங்கே பொன்னி வள நதியின் குளுமை தோய்ந்த தென்றல் வீசியது. சுந்தர பாண்டியனும் புலவர்களும் அங்கே அமர்ந்து எதிர்க் கரையில் மரக் கூட்டத்துக்கு அப்பால் இரு திசைகளிலும் நிமிர்ந்து நின்ற திருவானைக்கா கோபுரத்தையும் திருவரங்கன் கோபுரத்தையும் உற்றுப் பார்த்தனர். இனம் புரியாத பேரமைதி அவர்களிடம் குடிபுகுந்தது.

"இந்த மண்டபத்தின் அருமை அறியாது இதையும் நம் வீரர்கள் இடித்துத் தகர்க்கத் தொடங்கிவிட்டார்கள்...!"

விழுப்பரையர் அந்த மண்டபத்தின் வரலாற்றை மற்றப் புலவர்களுக்குக் கூறலானார்:

"உருத்திரங் கண்ணனார் பாடிய பட்டினப்பாலை இந்த மண்டபத்தில் தான் சோழன் கரிகாலன் பெருவளத்தான் முன்பு அரங்கேறியது. இங்கிருந்துதான் அவர் பாடினார். அந்தப் பாடலுக்குப் பரிசிலாகப் பதினாறு நூறாயிரம் பொன்னையும் இந்தப் பதினாறு தூண் மண்டபத்தையுமே வழங்கி விட்டார் கரிகாலன். கண்ணனாரின் பாலையால் அன்றிருந்த பூம்புகாரின் சிறப்பும் சோழனின் ஆட்சிச் சிறப்பும் காணுகின்றோம். மன்னனின் சிறப்புக்கு இந்த மண்டபமே சான்று கூறி நிற்கிறது."



ஆசிரியை : எதற்கு எனக்கு மோதிரம் தருகிறாய் ?

ராதா : எங்கப்பா சொன்னார். குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படணும் என்று!

''கரிகால் வளவனும் சோழன்; அவனையும் நகரத்தையும் பாடிய கண்ணனாரும் சோழ நாட்டுப் புலவர். அப்படி இருக்கும்போது ஏன் இந்த மண்டபத்தையும் இடிக்கக் கூடாது? இந்த எண்ணம் யாருக்கேனும் எழக் கூடும்'' என்று கூறிப் பலமாக நகைத்தான் பாண்டியன்.

காவலுக்கு நின்ற வீரர் தலைவனுக்கு அப்படித்தான் தோன்றியது.

''பைந்தமிழும் அதன் அறிவுச் செல்வமும் பண்புச் செல்வமும் ஒரு நாட்டார் மட்டிலும் போற்றக் கூடியவையல்ல. பாடல் பெற்ற அந்தச் சோழனை, அவனுடைய வள்ளல் தன்மைக்காக நான் வணங்குகிறேன். அறிவும் பண்பும் சொல்லில் வழங்குவோரின் ஆற்றலை உணர்ந்த புரவலன் அவன். அவனது நெறியை நிலைநாட்டி நிற்கும் மண்டபம் இது. ஒரு நாட்டிலுள்ள புலமைச் செல்வத்தைச் சுட்டிக் காட்டும் தூண்கள் இவை. மன்னனுக்கும் மக்களுக்கும் வழிகாட்டும் புலவர் பெரு மக்களாகிய உங்கள் புலமைக்கு நான் இந்த இடத்திலிருந்து சிரம் தாழ்த்துகிறேன். நாங்கள் மறைந்து விடுவோம். உங்களில் ஆற்றல் மிக்கோர் நிலைத்து நிற்பீர்கள்!'' — சுந்தர பாண்டியனின் நாத் தழுதழுத்தது. அவனுடைய விழிகளில் பொன்னி பொங்கியது.

கற்பனை மிக்க புலவர் ஒருவர் உணர்ச்சியால் உந்தப்பட்டு எழுந்தார்.

''இளவரசே! தங்களது நெறியும் இந்த மண்டபமும் சேர்ந்து எனக்கொரு கற்பனையைத் தந்தன. ஒரே ஒரு பாடல் பாட அநுமதி தாருங்கள்.''

''பாடுங்கள்!'' என்று உற்சாகமாகக் கூவினார் விழுப்பரையர். புலவரின் குரல் கணீரென்று எழுந்தது.

ஃ''வெறியார் தளவத் தொடைச்
  செயமாறன் வெகுண்டதொன்றும்
அறியாத செம்பியன் காவிரி
  நாட்டில் அரமியத்துப்
பறியாத தூணில்லை! கண்ணன்
  செய் பட்டினப்பாலைக் கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறுமே
  யங்கு நின்றனவே!''

''அற்புதம்! அற்புதம்!'' என்று பாராட்டினார் விழுப்பரையர்.

பாடலில் மெய்ம் மறந்து திளைத்த பாண்டியனின் பரவசத்துக்கோர் எல்லையில்லை. ''புலவர் பெருமகனே! நான்கு அடிப் பாடலுக்குள் ஒரு பெரும் வரலாற்றையே தொகுத்து விட்டீர்கள். இந்தப் போரும் அதன் வெற்றியும் பாடலில் வந்து விட்டன. இதைவிட அற்புதம் எங்கே இருக்கிறது கண்டீர்களா? 'காவிரி நாட்டின் அரண்மனைத் தூண்களை ஒன்று விடாமல் பறித்த பாண்டியன், பட்டினப்பாலைக்கென்று நெறியால் விடப்பட்ட தூண் பதினாறு மட்டும் விட்டுவிட்டான்' என்று பாடியிருக்கிறீர்களே! எனக்கு இந்த ஒரு பாட்டுப் போதும். ஒன்றே போதும்!''

தன் கழுத்தை அலங்கரித்திருந்த பொன்னாபரணத்தைக் கழற்றித் தன் கரத்தாலேயே புலவருக்கு அணிவித்தான். ''இந்தப் பாடலுக்கு இது போதாது. என் மகிழ்ச்சிப் பெருக்கை வெளியிட வேண்டுமல்லவா? அதற்கு இந்தப் பொன்னாபரணம்!''

''அரசே! குளிர் நீர் பொங்கிப் பாயும் நாட்டில் செந்நெல் விளையும். உணர்ந்து போற்றும் அரசுள்ள நாட்டில் இலக்கிய வளம் பெருகும். இலக்கியச் செல்வம் எந்த நாட்டில் பெருகுகிறதோ அங்கு நன்மக்கள் பலப் பலர் தோன்றுவார்கள். அரசு எவ்வழி அவ்வழி மக்கள். நான் இப்போதே தங்களது எதிர்கால ஆட்சிச் சிறப்பையும் குடிமக்கள் மேம்பாட்டையும் காணு

ஃ திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த மணச்சநல்லூரை அடுத்துள்ளது திருவெள்ளறை என்ற சிற்றூர். அங்குள்ள சுந்தர பாண்டியன் கல்வெட்டில் காணப்படும் பாடல் இது.

கின்றேன். இந்தப் பொன்னும் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் ஆட்சிச் சிறப்பைக் காட்டுவனவல்ல. தங்கள் உள்ளம் புலமையின் உயர்வை உணரும் உள்ளம். அதுவே எங்கள் பெருஞ்செல்வம் !'' புலவர் உணர்ச்சி பொங்கக் கூறிவிட்டு அமர்ந்தார்.

நாழிகை ஆயிற்று. பொன்னி நல்லாள் இருமருங்கும் தொட்டுத் தழுவிக் கொண்டே சலசலத்து ஓடினாள். சோழ இளவரசன் இராஜ இராஜன் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே அந்த மண்டபம் சோம்பல் மிக்கோர் பகலுறக்கம் கொள்ளும் மண்டபமாக மாறிவிட்டதை அவள் கண்டு வருந்தியவள். இப்போது அதைக் காக்க ஒரு பண்பாளன் வந்து விட்டான் என்ற பூரிப்பு அவளுக்கு.

சுந்தரபாண்டியன் அங்கு நின்ற வீரர் தலைவருக்குக் கட்டளையிட்டான்:

''இது இனிமேல் உறந்தைப் புலவர்களின் பட்டி மண்டபமாக விளங்கட்டும். புதிய படைப்புக்களின் அரங்கேற்றம் இங்கு நிகழட்டும். கற்றோர் இங்கு கூடி மகிழ்வதற்கான ஏற்பாடுகளையெல்லாம் அதிகாரிகளைக் கொண்டு கவனிக்கச் செய்துவிடு !''

''சித்தம் இளவரசே!''

அன்று இரவில் பாசறைகளைச் சுற்றி வந்தான் தலைவன். போரில் விழுப் புண் பட்டுத் துடித்துக் கொண்டிருந்த வீரர்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவர்களுக்கு ஆறுதல் கூறினான். செயற்கரிய வீர சாகஸங்கள் புரிந்தவர்களின் பெயர்களைக் குறித்துக் கொள்ளும்படி கட்டளையிட்டான்.

அவனுடைய கூடாரத்துக்கு அவன் திரும்ப நெடுநேரமாகியது. அடுத்திருந்த கயல்விழியின் கூடாரத்தில் அப்போது விளக்கு எரிந்தது. ஆதிச்சதேவர், கயல்விழி, உய்யவந்தான் ஆகியோர் அவனுக்காகக் காத்திருந்தனர்.

உடைவாளை எடுத்து அருகில் போட்டு விட்டு, கவசத்தைக் களைந்து அருகில் வீசினான் சுந்தரபாண்டியன்.

''ஆ!'' என்ற கூக்குரல் பின்னிருந்து எழுந்தது. திரும்பிப் பார்த்தாள்



''ஆகா! இதென்ன! தோசை கமகமவென்று வாசனை அடிக்கிறதே?''

''ரேஷன் காலமாதலால் அரிசிப் பவுடருக்குப் பதிலாக முகப் பவுடரையே கரைத்து வார்த்து விட்டோம்!''

அவனுக்கு எப்போது எங்கே அந்தக் காயம் பட்டது என்ற நினைவே இல்லை. அவன் தனக்குள் நகைத்துக் கொண்டே கயல்விழியிடம் பேசினான். ''இந்தக் காயம் இருக்கட்டும். முதலில் உன்னிடம் ஒரு செய்தியைக் கேட்டு நான் தெரிந்துகொள்ள வேண்டும்.''

''என்ன ?''

''வைகைக் கரையில் முதன் முதலில் உன்னிடம் சபதம் செய்து கொடுத்ததில் இப்போது ஒரு பகுதி நிறைவேறி விட்டது. மதுரையை அவர்கள் அழித்தார்கள். இப்போது உறந்தை முடிந்திருக்கிறது. இனி தஞ்சையும் கங்காபுரியும் இருக்கின்றன. கங்காபுரியின் வெற்றி விழாவின்போது நீ விரும்பும் பரிசை நான் உனக்கு அளிக்க விரும்புகிறேன். என்ன பரிசு வேண்டும்?''

கயல்விழி அவனை உற்றுப் பார்த்த



◀ மரத்தோடு பேசும் மங்கையர். (காங்ரா ஓவியம்)

◀ விருட்ச வாஹினி.



மரமும் மங்கையும்

சத்தியபாமாவுக்குப் பாரிஜாதத்தின் மீது கொள்ளை ஆசை. அவளது நந்தவனத்தில் கண்ணன் ஒரு பாரிஜாத மரத்தை நட்டார். பாரிஜாதத்தைக் கண்ணும் கருத்துமாகப் போற்றி வளர்த்து வந்தாள் பாமா. மரம் வளர்ந்தது. இதழ் விரித்து

தங்களை வழிபடாதவர்களுக்குத் துன்பத்தையும், அழிவையும் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது.

செழுமைக்கும் சுபிட்சத்துக்கும் அறிகுறியாக மரம் தரும் இலைகளின் கொத்துக்களைக் கோத்துத் தோரணமாக்கி மங்கலச் சின்னமாகக் கொள்கிறோம். இந்தியக் கலைகளில் இந்தச் சுபிட்சச் சின்னம் விருட்ச தேவதையான யக்ஷி உருவத்தோடு சேர்த்து வடிக்கப்பட்டு, செழுமை, அருள் இரண்டையுமே ஒருங்கே காட்டும் நிலையில் பூரணமாக்கப்பட்டிருக்கிறது.


உதாரணமாக, பார்ஹுத்திலும், புத்த கயாவிலும், சாஞ்சியிலும், பாதாமியிலும், யக்ஷி மரத்தினடியில் நின்று கொண்டு கிளைகளைக் கையில் பிடித்தவாறு நிற்கும் தோரணை அற்புதமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

மரத்தைத் தொட்டவாறு யக்ஷி சித்திரிக்கப்படுவதில் பிரசித்தமான கவி மரபு ஒன்றும் கூடப் பதிந்திருக்கிறது. ஓர் அழகிய மங்கையின் ஸ்பர்சமின்றி ஒரு மரமும் பூச் சொரிவதில்லை என்று கவிகள் கூறுவர். மங்கையர் தம் வாயில் மதுவேந்தி அதனை மகிழ மரத்தின் மீது கொப்பளித்தால் அது மகிழ்ந்து மலர்களை ஏராளமாக அளிக்குமாம். பெண்கள் தமது பாதத்தால் உதைத்தால் அதையும் பாக்கியமாகக்கருதி அசோக மரம் அமோகமாகப் புஷ்பிக்குமாம். மாமரம் மாதராது கரம் பட்டால் மலருமாம். பெண்கள் தழுவுவதால் தழைக்குமாம் மருதோன்றி மரம். இப்படியே பல தருக்களைத் தருணிகளுடன் தொடர்புறுத்திக் கவிகள் பாடுவர்.


செடியில் சேடி. (பேலூர்)

மரங்கள் பூச்சொரிவதற்குரிய முறையில் ஸ்திரீ ஸ்பர்சத்தை நல்கும் தோரணையிலேயே யக்ஷி வடிவங்கள் பல வடிக்கப்பட்டுள்ளன. சாஞ்சி தோரண வாயிலில் சித்திரிக்கப்பட்ட யக்ஷி வடிவங்கள் மரத்தையும் மங்கையையும் ஒருங்கே காட்டும் கலைச் செல்வங்களுள் அதியற்புதமானவை. பாதாமியில் விருட்சத்தோடு இணைந்து நிற்கும் வனிதையின் வனப்பு மிக்க வடிவங்கள் பலவற்றைக் காணலாம். யக்ஷனும் யக்ஷியும் இயற்கையோடு ஒன்றி நிற்கும் காட்சியும் தத்ரூபமாகச் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். யக்ஷி அல்லாத ஒரு மங்கையை மரத்தடியில் முதன் முதலாக மதுராவில்தான் காண்கிறோம். மரத்தினருகே ஈட்டி ஏந்தி நிற்கும்மங்கை உருவம் அமைந்த சிற்பம் லாவண்யமானது. பண்டைய இலக்கியங்களில் குறிப்பிடப்பெறும்

மாதர் வழிபடும் அரச மரம் (காஞ்சி)




விருட்சமும் வனிதையும் (பாதாமி)

ஈட்டி நடனக் கலையில் ஈடுபட்ட ஒரு பெண்ணுருவை மரத்தடியில் கண்டு மனம் மகிழ்கிறோம்.

பண்டைய இந்திய மாதர்கள் விருட்ச வழிபாட்டில் கொண்டிருந்த ஈடுபாடு அமராவதிச் சின்னங்கள் பலவற்றிலிருந்து புலனாகிறது. பௌத்தர்களுக்கு விருட்சம் மிகவும் புனிதம் வாய்ந்தது. எனவே பௌத்தப் பெண்டிர் மரத்தை வழிபடும் சிற்பங்கள் பௌத்த கேந்திரமான அமராவதியில் நிரம்பக் காணப்படுவதில் ஆச்சரியமில்லை.

மரம் — மங்கை சிற்ப இணை வரிசையில் நாகார்ஜுன கொண்டாவிலுள்ள சிற்பங்கள் புதுமையானவை. பௌத்தாவதாரத்தைச் சித்திரிக்கும் சிற்பத்தில் புத்த பகவானின் அன்னை மாயாதேவி ஒரு மரத்தைச் சார்ந்து நின்றுகொண்டு, மரக் கிளையைக் கையால் தாங்குதலாகப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். புத்த அவதாரத்தைக் குறிக்கும் அச் சிற்பத்தில் புத்தர் காணப்படவில்லை; மரமும், மங்கையுமே பிரதானமாக வடிக்கப்பட்டுள்ளதே மரத்துக்கும் மதத்துக்குமுள்ள பிணைப்பைப் பிரதிபலிக்கிறது.

தமிழ் நாட்டுச் சிற்பங்களிலும் மரம்—மங்கை உறவு வடிக்



மரத்தடியில் கங்கா



புன்னை மரத்தில் கண்ணன்

கப்பட்டுள்ளது. இவற்றோடு தஞ்சை மாவட்டத்தில் தேர்கள் போன்ற மர வேலைப்பாடுகளில் காணப்படும் மரத்தடியில் தவம்புரியும் கங்கா தேவி, கோபியர்களது ஆடையைப் பறித்து மரம்மீது ஏறி அமர்ந்துள்ள கண்ணன் ஆகிய வடிவங்கள் சிறப்புடையவை.

மரத்துக்கும் மங்கைக்கும் உள்ள அன்புறவு கலைகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்தது. சிற்பத்தில் மட்டுமின்றி ஓவியத்திலும் இப்பொருள் பரிமளித்திருக்கிறது. கண்ணனைத் தேடி மரங்களிடமெல்லாம் முறையிடும் காங்ரா ஓவியம் மரம் — மங்கை உறவை வெகு சிறப்பாக உணர்த்துகிறது.

இதிகாசங்களிலும் புராணங்களிலும் மரங்களுக்கும் மங்கையர்களுக்குமிடையே விவரிக்கப்படும் அன்பு நெருக்கத்தைக் குறிக்கும் நிகழ்ச்சிகள் சுவையானவை.

கைலாசத்தில் தேவதாரு என்றொரு மரம்; சிவபிரானுக்கு அந்த விருட்சத்திடம் தன் பிள்ளையைப் போன்ற அன்பு. பார்வதிக்குத் தேவதாருவிடம் அளவுகடந்த பிரேமை. பார்வதி தேவியின் கரங்களால் பொற்குடங்களினின்று ஊற்றப்படும் தண்ணீரின் ருசியை அனுபவிக்கும் பேறு பெற்ற தேவதாரு. அவளது திவ்விய உடலினின்று திருப்பால் அருந்திய சுப்பிரமண்யக் கடவுள் போல் செழித்து வளர்ந்திருந்தது. ஒரு சமயம் மதம் கொண்ட யானையொன்று தேவதாரு மரத்தில் உராய்ந்து கன்னத்தைச் சொறிந்து கொண்டதால் அம்மரத்தின் பட்டை உரிந்தது. ஆசை கொண்டு தான் வளர்த்த அந்த மரத்துக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கண்ட பார்வதி முன்பொரு முறை அசுராஸ்திரத்தினால் முருகப் பெருமான் காயமுற்றபொழுது வருந்தியது போல் மனம் பதைத்தாள். கும்போதரன் என்னும் சிவநேசனைத் தேவதாருவுக்குப் பாதுகாவலனாகச் சிவபிரான் அமைத்து, அச்செல்வ மரத்துக்கு யாதொரு துன்பமும் நேராதென்று உறுதியளித்த பிறகே தேவியின் துயரம் நீங்கியது. மரத்தின் மீது அந்தத் தெய்வ மங்கைக்குத்தான் என்ன ஆசை!

பார்வதி தேவியின் பாதஸ்பரிசம் பட்டு வளர்ந்த அசோக மரத்தைக் கண்டு பரமேசுவரனே, ''ஆகா! எனக்கு இப்படியும் ஒரு போட்டியா?' என்று பொறாமைகூடப் பட்டதாக ஆதிசங்கரர் 'ஸௌந்தரிய லஹரி'யில் கவிநயம் மிளிரப் பாடுகிறார்.

ஒரு சமயம் விளையாட்டாகச் சிவபிரானின் கண்களை மூடினாள் தேவி. பரமனின் கடாட்சமின்றி ஈரேழுலகும் இருள்மயமாகி ஜீவராசிகளெல்லாம் துடித்தன. அந்தப் பாபம் தேவியைச் சூழ்ந்தது. பாபத்தைப் போக்கிக் கொள்ளப் பூலோகத்தில் காஞ்சி நகரில் தவம் மேற்கொள்ளும்படி தேவியைப் பணித்தார் சிவபெருமான். தேவி தவம் புரியப் பூவுலகில்

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்ருக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினுல் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-2, சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



SP/1/P/7/65

காஞ்சியை வந்தடைந்தாள். ஒரு மாமரத்தின் அடியில் அமர்ந்தாள். மனம் என்னும் விருட்சத்துக்குத் தவத்தால் தண்ணீர் ஊற்ற, புண்ணியப் பூக்கள் மலர்ந்து, பாபச் சருகுகள் உதிர்ந்து, ஞானப் பழம் கனியுமென்று உணர்ந்தவே தேவி மங்கலச் சின்னமான மரத்தின் அடியில் அமர்ந்து தவம் மேற்கொண்டாள். மாவடியில் தேவி புரிந்த மாதவத்தில் மனமகிழ்ந்த பரமனும் அன்னையின் அன்புக்குப் பாத்திரமான மாமரத்தின் அடியிலேயே எழுந்தருளி மாவடி சேவை நல்கி, அன்னைக்கு அருள் பாலித்தார்.

மாயக் குழல் ஊதினான் கண்ணன். குழலோசை கேட்ட கோபியர்கள் எண்ணத்தில் நிறைந்திருந்த கண்ணனை நாடித் தேடி ஓடினர். குழலோசை வந்த திசையில்தான் அப்பாவையர்கள் விரைந்தனர். ஆனால், அந்த மாயவனைக் காணோம். வனம் வனம் திரிந்து மாதவனைத் தேடினர். கோபியர்களிடம் விரகதாபம் கொழுந்துவிட்டு எரிந்தது. வனத்தில் நிறைந்திருந்த பசுமையான மரங்களைக் கண்டதும், அந்த மரங்களெல்லாம் கோபியர்களுக்குக் கண்ணனாகத் தோற்றமளித்தன. வேரும் கண்ணன், கிளையும் கண்ணன்; இலையும் கண்ணன்; மலரும் கண்ணன். எல்லாமே அம்மாயவன் உருவம்தான்! அருகே சென்று பார்த்தாலோ அந்த மரங்கள் பாவையர்களைப் பரிதாபமாகப் பார்த்தன. கண்களில் நீர் சொரிய நீர்ப்படலத்தையும் பிளந்து கொண்டு கருவிழிகள் தாபத்துடன் கண்ணனைத் தேட, ''மரங்களே! அன்பு தாயவியை அணைத்தவாறு, கையில் தாமரை மலருடன் திரியும் கண்ணனை நீங்கள் கண்டீர்களா?'' என்று கேட்கின்றனர்.

விந்தை! சற்று முன்பு அங்கில்லாத மாயக் கண்ணன் இப்போது அம்மரக் கிளையில் அமர்ந்திருக்கிறான்.

கோபியர்கள் தடாகத்தில் நீராடும்போது அவர்களது ஆடைகளை அபகரித்துக்கொண்ட கண்ணன் புன்னை மரத்தின் மீது ஏறி அமர்ந்து கொண்டு படுத்திய பாடு அந்தக் கோபியர்களுக்கும் அவர்களின் உற்ற தோழியான புன்னை மரத்துக்கும்தானே தெரியும்!

இலங்கை அரக்கனால் சிறை வைக்கப்பட்டிருந்த அந்தத் தெய்வ மங்கை சீதை சோகமே உருவாயிருப்பினும் அவளது சோகம் விரைவில் தீரும் என்பதைக் காட்டுவதே போல் ஓர் அசோக மரத்தடியிலே அமர்ந்திருந்தாள்.

அரக்கர் கொற்றவனின் அச்சுறுத்தல்களைப் பொறுக்க முடியாது போய் இனியும் வாழ்வதில் பயனில்லை என்று முடிவுகொண்ட சீதாதேவி கூந்தலால் தூக்கிட்டுக்கொண்டு உயிர் நீக்க எண்ணிச் சிம்சுபா விருட்சத்திலேயே ஆடையைப் பிணைத்தாள்.

அப்போது 'அயோத்தி மாநகரத்தைத் தசரதச் சக்கரவர்த்தி என்பவர் ஆண்டு வந்தார்' என்று ஆரம்பித்து ராமபிரானின் சரிதம் முழுவதையும் கூறிய ஆஞ்சநேயனின் ஜீவசஞ்சீவிக் குரலுக்கும் சிம்சுபா மரமே ஆசிரமாயிருந்தது. இன்னல்களை விலக்கி அன்னைக்கு இன்பங்களைக் கூட்டும் ராமதூதன் விருட்சத்திலிருந்தே தேவிக்கு அறிமுகமானான்.

நிகழ்காலத்திலும் மங்கையரின் மர வழிபாடு தொடர்ந்து வருகிறது. இன்றும் பாட்னாவுக்கு அருகில் கும்ரகர் என்னும் கிராமத்தில் விருட்ச தேவதை தூமுகி தேவி என்ற பெயரில் வழிபடப்படுகிறாள். கன்னிகைகள் விருட்சத்தை வழிபட்டு மனமக்கிசைந்த கணவனை அடைவர். தமிழ் நாட்டுப் பெண்மணிகள் அருட் செல்வமும், பொருட் செல்வமும், மக்கள் செல்வமும் நல்கும் மங்கள தேவதையாக அரச மரத்தைப் போற்றி வழிபடுவர். அரச மரப் பிரதட்சணம் எல்லாப் பேறுகளையும் அளிக்கும் என்பது அவர்கள் நம்பிக்கை.

பிரமன், சிவன், விஷ்ணு மூவரும் அரச மரத்தில் இடம் பெற்றிருப்பதாக ஐதீகம். கிருஷ்ண பரமாத்மா பகவத்கீதையில் 'மேலே வேரும், கீழே கிளையும் கொண்ட அரச மரமாக சம்ஸாரத்தைப் பேசுகிறார்கள்' என்கிறார். மோக்ஷ நாயகனாகிய பரமேசுவரனில் தோன்றி சிருஷ்டிக்குக் காரணமான பிரம்மனில் அத் தோற்ற உலகம் முடிவு பெறுவதால் இவ்வாறு தலை கீழாக உள்ள விருட்சமாக இக வாழ்வைப் பேசுவர் போலும். பிப்ரவரி முதல் தேதி இப்புகழ் கொண்ட அரச மரத்தை மாதர்கள் வணங்கும் அச்வத்தப் பிரதக்ஷிண அமாவாசை நிகழ்கிறது.

— வி. கோபாலன்

அஞ்சா நெஞ்சம் படைத்த பாஞ்சாலச் சிங்கம்

ரா. லி

அமைதி ஊர்வலம் அது
மிருகத்தனமாக நடந்து கொண்டு அமைதியைக் குலைத்தது
போலீஸ் படை
வேண்டுமென்றே கண்களை மூடிக்கொண்டு
லாஜபதி ராயை நையப் புடைத்துவிட்டது
அத்தனை தடியடிகளையும் மார்பில் தாங்கினார்
அந்த வீரர்

கையில் துப்பாக்கி. கால்களில் பூட்ஸ். உடலில் வேட்டை உடை. புறப்பட ஆயத்தமாக நின்றுகொண்டிருந்தார் துரை.

''எசமான்! குதிரைகள் தயார்!'' என்று கூறினான் வந்து நின்று வணக்கம் தெரிவித்த வில்லேச் சேவகன்.

அவன் முன்னே செல்லப் பின்னே நடந்தார் துரை. ஸ்பென்ஸர் என்னும் பெயர் பூண்ட அந்த வெள்ளையர் பாஞ்சாலத்தைச் சேர்ந்த போலீஸ் சூபரிண்டெண்டு. அவருக்குச் சேவகனாக விளங்கியவனோ ஒரு முகம்மதியன்.

இருவரும் குதிரையேறி வெகு உற்சாகத்துடன் வேட்டையாடக் காட்டுக்குப் புறப்பட்டார்கள்.

அடர்ந்த பாஞ்சாலக் காட்டிலே வெகு நேரம் அலைந்த பின் வேட்டை கிடைத்தது. உற்சாகத்தோடு சுட்டார் துரை. குறி தவறவில்லை. வேட்டை சுருண்டு விழுந்தது.

பெருமித உணர்வோடு தம் சேவகனைப் பார்த்து. ''போய் அதை எடுத்து வா. வீட்டுக்குப் புறப்படுவோம்!'' என்றார் அவர்.

அவன் தயங்கி நின்றான்.

''என்ன?''

''நான் இஸ்லாமைச் சேர்ந்தவன்.''

''தெரியும்.''

''எங்கள் மதக் கோட்பாட்டின்படி செத்த பன்றிகளைத் தொடுவது பாவம். எனவே, என்னை மன்னிக்கணும்.''

''முடியாது என்று மறுக்கிறாயா, நாயே!'' என்று சீறினார் துரை.

அவர் சீற்றத்துக்கு அஞ்சி அவன் தன் உறுதியை விட்டுக் கொடுக்கவில்லை.

ஆத்திரம் மீறிய துரை அவனையே அடுத்த குறியாக்கி விட்டார், தமது கைத் துப்பாக்கிக்கு. உயிர் பிரிந்து உடல் விழுந்தது. இரக்கமற்ற துரை அந்த உடலை இழுத்து ஒரு புதருக்குள் மறைத்தார். அவன் ஏறி வந்த குதிரையையும் அப்படியே காட்டில் விட்டார். ஏதும் அறியாதவர் போல் வீடு திரும்பினார்.

அவர் மறைத்து மூடிய விஷயத்தை எப்படியோ கண்டுபிடித்து வெளியிட்டு விட்டது 'பஞ்சாபி' என்னும் செய்தித்தாள்.

இந்தியப் பத்திரிகை ஒன்று வெள்ளையன் மீது குற்றம் சாட்டுவதாவது? — இப்படி எண்ணிய அரசாங்கம் அந்தப் பத்திரிகையின் உரிமையாளரான ஜஸ்வந்த ராயைக் குற்றவாளியாக்கி ஆறு மாதங்களுக்குச் சிறையில் தள்ளி விட்டது.

வீரம் செறிந்த பாஞ்சால மக்கள் கொதித்தெழுந்தனர். வங்கப் பிரிவினை, சுதேசி இயக்கம் எல்லாம் வலுப்பெற்றிருந்த காலம். தாய்த் திருநாடு தனைப் பெற்ற தாயெனப் போற்றி வந்த லாலா லாஜபதிராய் அந்நியனது இந்த அநியாய ஆட்சியைத் தமது வீறார்ந்த பேச்சுக்களினால் எதிர்த்தார். சிங்கமெனச் சீறிப் பாஞ்சாலச் சிங்கமெனப் புகழ் பெற்றார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த விழிப்பைக் கண்டு ஆங்கிலேய அரசாங்கம் அச்ச



முற்றது. அவரைச் சிறைப்படுத்தத் திட்டமிட்டது. சிறைப்படுத்தினால் எங்கே பெரிய கிளர்ச்சி ஏற்படுமோ, அதை அடக்க முடியாமல் தவிக்க நேரிடுமோ என்றும் பயந்தது.

லாலா லாஜபதிராயின் நண்பர்கள், அரசாங்கம் அவரைச் சிறைப்படுத்தலாம் என்று எண்ணிச் சிறிது காலம் லாகூரை விட்டுச் சென்று தலைமறைவாயிருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். ''நான் என்ன தவறு செய்து விட்டேன்? எதற்காக ஓடி ஒளிய வேண்டும்?'' என்று கேட்டுத் தைரியமாகவே உலவி வந்தார் அச்சம் என்பதையே அறியாத லாஜபதிராய்.

வழக்கம் போலக் கோர்ட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த அவரைப் போலீஸ் சூப்பிரண்டெண்டு பார்க்க விரும்புவதாகக் கூறி அழைத்துச் சென்று அப்படியே காவல் கைதியாக்கி மாண்டலே சிறைக்கு அனுப்பி வைத்தது அன்றைய அரசாங்கம். இந்தியப் போர் வீரர்களைக் கிளர்ச்சி செய்யுமாறு தூண்டிவிடுவதாக அவர் மீது அபாண்டப் பழி சுமத்தவும் அது தயங்கவில்லை. ஆட்சிப் பீடம் அவரை எவ்வளவுக் கெவ்வளவு அடக்க முயன்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அவர் ஒளி வீசிப் பிரகாசித்தார்.

''விண்ணகத்தே யிரவிதனை வைத்தாலும்
அவன் கதிர்கள் விரைந்து வந்து
கண்ணகத்தே யொளிதருதல் காண்கிலமோ ?
நின்னையவர் கனன்றிந்நாட்டு
மண்ணகத்தே வாழாது புறஞ்செய்யும்
யாங்களெலா மறக்கொணாதேம்
எண்ணகத்தே, லாஜபதி, யிடையின்றி
நீவளர்தற்கென் செய்வாரே?''

என்று நம் தமிழ் நாட்டு அமரகவி பாரதி கூறியதற்கொப்ப வாழ்ந்து புகழுடன் எய்திய பெரியார் அவர். இந்த ஜனவரி மாதம் இருபத்தெட்டாந் தேதி அவர் பிறந்து நூறாண்டு நிறைவெய்துகிறது.

ஆம். 1865ம் ஆண்டு ஜனவரி மாதம் இருபத்தெட்டாந் தேதிதான் லாலா லாஜபதி ராய் பிரோஸ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த டோடி என்னும் கிராமத்தில் பிறந்தார். தந்தை ராதாகிருஷ்ணர் ஒரு பள்ளி உபாத்தியாயராகப் பணியாற்றியவர். 'தாயிற் சிறந்தொரு கோவில் இல்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்ற கொள்கையைக் கடைப்பிடித்து, பாரதத்தின் புராதன நெறியைப் பின்பற்றி வளர்ந்தவர் லாஜபதி ராய். அன்னையும் பிதாவும் அன்புடன் கூறிய ஆசிமொழிகளே தம் உயர்வுக்குக் காரணம் என்ற பரம நம்பிக்கை கொண்டவர்.

அவர் லாகூரில் படித்துக் கொண்டிருந்த காலத்திலே, ஆரிய சமாஜத்தின் ஸ்தாபகரான தயானந்த சரஸ்வதியின் கோட்பாடுகள் பாஞ்சாலத்திலே வேரூன்றிப் பரவின. அவரது தார்மீகக் கொள்கைகளிலே அசையாப் பற்றுக் கொண்ட லாஜபதி ராய் பிற்காலத்தில் தயானந்த ஆங்கிலோ வைதிகக் கல்லூரி நிறுவி அதன் ஊதியம் பெறாத ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். தமது தந்தையின் ஞாபகார்த்தமாக ராதாகிருஷ்ணப் பள்ளியும் லோகமான்யரின் நினைவாகத் திலகர் அரசியல் பள்ளியும் தொடங்கி நடத்திய பெருமையும் இவருக்கு உண்டு.

இந்து மதத்தில் வழுவாத நம்பிக்கை கொண்டவராயினும் லாஜபதி ராய் மக்கட் குலம் உயரப் பாடுபட்டார். தனி மனிதன் ஒழுக்கத்தில் உயர்ந்தோங்கி விட்டால், சமூகம் தானாகச் சீர்திருந்திவிடும், மனிதன் தாழ்ந்தால் சமூகம் சீர்கெட்டுவிடும் என்ற எண்ணத்தில் ஊறித் திளைத்தவர். மனிதனை மனிதனாக்க முயன்றவர். நாட்டில் பஞ்சமும் பூகம்பமும் ஏற்பட்ட காலத்தில் இரவு பகல் என்று பாராமல் தளராது உழைத்து நாட்டு மக்களுக்கு நலன் பேணிய சீரிய புருஷர். வெளி நாடுகளில் வயிற்றுப் பிழைப்பை உத்தேசித்துக் குடியேறிய இந்திய மக்களுக்கும் அவர் எத்தனையோ எண்ணற்ற சேவைகள் செய்துள்ளார்.

ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலேயோடு நல்லெண்ணத் தூதுக் கோஷ்டியின் ஓர் அங்கத்தினராக லண்டன் மாநகருக்குச் சென்ற பெருமையும் ஸ்ரீ லாஜபதி ராய்க்கு உண்டு. உரிமையை இரந்து கேட்டுப் பெற முடியாது. ஓர் இனம் உயரவேண்டுமானால் அது தன் காலில் நிற்கப் பழக வேண்டும். தனக்கு உதவ யாராவது முன் வருவார்களா என்று பிறர் முகத்தைப் பார்க்கும் சமூகம் ஒரு நாளும் முன்னேற்றம் காண முடியாது என்பதைக் கண்டார். காந்தியடிகள் தென்னாப்பிரிக்கா வாழ் இந்தியர்களுக்கும் மனித குலத்துக்கும் செய்து வந்த சேவையைப் பாராட்டி, உருவ வழிபாட்டில் நம்பிக்கை கொண்டவர்களுக்குத் தமது பணிகளின் மூலம் காந்தி மாந்தருக்குள் ஒரு தெய்வமாகத் திகழப் போகிறார் என்று கூறினார். அவரது வாக்குப் பலித்ததை இன்று உலகம் கண்கூடாகக் காண்கிறது.

இந்து மக்களின் உயர்வுக்காக அவர் இந்து மகாசபையின் அலுவல்களிலும் ஈடுபாடு காட்டினார். ஆனால் மத விஷயத்தில் அவர் குறுகிய மனப்பான்மை கொண்டவராக வாழவில்லை. 'லாஜபதியின் சவத்தைத் தூக்கும் பாக்கியம் பெற்ற அந்த மூன்று நிமிஷங்களே என் வாழ்க்கையில் விலை மதிக்க முடியாத கணங்கள்' என்று அப்துல் மஜீது என்னும் முஸ்லிம் சகோதரர் சொல்லியிருப்பதே இதற்குச் சான்று.

அமெரிக்காவில் அவர் இருந்தபொழுது தமது நூல்களின் மூலமும் சொற்பொழிவுகளின் மூலமும் இந்திய மக்களிடம் அமெரிக்க மக்களுக்கு நல்லெண்ணத்தை உருவாக்க முயன்றார். இலக்கியப் பணியையும் அரசியல் பணியையும் ஒன்றாக இணைத்து இந்தியாவின் பெருமையை உணர்த்த அவர் செய்துள்ள சேவைகள் இணையற்றவை. மிஸ் மேயோவின் 'மதர் இந்தியா' என்னும் அபத்த நூலுக்குப் பதில் கூறுவதேபோலத் 'துயருற்ற பாரதம்' என்னும் நூலை இயற்றினார். 'இந்திய வரலாறு' என்னும் நூல் இந்துக்களின் பெருமையைக் கூறுவது.

அமெரிக்காவில் அவருக்கு ஏற்பட்ட பொருள் கஷ்டங்கள் சொல்லி முடியாது. அவரோடு இருந்த டாக்டர் ஹார்டிகர் என்பவர் இருவரும் படும் சிரமங்களை இந்தியாவில் வாழும் தம் உறவினர் ஒருவருக்கு எழுதினார். லோக மான்ய திலகருக்கு இச்செய்தி எட்டவே, ஐயாயிரம் டாலர் அன்னி பெஸண்ட் மூலம் லாலா லாஜபதி ராய்க்கு அனுப்பி வைத்தார். ஆனால் லாஜபதிராய் அந்தத் தொகையைத் தம் செலவுக்கு எடுத்துக்கொள்ள மறுத்து வெளி நாட்டில் பாரதத்தைப் பற்றிய பிரசாரத்துக்காகவே செலவிட்டார். 'லோகமான்யர் மகாபுருஷர். மக்களுக்கு உண்மையான ஊழியர். வெளி நாட்டில் பாரதத்தைப் பற்றிப் பிரசாரம் நடைபெற வேண்டும். அப்பொழுதுதான் பிறப்புரிமையாகிற சுதந்திரத்தைப் பெற முடியும் என்று உணர்ந்தவர்' என்று லாஜபதி ராய் பெருமிதம் கொண்டார். எங்கு இருந்தாலும் நாட்டின் பணி ஒன்றையே தம் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார் லாலாஜி.

ஜாலியன் வாலா தோட்டத்தில் நடந்த படுகொலையின்போது லாஜபதி ராய் அமெரிக்காவில் இருந்தார். அவர் மனம் இந்தியாவுக்குப் பறந்தோடி வரத் துடித்தது. பாரதியார் கூறுவதுபோல,

தொண்டுபட்டு வாடுமென்றன்
தூயபெரு நாட்டிற்
கொண்டுவிட்டங் கென்னையுடன்
கொன்றாலு மின்புறுவேன்.
எத்தனை ஜன்மங்கள்
இருட்சிறையி லிட்டாலும்
நத்துபுனற் பாஞ்சாலந்
தனில்வைத்தால் வாடுகிலேன்!''

என்று அலைபாய்ந்தது. அங்கிருந்து அவர் நாட்டு இளைஞர்களுக்கு விடுத்த செய்தி, 'காந்தியை உங்கள் தலைவராகக் கொள்ளுங்கள். அவர் காட்டும் பாதையில் செல்லுங்கள். இந்த நேரத்தில் சரியான வழி காட்டக் கூடியவர் அவர் ஒருவரே! எத்தனை இன்னல்கள் ஏற்படினும் அவற்றை இலட்சியம் செய்யாமல் இலட்சியத்தை அடைய முயலுங்கள்' என்பதே ஆகும்.

இந்தியாவுக்குத் திரும்பிய பின் அவர் கல்கத்தா காங்கிரசுக்குத் தலைமை வகித்தார். ஒத்துழையாமை இயக்கத்தில் அவருக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை. ஆயினும் பெருவாரியான ஆதரவு அதற்குக் கிட்டவே, முழு மூச்சுடன் அதனைப் பிரசாரம் செய்யலானார். நாட்டின் ஒற்றுமை ஒன்றே அவர் குறிக்கோளாக இருந்தது.

இயக்கத்தின்போது அவர் சிறைப்படுத்தப் பட்டார். சிறையில் அரசாங்கம் அவருக்கு எத்தனையோ துன்பங்களைத் தந்தது. உடல் நிலை கெட்டது. க்ஷயரோகமே கண்டது. மக்கள் அவரை நிபந்தனை யின்றி விடுவிக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர். அரசாங்கம் அவரை அடிபணிய வைத்து மன்னிப்புக் கோர வைக்கவேண்டும் என்று எத்தனித்தது. உயிரே போனாலும் தான் இறந்து நிற்க மாட்டேன் என்று உறுதியாக இருந்தார். அவர் உறுதி அரசாங்கத்தைத் தளர வைத்தது. வேறு வழியின்றி நிபந்தனை இல்லாமலே அவரை விடுதலை செய்தது.

1920ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தது சைமன் கமிஷன், இந்தியாவின் விதியை நிர்ணயிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு. ஆனால் அதில் இந்தியர் யாருமே அங்கம் வகிக்கவில்லை. பாரதம் அதைப் புறக்கணித்தது. 'சைமன் கமிஷனே, திரும்பிப் போ!' என்று கோஷமிட்டது.

அக்டோபர் மாதம் முப்பதாம் தேதி லாகூருக்கு வந்த சைமன் கமிஷனுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க லாஜபதி ராயின் தலைமையில் ஓர் ஊர்வலம் புறப்பட்டது. அமைதி ஊர்வலம் அது. மிருகத்தனமாக நடந்து கொண்டு அமைதியைக் குலைத்தது போலீஸ் படை. வேண்டுமென்றே கண்களை மூடிக்கொண்டு லாஜபதி ராயை நையப் புடைத்து விட்டது. அத்தனை தடியடிகளையும் மார்பில் தாங்கினார் அந்த வீரர்.

மார்பில் பட்ட அந்த அடி அவருக்கு நமனை முடித்தது. நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் நாட்டுக்குப் பணி புரிவதையே தன் வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டிருந்த பாஞ்சாலச் சிங்கம் ஓய்ந்து படுத்து விட்டது. நவம்பர் பதினேழாந் தேதி காலை அதன் உயிரும் உடலை விட்டுப் பிரிந்து விட்டது. உயிர் பிரிந்து உடல் போனாலும் பர்த்ருஹரி கூறுவது போல் புகழுடம்புக்கு என்றுமே அழிவு கிடையாது அல்லவா?

இப்படி நாட்டுச் சேவை செய்த பெரியாரை உலகம் உள்ளளவும் மறக்காது. தொன்றுதொட்ட காலமாக நம் நாட்டில் மூன்றுக்கு ஒரு பெருமை உண்டு. ஒன்றே தெய்வம் என்றாலும் அது ஆற்றும் செயல்கள் மூன்று. குணங்கள் மூன்று. இந்த மூன்றின் பெருமையைக் கூறுவதே போல அரசியல் துறையிலும் லால் – பால் – பால் மூவரும் ஒன்றாக இணைந்து புகழ் பெற்றார்கள். முதலில் இடம் பெற்றிருக்கும் லால் என்னும் சொல் லாலா லாஜபதி ராயைக் குறிக்கும். இரண்டாவதான பால் என்னும் சொல் பால கங்காதர திலகரையும் மூன்றாவதான பால் விபின் சந்திர பாலரையும் குறிக்கும். இம்மூவரும் பஞ்சாப், மகாராஷ்டிரம், வங்காளம் ஆகிய வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாயினும் இந்தியாவின் ஒருமையை நிலைநாட்டுபவர்களாகத் திகழ்கின்றனர். இம்மூவரும் அந்தக் காலத்தில் தொந்தியும் தொப்பையுமாக இருப்பார்களாம். எனவே, அந்தக் காலத்து நண்பர்கள் இவர்களைத் 'தொந்தித் திரயம்' என்று கூட வேடிக்கையாகக் குறிப்பிடுவார்களாம். அந்தத் தொந்தித் திரயத்தில் முதல்வராக நிற்கும் லாலா லாஜபதி ராயின் நூறாவது பிறந்த தின விழாவைக் கொண்டாடும் இந்த நாளில் பாடுபட்டுத் தேடிய பாரத சுதந்திரத்தைப் பறிகொடுக்காமல் ஒற்றுமையுடன் பேணிப் பாதுகாக்கும் ஆற்றலைப் பெறுவோமாக!



புதிய திருப்பம்

வாய் ஒன்று: சொல் இரண்டு விதம் என்பார்கள். அது இலங்கை கிரிக்கெட் கோஷ்டியினருக்கும் இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியினருக்கும் நடந்த டெஸ்ட் பந்தயங்களில் நிருபணமாயிற்று. முதல் டெஸ்டில் காப்டன் பட்டாடியின் தலைமையில் ஆடிய இந்தியக் கோஷ்டியினர் இலங்கைக் குழுவுக்கு இன்னிங்ஸ் தோல்வி கொடுத்தபோது கிரிக்கெட் ரசிகர்கள் ''இந்தச் சின்ன இலங்கைக் கோஷ்டிக்கு எதிராக நமது கிரிக்கெட் ஜாம்பவான்களை ஆடவிட்டிருக்கக் கூடாது. இள ரத்தங்களைத் தேர்ந்தெடுத்து ஆட விட்டிருக்கலாமே?'' என்று அபிப்பிராயம் தெரிவித்தனர். இரண்டாவது டெஸ்டில் இளைஞர்களான வேங்கடராகவனும் போதரும் இடம் பெற்றனர். இதிலும் இலங்கை தோல்வியுற்றதும் மூன்றாவது அகமதாபாத் டெஸ்டில் ஐந்து இளம் ஆட்டக்காரர்களுக்கு இடம் கொடுத்தார்கள். இதற்குள் இலங்கைக் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் டெஸ்ட் அநுபவம் நன்கு பெற்று, மூன்றாவது டெஸ்டில் இந்தியாவை வென்று கிரிக்கெட் ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தியது மட்டுமல்ல; 'டெஸ்டில் இப்படி விஷப் பரீட்சை செய்ய வேண்டுமா?' என்ற கேள்வியையும் எழுப்பியது.

அது எப்படி இருந்தாலும் டெஸ்டில் புது இளைஞர்கள் இடம் பெற்றதும், முதன் முறையாக, இலங்கை கிரிக்கெட் கோஷ்டியினர் வெற்றி பெற்றதும் கிரிக்கெட் சகாப்தத்தில் புதிய திருப்பங்களாகும்.

இப்பொழுது எந்த நிகழ்ச்சியும் ஒரு பெரும் பிரமுகரின் முன்னிலையில் நிகழ்வது வழக்கமாகிக் கொண்டு வருகிறது. சென்னை. நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்ற இலங்கை — சென்னை கிரிக்கெட் ஆட்டம் மூன்று நாட்கள் இளம் சின்னஞ் சிறுவர்களின் முன்னால் நிகழ்ந்தது ஓர் அதிசயக் காட்சியாக இருந்தது. வருங்காலக் கிரிக்கெட் வீரர்களாயிற்றே அவர்கள்?

இலங்கை ஆட்டக்காரர்கள்:

1. பொலன்னவிட்ட. 2. காப்டன் டிஸைரா. 3. எட்ரூஸ். 4. தேவராஜா. 5 எச் ஐ. பெர்னாண்டோ. 6. ரஞ்சித் பெர்னாண்டோ. 7. ஹீவர்ன். 8. எட்வர்டு. 9. பெடரிக். 10. சண்முகம். 11. வீரசிங்கே.

"ஸார்! அதோ போர்ன்விட்டா!" என்று ஒரு ரசிகர் கூவினார்.

"அப்படியா? கூப்பிடுங்கள்..!"

"ஸார்! ஸார்! அது போர்ன் விட்டா இல்லை; பொலன்னவிட்டா! இலங்கையின் அபாரமான பந்துவீச்சுக்காரர்!"

"ஓஹோ! இன்று அவர் பந்து வீச்சுத்தான் நமக்கு டானிக்!"

சென்னையில் நடைபெற்ற இந்த மூன்று நாள் ஆட்டத்தை டெஸ்ட் என்று குறிப்பிடவில்லையே தவிர, ஆட்டமும் டெஸ்டைப் போல் ரஸிகர்களுக்கு விருந்தளித்தது. இலங்கை ஆட்டக்காரர்களான காப்டன் டிஸைரா, தேவராஜா ஆகியோரின் பிரமாதமான 'பாட்டிங்'கும் பொலன்னவிட்டா, சண்முகம், பெடரிக் ஆகியோரின் பந்து வீச்சும் தரமாக இருந்தன.

சென்னை கிரிக்கெட் ஆட்டத்துக்கு மூன்று சகோதரர்கள் பெருமை தருகிறார்கள்; கிருபால் சிங், மில்கா சிங், சத்வந்தர் சிங் ஆகிய 'டிரையோ கிரிக்கெட்' காரர்கள்தான்! சினிமா புது முகம் போல் கிரிக்கெட் டெஸ்ட் புது முகம் வேங்கடராகவன் இந்த ஆட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். நம் சென்னை ஆட்டக்காரர்களான பெலியப்பா, மில்கா சிங், பிரபாகர், எஸ். வி. எஸ். மணி ஆகியோர் எடுத்த ரன்களே ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடிக்கக் காரணமாயமைந்தன. பிரபாகர் அடித்த ஒரு ஸிக்ஸர் இலங்கை ஆட்டக்காரர்களையும் பிரமிக்க வைத்தது. மேற்கிந்தியக் கோஷ்டியினரைப் போல் ரன்கள் குவிப்பதிலும் ஆட்டத்துக்கு விறுவிறுப்பூட்டி முடிவு தேடுவதிலும் அக்கறை செலுத்தும் இலங்கை ஆட்டக்காரர்களை முன்னேற விடாமல் தம் பௌலிங் சாமர்த்தியத்தினால் தடுத்து நிறுத்தியவர்கள் கிருபால் சிங், குமார், சத்வந்தர் சிங், தாமஸ், வேங்கடராகவன் ஆகியோராவர்.

இந்த டெஸ்ட் பந்தயங்களையும் ஆட்டங்களையும், இலங்கையின் புதிய கிரிக்கெட் சகாப்தத்துக்கு அஸ்திவாரமாகக் கருதிப் பெருமைப்பட்டார்கள் இலங்கை ஆட்டக்காரர்கள். — குண்டுமணி

சென்னை ஆட்டக்காரர்கள்:

1. காப்டன் கிருபால் சிங் 2. வி. வி. குமார் 3. சத்வந்தர் சிங் 4. மில்கா சிங் 5. பலராம் 6. வேங்கடராகவன் 7. எஸ். வி. எஸ். மணி 8. பிரபாகர் 9. தாமஸ் 10. பெல்லியப்பா 11. ஜகதீஷ்.



திருச்சியில் ஓர் எழுச்சி

திருச்சி தேவர் மன்றம் சென்ற ஞாயிற்றுக் கிழமை நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. மன்றத்தின் மேல் பகுதியில் கூட்டம் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தது. இரு பக்கங்களில் உள்ள திறந்த வராந்தாவிலும் மக்கள் சுவர் வைத்த மாதிரி நெருக்கி நின்றுகொண்டிருந்தனர்.

அப்படி இங்கு வந்தவர்கள் சும்மா வந்துவிடவில்லை. நுழைவுக்கட்டணம் எட்டணாவோ இரண்டு ரூபாயோ செலுத்தி வந்திருந்தனர். மன்றத்துக்குள் இனி இடமில்லை என்று நுழைய அனுமதி மறுக்கப்பட்ட ஆயிரக் கணக்கானவர்கள் தெருவெல்லாம் கூடி நின்று கேட்டுக் கொண்டிருந்தனர். காலை ஒன்பது மணியிலிருந்து மாலை ஆறு மணிவரை இப்படி மக்கள் தீவிர உணர்ச்சியுடன் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் அது என்ன நிகழ்ச்சியாக இருக்கும் என்று சொல்லாமலே விளங்கிவிடும்.

தென்னாட்டு மக்களின் உணர்ச்சிகளை ஒருமுகப்படுத்தும் விஷயம் ஹிந்தி ஆட்சி மொழியாவதுதான். அதை எப்படியாகிலும் தடுத்து நிறுத்த வேண்டும் என்பது பற்றித்தான் இன்று தென்னக மக்கள் எல்லோரும் தீவிரமாகச் சிந்தித்து வருகிறார்கள்.

''திராவிட முன்னேற்றக் கழகத்தார் எந்தப் பிரிவினையைக் கோரி வந்தனரோ, அதையே இன்றைய காங்கிரஸ் அரசாங்கம் செய்யத் தொடங்கி விட்டது. உத்தரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், பீகார்- ஆகிய நான்கு ராஜ்யங்களிடையேயும் மத்திய அரசாங்கம் இந்த ஜனவரி 26 முதல் ஹிந்தியிலேயே அரசாங்க அலுவல்கள் நடத்த முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது. ஆகவே, நண்பர் நெடுஞ்செழியன் அவர்களே, உங்கள் காரியத்தைக் காங்கிரஸ் அரசாங்கமே இன்று நிறைவேற்றி வைக்கிறது!'' என்று ராஜாஜி சொன்னபோது திருச்சி தேவர் மன்றம் இடிந்து விழுந்துவிடுமோ என்னும் அளவுக்குக் கரகோஷம் எழுந்தது.

''குடியரசுத் திருநாளன்று ஹிந்தி ஆட்சி மொழியாகத் திணிக்கப்படுவதைப் பற்றி எனக்குத் துயரம் தி. மு. க.வினரை விட இரண்டு மடங்கு அதிகம். அதில் சந்தேகமில்லை. அன்று காங்கிரஸ்காரர்கள் ஏற்றும் தேசக் கொடி துக்கக் கொடியாகவே ஹிந்தி பேசாத மக்களுக்கெல்லாம் தோன்றும். இதற்காகத் தனிக் கொடியே தேவையில்லை. இப்படிப் புனிதமான தேசக் கொடியைத் துயரத்துக்குச் சின்னமாக்கி விட்டார்களே!'' என்று ராஜாஜி மிகவும் வருத்தப்பட்டார்.

பிற்பகலில் பேசிய நாவலர் திரு நெடுஞ்செழியன் அவர்கள் ''குடியரசுத் திருநாளைத் துக்க தினமாகக் கொண்டாட வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கமல்ல. ஹிந்தி திணிக்கும் நாளாக இருப்பதால்தான் துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டியிருக்கிறது. ஹிந்தி திணிக்கும் நாளைக் குடியரசுத் திருநாளுக்கு முந்தியோ பிந்தியோ வைத்துக் கொண்டிருந்தால் குடியரசுத் திருநாளின் மதிப்புக் கெடாமல் இருந்திருக்கும். ஆட்சியாளர்கள்தான் குடியரசுத் திருநாளின் மதிப்பைக் குறைக்கும் பணிக்குப் பொறுப்பாளர்களே தவிர நாங்களல்ல'' என்றார்.

மகாநாட்டில் தமிழ்க் கொடியை ஏற்றுவித்துக் கருமுத்து தியாகராச செட்டியார் அருமையானதோர் உரை நிகழ்த்தினார்.

வரவேற்புரை நிகழ்த்திய கோவைத் தொழிலதிபர் திரு ஜி. டி. நாயுடு அவர்கள் பல அரிய கருத்துக்கள் கொண்ட நீண்டதோர் உரையை நிகழ்த்தினார். அதில் ஒரு பகுதியைப் பாருங்கள்:

''எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. பிள்ளை வரம் பெறக் கணவனை அழைத்துக்கொண்டு கடலில் நீராடச் சென்றாளாம் ஒருத்தி. சென்றவள் கணவனையே கடலில் இழந்துவிட்டு வீடு வந்தாளாம். அது போல இந்திய ஒற்றுமைக்காகப் புகுத்தப்படும் இந்தி மொழியால் இப்போது இருக்கும் ஒற்றுமையையும் அடியோடு இழந்து ஒருவருக்கொருவர் எதிரிகளாக ஆகப்போகின்றோமே என்று நினைந்து நினைந்து வருந்துகின்றேன்.''

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த தமிழவேள் பி. டி. ராஜன் அவர்கள், ''இந்தியா ஒரு நாடு; நாம் அனைவரும் ஒரு நாட்டினர் என்னும் எண்ணத்தை நம்மிடையே உண்டாக்கியது ஆங்கில மொழியேயாகும்'' என்றார்.

மகாநாட்டில் திரு சா. கணேசன் திரு மூக்கையா தேவர், எம். எல். ஏ. அவர்கள், முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் ஜனாப் இஸ்மாயில், நாம் தமிழர் கட்சித் தலைவர் சி.பா. ஆதித்தனார், மதுரை திரு எல். கிருஷ்ணசாமி பாரதியார் அவர்கள் - இப்படி இன்னும் பலர் பங்கெடுத்துக்கொண்டு அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள்.

நன்றியுரை பகர்ந்த திரு கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள், இம்மகாநாட்டைப் போல், தொடர்ந்து, கோவை, தஞ்சாவூர், சென்னை ஆகிய நகரங்களிலும் நடத்தப் போவதாகத் தெரிவித்தார்.

இம்மகாநாட்டை இவ்வளவு வெற்றிகரமாக நடத்திய திரு கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்களுக்கு நன்றி தெரிவித்த ராஜாஜி ஒரு கருத்தை வெளியிட்டார்.

''வட நாட்டினர் தமது ஹிந்தி வெறியில் ஆங்கிலத்தைப் புறக்கணித்தால் புறக்கணித்துவிட்டுப் போகட்டும். ஆனால் அந்தத் தவற்றைத் தென்னகம் செய்யாமல் முன்போலவே தென்னக மக்கள் ஆங்கிலத்தை நன்கு பயின்று பயன்படுத்தி வந்தார்களானால் பிரிட்டனை விட்டுப் பிரிந்த அமெரிக்கா உலக அரசியலில் எப்படி பிரிட்டனைவிட முக்கிய நாடாகிவிட்டதோ அம்மாதிரியே தென்னகம் பாரத அரசியலிலும் 'பொருளாதாரத்திலும் வடநாட்டைவிட முன்னேற்றமடைந்து முன்னணியில் நிற்கும்'' என்றார்.

பாமினிப் பார்வை

தன் சபதம்
இத்தனை குரூரமாக
நிறைவேறும் என்று
அவள் நினைக்கவே
யில்லை

27. இதயத்தில் பாய்ந்த ஈட்டி

மகாமண்டலேசுவரரான ராமராயர் எதிரிகளால் கைது செய்யப்பட்டதுமே களத்தில் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. எத்தனையோ பெரிய பெரிய வீரர்களும், பல போர்களில் வெற்றி கண்ட தளபதிகளும் இருந்தும் விஜயநகர சாம்ராஜ்யத்தின் படை வெள்ளம் ராமராயரின் வீரத்திலேயே நம்பிக்கை கொண்டிருந்தது. அவரது தலைமையையே ஒரு பெரிய தற்காப்பாக, அரணாக எண்ணி வெற்றியிலே அசைக்க முடியாத உறுதியோடிருந்தார்கள் வீரர்கள். அத்தகைய மாவீரரின் தலையை ஈட்டி முனையிலே எதிரியின் கையில் கண்டபோது பீதி அவர்களைப் பற்றிக் கொண்டது. கல் சுவராக நின்று விரோதிகளைக் கலங்க வைத்துக் கொண்டிருந்த விஜயநகரத்து வீரர் அடுத்த விநாடியே சூறாவளிக் காற்றிடைப்பட்ட தூசியானார்கள். அவர்களின் வீரம், வலு, ஆண்மை, நம்பிக்கை, உறுதி, ஆற்றல் அத்தனையையும் உறிஞ்சிக் கொண்டது அந்தக் காட்சி.

'வெற்றி அல்லது வீரமரணம்' என்ற வேகங்கொண்ட விஜயநகரத்துப் படைகளைக் கிலியும் குழப்பமும் கௌவிக் கொண்டன. துளைக்க முடியாத படையணி பிளவுபட்டுப் பின்வாங்கியது. ஒப்பற்ற வீரர்கள் உடைபட்டு ஓடத் தலைப்பட்டார்கள். பேரரசின் பக்கமிருந்த முஸ்லிம் தளபதிகளின் துரோகமும், ராமராயரின் மறைவும் அவர்களிடையே மகத்தான மாறுதலை உண்டாக்கி விட்டன. வெற்றி தோல்விகள் இடம் மாறலாயின. வெற்றியில் நம்பிக்கையே இல்லாதவர்களைத் தேடி வெற்றி தேவதை விறு நடை போட்டது. தோல்வியைப் பற்றியே சிந்திக்காதவர்களைப் பீதியும் பதற்றமும் தோல்வியை நோக்கித் துரத்தலாயின. நினைக்காதது நடந்தபோது, கிடைக்காதது கிடைத்த போது மகிழ்ச்சி வெறிகொண்ட பாமினிப் படைகளின் பலம் பன்மடங்காயிற்று. தலைவனிழந்த அதிர்ச்சியைத் தாங்காது தறிகெட்டுத் தடுமாறிச் சிதறி ஓடும் விஜயநகரத்து வீரர்களைப் பாமினிப் படை வீரர் வளைத்துக் கொண்டு கொன்று குவிக்கலானார்கள் குரூரமாக. குருதி வெள்ளமாக ஓடிக் களத்திலே ரத்தினக் கம்பளம் விரித்தான பிறகு அடுத்துள்ள ஆற்று நீரைச் செஞ்சாந்துக் குழம்பாக்கி ஓட வைத்துக் கொண்டிருந்தது.

வெற்றியின் போதையிலே வெறிச் செயலில் ஈடுபட்டுள்ள வீரர்களை இஸ்லாமியத் தளபதிகளால்கூடக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதே போலக் குழப்பமடைந்து ஓடும் விஜயநகரப் படைகளைத் தடுத்து நிறுத்தி ஒன்று சேர்த்து எதிர்த்துத் தாக்கும்படி செய்யும் ஆற்றல், ஆர்வம் எந்த இந்து சேனாபதிக்கும் இல்லை. கொடுமை நிகழ்ந்தது. குழப்பம் ஏற்பட்டது, படையணியின் நடுப்பகுதியில்தான். ஒளி வீசிக் கொண்டிருந்த சுடர் அணைந்த அடுத்த கணமே இருள் வந்து கவிந்து கொள்ளுவதுபோல, படையணியின் எல்லாப் பகுதிகளிலும் இந்த நடுக்கம் விஷத்தைப் போல வியாபித்து விட்டது. ஆயுதம் தாங்கி நின்ற அத்தனை பேருமே, விரோதியை வெற்றி கொள்ள வேண்டும் என்ற வீராவேசத்துடன் போரிட்டுக் கொண்டிருந்த 'வீரர்கள் அத்தனை பேருமே இப்போது உயிர் பிழைக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் ஓட்டமெடுக்கலானார்கள். 'ஏதோ நடக்காதது நடந்து விட்டது. விபரீதம் விளைந்து விட்டது. மகா மண்டலேசுவரர் இறந்து விட்டார். இனி வெற்றிக்கு வழி இல்லை' என்று ஓடுபவர்களில் ஒருசாரார் ஓலமிட்டது பீதியையும் குழப்பத்தையும் மிகையாக்கிவிட்டது. அணை உடைந்த வெள்ளம் போலச் சிதறியோடும் வீரர்களைத் தடுத்து நிறுத்தித் தற்காப்புக்கான முயற்சிகளில் யாராலும் ஈடுபடுத்த முடியவில்லை. சுழலில் சிக்கிய துரும்பாகப் படை வீரர்களுடன் படைத் தலைவர்களும் ஓடத்தான் வேண்டி இருந்தது. தலைசிறந்ததொரு சாம்ராஜ்யத்துக்கு இத்தகையதொரு கதி நேருவானேன்? பாமினி சுல்தான்களின் பக்கம் அல்லாஹ்வின் அருள் இருந்தது. விஜயநகரத்துக்கு வெற்றி தேடித் தந்து அருள் பாலிக்கும் விருபாட்சர் எங்கோ ஒடிஒளிந்து கொண்டு விட்டார். அரவீட்டாரை ஆண்டவன் கைவிட்டு விட்டான். விதி எட்ட நின்று கொண்டு கைகொட்டிச் சிரித்துக் கொண்டிருந்தது' என்றுதான் இதற்குப் பதில் கூற வேண்டி இருக்கிறது.

ஓடும் படைகளைக் கண்டு ஒன்றும் செய்ய முடியாமல் தவித்தான் வேங்கடாத்திரி. அப்படி அவர்களை ஓட வைத்த செய்தி அவன் உயிரையே குடிப்பதாக இருந்தது. 'என் அண்ணாவா கைதியானார்? இருக்கவே இருக்காது! அரவீட்டு ராமராயரா சிறைப்



பட்டார்? சிந்திக்கவே முடியாத செய்தி! விஜயநகரத்தின் மகா மண்டலேசுவரரா மரணமடைந்தார்? பொறாமைக்காரர்களின் கட்டுக்கதை!'' என்று தன் உள்ளத் தவிப்புக்கு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாலும் ஓடும் படை வீரர்களைக் காணக் காண அவன் நம்பிக்கை தளரலாயிற்று. ''ஓடாதீர்கள்! நில்லுங்கள். ஓடினால் உயிர் பிழைக்க முடியாது. எதிர்த்து நின்று தாக்குவோமானால் எதிரியை விரட்டலாம். வாழவும் வழியுண்டு'' என்று கட்டளையிட்டான், கத்தினான், ஆணையிட்டான், கர்ஜித்தான். ஆனால் எந்த ஒருவனுடைய ஒரு சொல்லுக்கு ஓராயிரம் வீரர்கள் அடங்கி ஒடுங்கி அடிபணிந்து செயல்படுவார்களோ அந்த வேங்கடாத்திரியை, விஜயநகர சாம்ராஜ்யத்தின் தளபதியை இன்று எந்த வீரனுமே லட்சியம் செய்யவில்லை. ஓடும் இந்து வீரர்களைத் துரத்தி வரும் இஸ்லாமிய வீரர்களின் வாளையும், வேலையும், ஈட்டியையும் தனி ஒருவனாக எத்தனை நேரம்தான் அவனால் சமாளிக்க முடியும்? எத்தனை பேர்களைத்தான் அவன் தன் ஒரு வாளினால் கொன்று குவிக்க முடியும்? பாதுகாப்புப் போர் நடத்தவோ, சாம்ராஜ்யத்துக்குப் போகும் பாதைகளைக்

காத்துப் பகைவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்க [illegible] வீரர்களின் உதவியும் ஒத்துழைப்புமற்ற நிலையில் உள்ளம் உடைந்து போனான் தளபதி வேங்கடாத்திரி. பகைவர்களால் வெல்ல முடியாத வேங்கடாத்திரி இந்து சாம்ராஜ்யத்துக்கு நேர்ந்த இழிநிலையைத் துடைக்க முடியாத துக்கத்தினால் துடித்துக் கொண்டிருக்கும் போது எங்கிருந்தோ ஒரு ஈட்டி அவன் இதயத்தை நோக்கிப் பாய்ந்து வந்தது. அதைத் தன் கைவாளினால் தடுத்து வெட்டி வீழ்த்தினான். ஆனாலும் அது தன் வேலையைச் செய்து முடித்த பிறகே முறிந்து விழுந்தது. இதயத்திலே பாய்ந்த ஈட்டியை இறுக்கிப் பிடித்துக் கொண்ட போது அவன் நினைவிலே ஆயிஷா வந்து நின்றாள். அப்போது அவன் இதயத்திலிருந்து குருதியோடு ஆத்திரமும் கொப்புளித்து வந்தது. ''துரோகியை என் சகோதரியாகக் கொண்டேன். பழி தீர்த்துக் கொள்ளக் காத்திருக்கும் பாமினிப் பாவை அவள் என்பதை அறியாமல் அவளிடம் அன்பு பாராட்டினேன். அதன் பலன்.....?'' அவன் மூச்சுத் திணறியது.

'நான் என் முத்திரை மோதிரத்தை அவளிடம் கொடுக்காதிருந்திருந்தால்? பகைவர்களின் ஒற்றன் பாதாளச் சிறையிலிருந்து தப்பாமலிருந்திருப்பான்? அவ்வுறு திட்டமிட்டபடி, சித்திஹாஸன் கூட்டணிப் படைகளை இங்குவிகி படுகைக்குக் கொண்டு வந்து குவித்திருப்பான். பாமினிப் படைகள் அங்கே படுகொலைசெய்யப்பட்டு அழிந்திருக்கும். இன்றைய நிலை ஏற்பட்டிருக்காது' என்ற நினைவிலே இத்தனைக்கும் காரணமாகி விட்டவளைக் காண வேண்டும் என்று வளர்ந்துக் கொண்டிருந்த துடிப்பு வலுப்பட்டது. இனி போர்க் களத்தில் ஏதுமில்லை, வாழ்ந்து பயனில்லை, வாழ்வதற்கும் வகையில்லை என்ற நிலையில் தன் குதிரையைத் தலைநகரை நோக்கித் தட்டி விட்டான். ஈட்டி இதயத்தின் ஓர் ஓரமாகப் பாய்ந்திருந்தாலும், பாய்ந்த அதன் வேகத்தை வாள் கொண்டு தடுத்து விட்டதாலும் அது மெள்ள மெள்ளத் தான் அவன் உயிரைக் குடித்துக் கொண்டிருந்தது. இருந்தாலும் குதிரையின் ஓட்டத்துக்கு அந்த ரணத்தின் இசிவு தாங்க முடியாததாகவே இருந்தது. பல்லைக் கடித்துக் கொண்டு, தடுமாறி ஓடும் படை வெள்ளத்தை முந்திக் கொண்டு, தாறுமாறாக விழுந்து கிடக்கும் சடலங்களைத் தாண்டிக் கொண்டு செல்வது அவனுக்குக் கஷ்டமாகத் தான் இருந்தது. போர்க்களத்திலிருந்து வெற்றி வாகைசூடி வீறுநடை போட்டபடி வரக் கூடியவன் குருதி வழியக் குற்றுயிரும் குலை உயிருமாக..... புறமுதுகு காட்டியா ஓடுகிறான்? இல்லையே. வீர மரணத்தை ஏற்றுக் கொண்டபின், தான் பிறந்த புண்ணிய மண்ணிலே போய் விழுந்து, தன்னை வளர்த்த துங்கபத்திரையாற்றங்கரையிலே அதன் மடியிலே விழுந்து மரணத்தைத் தழுவ அல்லவா ஓடிக் கொண்டிருக்கிறான்!

வெற்றிகொண்டதில் மகிழ்ச்சியானாலும் **தோற்று ஓடும் வீரர்களைத் துரத்திச் சென்று** கொன்று குவிக்கும் இஸ்லாமிய வீரர்களின் கொடுஞ் செயலைக் கண்டு வெறுப்படைந்து வேதனையுற்றுத் தடுத்து நிறுத்த முயன்று பயனில்லாது பார்வையை நாலா திசையிலும் செலுத்திப் படுகொலை நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே தூரத்தில் ஒரு குதிரை வீரன் கூட்டத்தில் வழி வகுத்துக் கொண்டு தப்பி ஓடுவதைக் கண்டான் பூசப்கான். அவன் நினைவிலே அப்போது விஜயநகரத்திலே தனித்திருக்கிறாள் ஆயிஷாவும் அவளை அடையவே விரைகிறான் களத்திலிருந்து தப்பிச் செல்லும் இந்த வீரன் என்ற எண்ணமுமே பளிச்சிட்டது. ஆயிஷா தன்னுடையவள் என்ற உரிமையிலே அது இருமலை என்ற அவசர முடிவுக்கும் வந்து விட்டான் அவன். காரணம் இருமலையின் குணத்தைப் பற்றி அவள் அவனிடம் உருவாக்கி இருந்த காட்சிகள்தான். வெற்றி கொண்ட வீரர் தன்னிச்சைப்படி செயல் புரியும் களத்திலே இனி தனக்கு வேலை இல்லை என்ற முடிவோடு தன் இதயம் கவர்ந்தவளைத் இருமலையின் பிடியிலிருந்து விடுதலை செய்து வர வேண்டும் என்ற எண்ணத்துடன் அவனைப் பின்தொடரலானான். ஆனால் அவன் பின்பற்றிச் சென்றது இருமலையை அல்ல. வேங்கடாத்திரியை. அவன் நினைத்தபடி இருமலையும் களத்திலிருந்து தலைநகரை நோக்கித் தலைதெறிக்க ஓடிக் கொண்டுதான் இருந்தான். ஆனால் வேறு மார்க்கமாக, வேறு இடத்தில், மாறுபட்ட நினைவுகளோடு!

முன்னே செல்லும் வீரன், விரைவாகச் செல்ல விரும்பி ராஜபாட்டையிலிருந்து ஒற்றையடிப் பாதையொன்றிலே தன் குதிரையை விரட்டிச் செல்வதைக் கண்ட பூசப்கானும் விடாமல் அவனைத் தொடரலானான். அப்போது மாலை மயங்கி இருள் கவியும் வேளையாகி விட்டது. அந்த வீரனின் குதிரையோ அசுர வேகத்தில் பாய்ந்து கொண்டிருந்தது. வேகத்திலே தன் குதிரையை மிஞ்சக் கூடிய குதிரையே கிடையாது என்று எண்ணியிருந்த பூசப்கானுக்கு ஏமாற்றமாக இருந்தது, முன்னால் விரையும் குதிரையின் வேகம். இருளை விரட்டும் நிலவின் வெண்ணொளி வீச இன்னும் நேரமிருந்தது. இருளிலே அவன் தன் பார்வையிலிருந்து தப்பி விடுவானோ என்ற பதற்றம் ஏற்பட்டது அவனுக்கு. தன்னை மற்றொரு குதிரை தொடருகிறது என்பதை அறிந்தும் திரும்பிப் பார்க்காமல் விரட்டிக் கொண்டு செல்லும் அவன் நிலை ஆச்சரியத்தைக் கொடுத்தது. தன் குதிரையை எவ்வளவு வேகமாகச் செலுத்தியும்கூட அவனை அணுக முடியவில்லை. அதனால் ஆத்திரமடைந்த பூசப்கான் தனது குத்து வாளை எடுத்துக் குறி பார்த்து வீசினான் அவன் மீது. குறி தவறவில்லை. ஆனால் குதிரை வீரன் முதுகிலே வாள் பதிந்த போது அவன் உடல் துடித்து நிமிர்ந்து தணிந்தது. அவ்வளவுதான். வேதனை ஒலிகூட எழுப்ப வில்லை, வேகத்தையும் குறைக்க வில்லை. ஈட்டி பாய்ந்த இதயத்தின் இசிவைவிடக் குத்துவாளின் கொடுமை பெரிதாகப் படவில்லை போலும் வேங்கடாத்**திரிக்கு! ஆவி பிரியுமுன் ஆயிஷாவைச் சந்**

சகல வீட்டு வசதிகளுடனும் சுகமான பிரயாணத்திற்கு

SCI


தி ஷிப்பிங் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்

(ஒரு இந்திய அரசாங்கத்தின் நிறுவனம்)

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்:

ஸ்டீல் கிரீட் ஹவுஸ் 4வது மாடி, தின்ஷாவாச்சா ரோடு, பம்பாய்-1

சென்னை - நாகப்பட்டினம் - ஸ்ட்ரெயிட்ஸ்



t. S. S. ஸ்டேட் ஆப் மதராஸ்

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
9-2-1965	10-2-1965


அன்று புறப்படும்

இதர விவரங்களுக்கு கீழ்க்கண்ட ஏஜண்டுகளை அணுகவும்

K. P. V. ஷேக் முகம்மது ராவுத்தர் & கோ.

41, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1
தபால் பெட்டி நெ. 1264
போன்: 22761-3 தந்தி: "SHIPINDIA"

பண்டகசாலை
நாகப்பட்டினம்
போன்: 72 தந்தி: "SHIPINDIA"



நித்துவிட வேண்டும் என்ற ஆவலோடு குதிரையின் விலாவிலே கால்களை உதைத்து அதன் வேகத்தை அதிகமாக்கினான் அவன்.

வீரர்களை எல்லாம் போர்க்களத்துக்கு அனுப்பித்து விட்டு வெறிச்சோடிக் கிடந்த விஜய நகரத்திலே வேதனை கப்பிக் கிடந்த உள்ளத்தோடு உலவி வந்தாள் ஆயிஷா. அந்தப்புரத்தில் அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை. வேங்கடாத்திரி திரும்பி வரும்போது, அவன் நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்துக்கும் தான் தகுதியற்றவள் என்ற உண்மையை அறிந்தே வருவான். அப்படி வரும் அவன் முகத்தில் எப்படி விழிப்பது, என்ன பதில் சொல்வது என்று ஒருபுறம் உள்ளம் நடுங்கினாலும் மறுபுறம்! அவனோடு வாதாடித் தன் செய்கை குற்றமற்றது என்று நிரூபிப்பது எப்படி என்பதைப் பற்றியும் திட்டமிட்டுக் கொண்டிருந்தது. பலமற்ற போலியான அந்த வாதத்தை எண்ணிய போது சில சமயங்களில் அவளுக்கே பயமாகவும் இருந்தது. யாருக்காக இந்தத் தவற்றைச் செய்தாளோ அவனது நினைவினால் நிரம்பிய இதயமோ ஏங்கித் தவிக்கலாயிற்று. இப்படிப் பலதரப்பட்ட உணர்ச்சிகளால் உலைச்சலுற்ற உள்ளத்துக்கு இதமளிக்கும் இடத்தைத் தேடிப் போனாள் ஆயிஷா. பல சோதனைகளுக்கு ஆளாகி வேதனையால் வாடிக் கிடந்த அவள் வாழ்விற்கு வானமுதாக வந்த யூசப்கானைச் சந்தித்துச் சல்லாபித்த அந்த இடம்தான் அது. விஷமாக வெறுத்த விஜயநகரத்திலேயே அந்த ஒரு இடத்துக்குத்தான் அவள் இப்போதெல்லாம் அடிக்கடி விரும்பிச் செல்கிறாள்.

அன்றும் அப்படித்தான் பால்மழை பொழியும் நிலவிலே அந்த வெண் மணற்பரப்பையே வெறித்து நோக்கியபடி வீற்றிருந்தாள். அவள் உள்ளத் திரையிலே யூசப்கானோடு ஆடிய காதல் நாடகத்தின் காட்சிகள் நகர்ந்து கொண்டிருந்தன. அப்போது அந்த நிசப்தமான சூழ்நிலையைக் குதிரையின் குளம்பொலி அதிர வைத்தது.

போர்க்களத்திலே மனித வேட்டையாடி மகிழ்ந்து கொண்டிருக்கும் விரோதிகளிடமிருந்து விலகி, வேறு மார்க்கமாகத் தலைநகரை நோக்கித் தவிப்புடன் வந்து கொண்டிருந்த வேங்கடாத்திரிதான் ஆயிஷாவை நெருங்கிக் கொண்டிருந்தான். துங்கபத்திரையாற்றைக் கடந்ததுமே அவனுக்கு மூச்சு முட்டியது. கண்கள் பஞ்சடைந்தன.



கணவன்: நீ காப்பி போட ஆரம்பிச்சா என் மனசு திக்கு திக்குன்னு அடிச்சுக்கும்!

மனைவி: நான் என்ன அவ்வளவு மோசமாகவா காப்பி போடறேன்?

கணவன்: இல்லேடி! காப்பி 'திக்கா' இருக்கணுமேன்னு மனசு திக்கு திக்குன்னு அடிச்சுக்கும்!

அவன் இருந்த நிலையில் வேறு யாராலுமே அந்த நெடுந் தூரப் பிரயாணத்தை மேற்கொண்டிருக்க முடியாது. உடலின் வலுவோடு உள்ளத்தின் உறுதியும்தான் அவனை இன்னும் உயிரோடு வைத்திருந்தன. ஈட்டி பதிந்த இதயத்திலிருந்து அணு அணுவாகக் கசியும் உயிர் உடல் கூட்டிலிருந்து ஓடிவிடாமல் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தான். அது மட்டுமானாலும்கூட இன்னும் கொஞ்ச நேரம் அவனால் வாழ முடியும். யூசப்கான் வீசிய குத்துவாள் வேறு மறு பக்கத்தில் மரணத்தின் மற்றொரு வாயிலைத் திறந்திருந்தது. தன் நிலை தப்புவதற்குள் அரண்மனையை அடைந்து விட வேண்டும் என்ற ஆதுரத்தோடு குதிரையை விரட்டிக் கொண்டு வந்தவனின் பார்வை சற்றுத் தூரத்தில் தெரிந்த காட்சியில் பதிந்த போது...?

நிலவிலே குளித்தபடி அங்கே அந்தத் தனிமையில் அவன் தேடி ஓடி வரும் ஆயிஷாவே உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவனுக்குத் தன் கண்களின் பார்க்கும் சக்தியில் சந்தேகம் உண்டாகி விட்டது. தன் உள்ளத்தின் தவிப்பே உருவெளித் தோற்றமாக அப்படி அங்கே தெரிகிறதா? அல்லது தெய்வமே தன் நிலைக்கு இரங்கி அவளை இங்கே அழைத்து வந்திருக்கிறதா? தன் முழுத் தெம்பையும், உயிர்த் துடிப்பையும் ஒன்று சேர்த்துப் புகை மண்டிய பார்வைக்குப் புதிய ஒளி ஏற்படும்படி செய்துகொண்டு பார்த்தான். கனவல்ல, கற்பனையல்ல, பிரமையல்ல, பொய்த் தோற்றமல்ல. அது அவனுடைய ஆயிஷாவேதான்! அந்த ஆனந்த அதிர்ச்சியைத் தாங்கும் சக்தி அப்போது அவன் உடலுக்கு, உயிருக்கு இல்லை. குதிரையிலிருந்து இறங்கியதும் தடுமாறித் தரையில் சரிய இருந்தவன் குதிரையின்மீதே சாய்ந்து நின்று சமாளித்துக் கொண்டான். ''ஆயிஷா....'' என்று தன் ஆர்வத்தை எல்லாம் திரட்டி அழைத்தவனின் குரல் குழறியது.

இத்தனையையும் விளக்குவதற்கு இவ்வளவு நேரம் ஆயிற்றே தவிர குதிரையின் குளம்பொலி கேட்டுத் திரும்பியவளின் முன் வேங்கடாத்திரி வந்து நிற்பதற்குச் சில விநாடிகள்தான் பிடித்தன. அவனை, அவன் நிலையை, இதயத்திலே குத்திட்டு நிற்கும் குருதி தோய்ந்த, உடைந்த ஈட்டியைக் கண்ட ஆயிஷா, "ஐயோ! அண்ணா, இது என்ன கோரம்?" என்று அலறிக் கொண்டு ஓடி வந்தாள். அவள் உடல் நடுங்கியது.

ஆயிஷா அந்த சாம்ராஜ்யத்துக்கு இழைத்த துரோகத்தை அவன் முகத்துக்கு நேரே சொல்லி, தன் அன்புக்கும் நம்பிக்கைக்கும் அருகதையற்ற முறையில் நடந்து கொண்ட நயவஞ்சகத்தைப் பற்றி ஆத்திரம் தீரக் கேட்டு அவளை அழ வைக்க வேண்டும் என்ற ஆவேசத்தோடு கிளம்பிய வேங்கடாத்திரியாக இல்லை அவன் இப்போது. 'நடக்காதது நடந்து விட்டது. இனி எதையும் மாற்றியமைக்க முடியப் போவதில்லை. மரணத்தின் தலைவாசலில் நிற்கும் நான் அவள் மனம் புண்பட நடந்து கொள்வானேன்?'' என்ற விவேகம் அவனுக்கு வரும் வழியிலேயே ஏற்பட்டிருந்தது. அது அவளைப் பார்த்ததும் அவள் அண்ணா என்று பதறிப் போய் அவனை நோக்கி ஓடி வந்ததும் உறுதிப்பட்டது. அவளைக் கடிந்து கொள்ளவோ, வெறுத்து ஒதுக்கி விரட்டவோவா அவன் இத்தனை வேதனையையும் தாங்கிக் கொண்டு வந்திருந்தான் ?

''போர்க்களம் வீரனுக்குப் பூட்டிய ஆபரணங்களோடு வந்திருக்கிறேன் ஆயிஷா. அதைக் கண்டா இப்படிப் பதறுகிறாய் ?'' என்று கேட்டான் தன் குரலில் பதற்றத்தின் சாயலைக் கூடக் காட்டாதபடி. நிற்க முடியாமல் கால்கள் துவண்டன. அதைச் சமாளிக்கக் குதிரையின் பிடரியைப் பற்றிக் கொண்டு நின்றான். அப்போது முதுகிலே குத்திட்டு நின்ற யூசப்கானின் குத்துவாள் குதிரையின் உடலிலே உரசி அதை நெளிய வைத்தது. உயிர் துடிக்க வைக்கும் மரணாவஸ்தையையும் சகித்துக் கொண்டு சிரித்தபடி நின்றான் வேங்கடாத்திரி.

''உங்களை இந்த நிலைக்கு ஆளாக்கிய பாவி யாரண்ணா? ஐயோ !'' என்று ஆயிஷா அரற்றுவதற்கும் வேங்கடாத்திரியைத் தொடர்ந்து வந்த யூசப்கான் அங்கு வருவதற்கும் சரியாக இருந்தது. அழுது குலுங்கும் தன் காதலி 'அண்ணா' என்று அழைத்து அலறுவதைக் கேட்ட போதுதான் அவனுக்குத் தன் தவறு தெரிந்தது. வேங்கடாத்திரியைத் திருமலை என்று எண்ணித் தாக்கி வந்திருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டான். அவசரப்பட்டுக் குத்துவாளையும் வீசித் தன் காதலியின் கண்ணீருக்குக் காரணமாகி விட்டோமே என்ற கழிவிரக்கம் கொண்ட யூசப்கான் ஆயிஷாவின் கேள்விக்குத் தானே பதில் கூறினான்.

''அந்தப் பாவி நான்தான் ஆயிஷா!'' என்று யூசப்கான் குரல் கொடுத்ததும் திடுக்கிட்டுத் திரும்பியவளின் முகத்திலே காதலனைக் கண்ட களிப்பு விகசித்தது. ''நீங்களா?'' என்று கேட்டுச் சிலையானாள் சிங்காரி.

''உன்னைத் துன்புறுத்தத் திருமலைதான் வருகிறான் என்று எண்ணிப் பின்தொடர்ந்து வந்தவன் இவரை அணுக முடியாத ஆத்திரத்திலே குத்துவாளை வீசி விட்டேன். சகோதரர் இருவரையும் நான் சந்தித்ததில்லை. நீ கூறிய அங்க அடையாளங்களைக் கொண்டு முடிவு செய்த நான்தான் தவறு செய்து விட்டேன் ஆயிஷா'' என்று நாத்தழுதழுக்கக் கூறினான் யூசப்கான். வேங்கடாத்திரி அவனுக்கு முதுகைக் காட்டியபடி நின்றிருந்ததால் முன்பக்கத்திலே ஆயிஷா கண்ட காட்சியை அவன் காணவில்லை.

ஆயிஷாவின் கேள்வியும் அதற்குக் கிடைத்த பதிலும் தன்னைத் தொடர்ந்து வந்தவன், பிச்சுவாவை வீசியவன் யார் என்பதையும் தெரிந்து கொண்ட வேங்கடாத்திரி; அந்த நிலையிலும் இரவே விழித்துக் கொள்ளும்படி கடகட வென்று வெண்முத்துப் பற்கள் நிலவிலே ஒளி வீச, வெறி கொண்டவனைப் போலச் சிரித்தான் விஜயநகரத்தின் தளபதி.

அந்தச் சிரிப்பே அவனது மரணத்தை விரைவாக்கி விடுமோ என்று பயந்த ஆயிஷா. ''அண்ணா! இப்படிச் சிரிக்காதீர்கள். இந்த உடல் நிலையில் இது உங்களுக்கு ஏற்றதல்ல'' என்று அவனைத் தாங்கிக்கொள்ள ஓடி வந்தாள்.

குதிரை கொடுத்த ஆதரவில் அசையாமல் நின்றிருந்த வேங்கடாத்திரி மெல்லத் தலையை மட்டும் திருப்பி யூசப்கானைப் பார்த்தான். அந்த நிலவொளியிலே தெரிந்த வேதனை வடியும் முகத்திலிருந்து யூசப்கானின் உள்ளத்தையும் படிக்க முடிந்தது. தாங்கிக் கொள்ள ஓடி வந்த ஆயிஷாவின் கரங்களில் சரிந்தவன், ''ஆயிஷா ! உன் காதலன் எனக்களித்த பரிசை முதலில் முதுகிலிருந்து மெதுவாக உருவி எடு! உன்மடியிலே தலை வைத்துச் சிறிது நேரம் படுக்க ஆசைப்படுகிறேன். பாவம், தான் வீசிய குத்துவாள்தான் என் உயிரைக் குடித்திருக்கிறது என்று எண்ணி வருந்துகிறான் போல் இருக்கிறது உன் அன்பன். என் இதயத்திலே பாய்ந்திருக்கும் கட்டியைப் பற்றி அவனுக்குத் தெரியாது. பின்னிருந்து வாள் வீசி வீழ்த்தி விட்டோமே என்று உன் இதயத்திலே இடம் பெற்றவன் வேதனைப்படவும் செய்வார். ஆனால் என் அண்ணா முஸ்லிம்களிடம் கொண்ட அன்புக்கும் நம்பிக்கைக்கும் அவர்கள் செய்த துரோகத்தைவிட 'இது ஒன்றும் பெரிதல்ல'' என்று அவன் பேசிக் கொண்டிருக்கும் போதே யூசப்கானின் உதவியால் ஆயிஷா அவனை மெல்லத் தன் மடிமீது கிடத்திக் கொண்டாள். அப்போதுதான் யூசப்கானும் அவன் இதயத்திலே செருகிச் சிதைந்து நின்ற கட்டியைக் கண்டான். கட்டி பாய்ந்த இதயத்தோடு இத்தனை தூரம் குதிரையை விரட்டிக் கொண்டு வந்து இன்னமும் தெம்புடன் பேசிக் கொண்டிருக்கும் அவன் உடல் வலுவையும் உள்ளத்தின் உறுதியையும் எண்ணிப் பிரமித்துப் போனான் அவன்.

ஏதும் பேச முடியாத துக்கத்திலே, 'அண்ணா, அண்ணா' என்று கண்ணீர் வழிய அரற்றிக் கொண்டிருந்தாள் ஆயிஷா. அவள் மடிமீது மல்லாந்து படுத்திருந்த வேங்கடாத்திரிக்கு மேல்மூச்சு வாங்கலாயிற்று. அதனால் விம்மித் தணியும் அவன் பரந்த மார்பகத்திலே பதிந்திருந்த கட்டியும் அதற்கேற்ப அசைந்தாடியது. நடுங்கும் கரங்களால் அவன் உயிரைக் குடித்துக் கொண்டிருக்கும் அதைத் தொடப்போன ஆயிஷாவின் கைகளைச் சட்டென்று பற்றிக் கொண்டான் வேங்கடாத்திரி. ''அதைத் தொடாதே, ஆயிஷா! உன்னோடு இன்னும்


சில விநாடிகளாவது பேசிக் கொண்டிருக்க விரும்புகிறேன். அதை அசைத்தால் என் ஆவி பிரிந்து விடும்'' என்ற போது அவன் விம்மி விம்மி அழலானான்.

''ஆயிஷா இதோ பார்த்தாயா?'' என்று அவன் விரல்களைப் பற்றித் தன் இடக்கை விரலில் அணிந்திருந்த — அவளிடம் கொடுத்துச் சென்ற முத்திரை மோதிரத்தின் மீது வைத்தான். பிறகு அவன் முகத்தைப் பார்த்தான். ''நான் உன்னிடம் அன்போடு கொடுத்துச் சென்ற இதை நீ ரொம்ப அலட்சியமாக உபயோகப் படுத்தி விட்டாயே? இதன் மகிமை தெரிந்த உன் காதலன்கூட இதைக் களத்திலே நழுவ விட்டுவிட்டான். ம்... எப்படியோ இது என்னிடம் வந்து சேர்ந்து விட்டது.''

வேங்கடாத்திரி தன் வார்த்தையை முடிக்கு முன் குமுறிக் கொண்டு வரும் அழுகையினால் உடல் குலுங்க அழுதாள் ஆயிஷா. ''அண்ணா! நான் துரோகி. உங்கள் அன்புக்கு அருகதையற்றவள். சுயநலக்காரி. நான் எத்தனை கொடியவள் என்பது எனக்கு இப்போதுதான் தெரிகிறது அண்ணா!'' என்று விம்மியவள், அவன் முகத்தைக் காணும் துணிவில்லாமல் தன் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

''நீ கொடியவளல்ல; சுயநலக்காரியுமல்ல ஆயிஷா. நினைத்த காரியத்தை முடித்துக்கொண்டு விட்டாய். பழிதீர்த்துக் கொண்ட பாமினிப்பாவை நீ! உன் சபதப்படி என் அண்ணா கொல்லப்பட்டார். இந்து சாம்ராஜ்யமும் இஸ்லாமியர்களின் வசப்பட்டு விட்டது.''

கைவரிசை !



குரோதம் கொப்பளிக்கத்தான் இதைச் சொன்னான் வேங்கடாத்திரி. சொன்ன பிறகு தான் சொல்லி இருக்கவேண்டாமோ என்று தாபப் பட்டான்.

பகை முடிக்க வேண்டும், வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டும்; பழிவாங்க வேண்டுமென்று பாடுபடுபவர்கள் எல்லாம் அது நிறைவேறும் போது மனம் மாறி இரக்கமுள்ளவர்களாகத் தான் மாறுகிறார்கள். அதற்கு ஆயிஷா மட்டும் விலக்கா என்ன? வேங்கடாத்திரியின் வார்த்தைகள் அவள் நெஞ்சிலே வேல்களாகப் பாய்ந்தன. அதற்கு அவள் பதில் ஏதும் கூறவில்லை. ஆனால் அவள் கயல் விழிகள் பெருக்கிய கண்ணீர் அவன் கன்னத்திலே சொரிந்தபோது அவன் இதயத்தின் தாபம் கரைந்து போயிற்று.

வேங்கடாத்திரி அணையும் சுடரானான். முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்று உள்ளுணர்வு அவனுக்கு உணர்த்தியது. ஒதுங்கி நின்று வேதனைப் பட்டுக் கொண்டிருக்கும் ஹுசப்பாவை அருகே அழைத்தான். ''என் சகோதரியின் காதலனைவிட்ட உன்னை நான் விரோதியாக நினைக்கவில்லை. அன்பனாக, நண்பனாக ஏற்றுக் கொள்கிறேன். ஒப்பற்ற அழகியான என் சகோதரியை உடைமையாக்கிக் கொள்ளப் போகும் உன்னிடம் ஒன்று வேண்டிக் கொள்கிறேன். போரிலே வெற்றி தோல்வி என்பது விதியின் முடிவு. ஆனால் அதன் பின்விளைவுகள் மனிதர்களின் செயல். வெற்றி கொண்ட நாட்டிலே இஸ்லாமியர்கள் எப்படி நடந்து கொள்ளுவார்கள் என்பதைப் பற்றி நான் அறிவேன். ஏன், இந்த நாடே அறியும். தோல்வி கண்ட தேசங்கள் சொல்லும் அந்தச் சோகக் 'கதைகளை! இனம், மொழி, மதத்தினால் மனிதன் மாறுபட்டிருக்கலாம். ஆனால் கலை எல்லோருக்கும் பொதுவான ஒன்று. இந்துக்கள் கலைப் பொக்கிஷங்களாகத் தங்கள் ஆலயங்களை ஆக்கியிருக்கிறார்கள். கலைகள் செறிந்த அவைகளை அழிப்பதை ரசிக உள்ளம் படைத்த எந்த மனிதனும் விரும்ப மாட்டான். விஜய நகரத்திலே வேவுகாரனாக நுழைந்தாலும் இங்குள்ள கலைச் செல்வங்களைக் கண்டிருப்பாய். அழிவுச் சக்திகளின் நாசக் கரங்களில் சிக்காமல் அவைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பாமினி சுல்தான்களின் அன்புக்குப் பாத்திரமான தளபதி நீ என்று கேள்விப்பட்டேன். ஆகவே உன் காதலியின் சகோதரனின் கடைசி விருப்பத்தை நிறைவேற்றுவதில் சிரமமிருக்காதே?'' என்று கேட்டு நேசக் கரம் நீட்டினான் வேங்கடாத்திரி.

''வெற்றி பெற்றபின் வெறிச் செயல்களை விரும்பாதவன் நான். இந்நாட்டுக்கு அந்நியனான என்றாலும் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு உங்கள் வேண்டுகோளை நிறைவேற்றப் பார்க்கிறேன். விரோதி நாடானாலும் விஜயநகரத்தின் கம்பீரத்திலே கலை நுணுக்கமுள்ள கட்டடங்களிலே என் இதயத்தைப் பறிகொடுத்திருக்கிறேன் நான். ஆகவே....''

அவனை முடிக்க விடவில்லை வேங்கடாத்திரி. ''அது போதும்'' என்று அவன் கைகளைப் பற்றிக் கொண்டான். அதற்குள் அவனுக்கு மூச்சு முட்டியது. இதழ்க் கடையிலே குருதி கொப்பளித்து வழிந்தது. கண்கள் ஆயாசத்திலும் மூடிக் கொண்டன. மூச்சு மெல்ல மெல்ல அடங்கலாயிற்று. அவனை இழப்பதைத் தாங்க முடியாத ஆயிஷா இதயம் வெடிக்க 'அண்ணா!' என்று கத்தினாள். நயனந் திறந்து நங்கையின் துயரந்தோய்ந்த வதனத்தை நோக்கினான் வேங்கடாத்திரி. 'சோதரி... போகிறேன்...' என்ற வார்த்தைகளை அடுத்து 'விட்டலநாதா விரூபாட்சா!' என்ற முனகல் குழறலாகி விட்டது. 'ஹோ' வென்று கதறியபடி முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு தேம்பினாள் ஆயிஷா. அவள் அழுகை அடங்கிய போது அவன் மூச்சும் அடங்கிப் போயிருந்தது. ஆழ்ந்த நித்திரையிலிருப்பது போலிருந்தது அந்த அழகிய முகம். முன் நெற்றியில் சரிந்திருந்த கேசச் சுருள்களை ஒதுக்கிவிட்டு மௌனமாக அவன் நெற்றியிலே முத்தமிட்டாள். ரத்தக் கீற்றாக நெற்றியின் குறுக்கே ஓடியிருந்தது ஸ்ரீசூர்ணம். முத்தமிட்ட இதழிலே அது சுடராகச் சுட்டது. உயிர் பிரிந்த பிறகு அவன் இதயத்திலே பாய்ந்திருந்த ஈட்டியை வெளியே இழுத்தான் யூசப்கான். ஒரு பொட்டு ரத்தம் கூட வெளிப்படவில்லை. சோகச் சிலையாக இறுகிப் போய் உட்கார்ந்திருந்த ஆயிஷாவின் மடியிலிருந்து அவன் தலையை மெல்ல எடுத்துத் தரையில் கிடத்திவிட்டு, அவளை அணைத்தபடி தூக்கி நிறுத்தினான். அன்புச் சோதரனை இழந்த துக்கம், இன்பக் காதலனை அடைந்த மகிழ்ச்சி இரண்டும் கலந்த உணர்ச்சிக் குவியலாகி யூசப்கானின் மார்பிலே கன்னம் புதைத்துக் கண்ணீர் பெருக்கினாள் ஆயிஷா.

வேங்கடாத்திரியின் வீரமரணத்தைச் சித்திரிக்கும் உருக்கமான காட்சியை இவ்விதழ் அட்டையில் உருவாக்கித் தந்திருக்கிறார் ஓவியர் வினு.

மா வீரர்களின் கதை முடிந்தது. ஆனால் விஜயநகர சாம்ராஜ்யத்து மக்களின் சோகக் கதை முடியவில்லை.

எண்ணிக்கையில் ஏராளமான பேர் படையணியிலே இருந்தாலும் ஒழுங்கு, கட்டுப்பாடு, முறையான பயிற்சி ஏதும் கிடையாது இந்தியப் படை வீரர்களிடையே. இதுவரை எந்தப் போரிலும் காணாத அளவு இந்தப் போரிலே வீரர்களிடையே கிலியும் குழப்பமும் பெருமளவுக்குப் பரவியது பாரதத்தின் துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். ஓடியவர்களைத் துரத்திக் கொண்டு பாமினிப் படைகள் விஜயநகரினுள்ளேயே புகுந்தன. விரோதிகளைத் தடுக்கவோ, வெள்ளமென வந்து புகும் இஸ்லாமியப் படைகளை எதிர்க்கவோ எவருமில்லை. கட்டுக்காவல், படை வீரரின் பாதுகாப்பு ஆகிய ஏதுமற்ற நிலையில் பரிதாபகரமாக அடிமைப்பட்டது தென்னகத்திலே தன்னிகரற்று விளங்கியதொரு சுந்தர நகரம்.

களத்திலே நூறாயிரம் இந்துக்கள் படுகொலைக்குள்ளானதாக முஸ்லிம் வரலாற்றாசிரியர்களே கூறுகிறார்கள். வழி திறந்து வாயில் திறந்து வைத்திருந்த விஜயநகரத்துக்குள் முதல் முதல் புகுந்தவர்கள் களத்திலிருந்து தப்பிப் பிழைத்து ஓடிவந்த வீரர்களும் தலைவர்களும்தான். அப்படி வந்தவர்களும் கதவடைத்துக் காவலைப் பலப்படுத்துவதில் கவனம் செலுத்தவில்லை. தங்கள் சேமிப்புகளையும் பெண்டு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு தப்பியோடுவதிலேயே கருத்தாக இருந்தார்கள்.

வரப்போகும் விபரீதத்தை, அபாயத்தைச் சற்றும் எதிர்பாராமல், நகர மாந்தர்கள் அமைதியாகவே தங்கள் அலுவல்களைக் கவனித்து வந்தார்கள். மாபெரும் தலைவர்கள் ஒப்பற்ற வீரர்களுடன் வேண்டிய தளவாடங்களுடன் போர்க்களம் சென்றிருக்கிறார்கள். வெற்றியைத் தவிர வேறெதுவும் நிகழாது என்ற நிச்சயமான நம்பிக்கையிலிருந்து வந்தவர்களைக் களத்திலிருந்து வந்த பரபரப்பூட்டும் செய்திகள் கூடப் பாதிக்கவில்லை. 'விஜயநகரப் பெரும்படை தோற்றுவிட்டது. தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். படை வீரர்கள் ஓடி வருகிறார்கள்' என்ற தகவல்களெல்லாம் மிகச் சாதாரணமாகவே கருதினார்கள். இப்படி எத்தனையோ சந்தர்ப்பங்களில் இத்தகைய தகவல்களுக்குப் பின்னும் விரோதிகள் விரட்டியடிக்கப்பட்டிருந்தார்கள் அல்லது பொக்கிஷங்களிலே குவிந்து கிடந்த செல்வங்களை வாரிக் கொடுத்து அவர்களை வழி அனுப்பியிருந்தார்கள். இதுவும் அதைப் போன்ற நிகழ்ச்சிதான், தலைநகருக்கு எவ்வித அபாயமும் ஏற்படாது என்ற நம்பிக்கையுடனேயே இருந்தார்கள் நகர மாந்தர்கள். ஆனால் இந்தத் தோல்வி மகத்தானது, மற்றெப்போதையும் விட மாறுபட்டதென்பதை விரைவிலேயே உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் விழித்துக் கொண்ட போது காலம் கடந்து விட்டது.


ஓடிவந்தவர்களில் முக்கியமானவன் திருமலை. தன் எண்ணம் கைகூடும் நாள் வந்து

விட்டது என்ற மகிழ்ச்சியோடு ஓடிவந்திருந்தான். நாட்டைக் காப்பதற்காக அல்ல. தலைநகரில் உள்ள செல்வங்களை வாரிக்கொண்டு தப்பிச் சென்று தனியாட்சி நடத்த வேண்டும் என்ற ஆசையோடு. திருமலையும் அவனோடு ஓடி வந்திருந்த அரச குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களும் சில நாழிகைக்குள் அரச பண்டாரத்தைக் காலிசெய்து 1550 யானைகளில் ஏற்றினார்கள். எடுத்துச் செல்ல முடிந்த அத்தனை செல்வங்களையும் ஏற்றிச் செல்லத்தக்க வாகனங்களிலெல்லாம் வைத்துக் கட்டிக் கொண்டார்கள். பல தலை முறைகளின் சேமிப்பினால் நிரம்பி இருந்த பேரரசின் பெரும் பொக்கிஷத்தைக் காலியாக்கிக் கொண்டு, சாம்ராஜ்யத்தின் செங்கோல், இருமுடி, புகழ் பெற்ற சிங்காதனம் ஆகியவைகளுடன் பொம்மை அரசன் சதாசிவராயரையும் சிறைப்படுத்திக் கொண்டு, நகரத்தையும் நகர மாந்தரையும் அவரவர் தலைவிதிக்கே விட்டு விட்டு, எஞ்சியிருந்த வீரர்களின் பாதுகாப்புடன் பெனுகொண்டா கோட்டையை நோக்கி ஓடினான் திருமலை. அங்கு சென்று தன்னையே மகாமண்டலேஸ்வரராகப் பிரகடனப்படுத்திக் கொண்டான்.

அரண்மனை வாசிகள் அவசரமாய் நகரிலிருந்து ஓடுவதைக் கண்ட பிறகு தான் நகரமாந்தருக்கு விழிப்பு ஏற்பட்டது. வரப்போகும் அபாயத்தின் தன்மையை உணரலானார்கள். இது வெறும் தோல்வி மட்டுமல்ல, மகத்தான பிரளயமே என்பதைப் புரிந்து கொண்டபோது வாழலாம் தப்பிச் செல்லலாம் என்ற நம்பிக்கைக்கே இடமில்லை. நகரிலிருந்த வாகன வசதிகளெல்லாம் போர்க்களத்துக்குப் படை வீரர்களுடன் போயிருந்தன. அவைகளில் எதுவுமே திரும்பவில்லை. ஆகவே நகரவாழ் மாந்தர் தங்கள் செல்வங்களைப் பூமியில் புதைத்து விட்டுக் கிடைத்த ஆயுதங்களைத் தாங்கி வரவிருக்கும் அபாயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

கொன்று குவித்துக் குதூகலிக்க விரோதிப் படைகள் வருவதற்கு முன் பாதுகாப்பற்ற நகரத்தைக் கொள்ளையிட்டுச் சூறையிடத் திருடர்களும், நாடோடிகளான பிரிஞ்சாரி, லம்பாடி, குருபா ஆகியோரும் தயாரானார்கள். செல்வம் கொழிக்கும் சுந்தர நகரத்தின் கடைவீதிகள் கொள்ளையிடப்பட்டன. பொருள்களைச் சூறையாடிக் கொண்டு போனார்கள். அலை அலையாக வந்த இந்த நாசகாரக் கும்பல்கள் ஒரு நாளைக்குப் பல தடவைகள் தாக்குதல் நடத்திப் பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றார்கள்.

கதிரவன் !



வெற்றி—மகத்தான வெற்றி பெற்ற பாமினி சுல்தான்கள் படுகொலை நடந்த போர்க்களத்திலே தங்கி, மகிழ்ச்சி விழாக் கொண்டாடிக் குதூகலித்தார்கள். எதிர்பாராத வெற்றி, எதிர்பார்த்த அளவுக்கு மேலேயே எதிர்ப்பின்றிக் கிடைத்தன கொள்ளைகள். தற்காப்பின்றித் தன் தலைவிதியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது சாம்ராஜ்யத்தின் தலைநகர் என்ற செய்தியோடு வந்தார்கள் இஸ்லாமிய வீரர்கள். ராமராயர் களத்திலே மடிந்த மூன்றாவது நாள் பாமினிப் படைகள் வெற்றி கொள்ள முடியாத விஜய நகரினுள் பட்டணப் பிரவேசம் செய்யப் புறப்பட்டன. மகத்தான, மகோன்னதமான சாம்ராஜ்யத்தின் அழிவு ஆரம்பமாயிற்று.

அழிப்பதற்கென்றே, கொன்று குவிப்பதற்கென்றே, இடித்துப் பாழ்படுத்துவதற்கென்றே, கொளுத்திக் குதூகலிப்பதற்கென்றே கும்மாளமிட்டுக் கொண்டு வந்து குவிந்தார்கள் விஜயநகரத்துக்குள் விரோதிகள். தங்களை விடச் செல்வச் சிறப்பிலே, சிற்பச் செல்வத்திலே, நாகரிகத்திலே

குழந்தை



நிறைநிலா ஒன்றின் கரையிலா வியப்பே
திருமுக எழிலோ?
மரைமலர் இரண்டில் சிறைப்படு வண்டே
மைக்கரு விழியோ?
முறைப்படு மூன்று தமிழின் சுவையே
முகிழ்வாய் மொழியோ?
மறையெனும் நான்கில் உறையும் தெய்வமே
மழலை வடிவமோ?

— மதுர பாஸ்கரபாண்டியன்

மேம்பட்ட பெருமையோடு வாழ்ந்த ஒரு நாட்டினிடம் பொறாமை கொண்டிருந்தவர்கள் அதை அழித்து நாசமாக்கி மகிழ்வதில் நாட்டம் செலுத்தினார்கள். வானளாவி நின்ற மண்டபங்கள் மண்ணோடு மண்ணாயின. சிற்பக்கூடங்கள், நாட்டிய அரங்கங்கள், நடன மண்டபங்கள், சிங்காரவனங்கள், அரண்மனைகள், அந்தப்புரங்கள் அத்தனையையும் இடித்து நொறுக்கித் தீயிட்டுக் கொளுத்தித் தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டார்கள் வக்கிரபுத்திக்காரர்கள். ஒரு பாவமுமறியாத அப்பாவி இந்துக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். யாரிடமும் எதனிடமும் இரக்கம் காட்டப்படவேயில்லை. அவர்கள் இலக்குக்கு எதுவுமே தப்பவில்லை. கோயில்கள் குரூரமாக்கப்பட்டன. அழிக்க முடியாத ஆகிருதி கொண்ட கற்சிலைகளைக் கடப்பாறை கொண்டு விகாரமாக்கினார்கள். சிதைத்தார்கள், சின்னாபின்னப்படுத்தினார்கள். சிங்கார நகரம் சீரழிந்தது. 'நாகரிகத்தின் தொட்டில்' என்று பல தேசத்தவர்களும் வியந்து பாராட்டிய சுந்தர நகரம் சுடுகாடாகக் காட்சியளித்தது. வாளும், நெருப்பும், வன்முறைச் செயல்களும் என்றைக்குமே தலைதூக்காதபடி அந்த ஒப்பற்ற நகரத்தை உருக்குலைத்தன.

வேங்கடாத்திரிக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற யூசப் கான் அரும் பாடு பட்டான். கலைப் பொக்கிஷங்களான கட்டிடங்களும் ஆலயங்களும் இடிக்கப்படும்போது அங்கெல்லாம் ஓடிச் சென்று அவர்களின் செயலைத் தடுக்க முற்பட்டான். ''அல்லாஹ் மனித சமூகத்தின் நாகரிகத்தை அழிக்கச் சொல்லவில்லை. கொலையும் கொள்ளையும் கொடுமையும் புரியும்படி குரான் போதிக்கவில்லை'' என்று உருக்கமாக வேண்டிக் கொண்டான். ஆனால் அவனை ஒரு வேடிக்கைப் பொருளாகத்தான் இஸ்லாமிய வீரர்கள் மதித்து நகைத்தார்கள். பலர் அவனைப் பைத்தியக்காரனென்று உதைத்து விரட்டினார்கள். வெற்றி கொண்ட வீரர்களின் வெறியாட்டத்தினால் மனம் நொந்து போனான் யூசப் கான். அதனால் தன் செயலைத் தளரவிடவில்லை. அழிந்து கிடக்கும் ஹம்பியிலும் மற்றுமுள்ள இடங்களிலும் விஜயநகர சாம்ராஜ்யத்தின் மகோன்னதத்தைப் பறைசாற்ற இன்னும் ஏதாவது எஞ்சியிருக்கிறதென்றால் அவையெல்லாம் யூசப் கானின் முயற்சியினால் காப்பாற்றப்பட்டவைதான். இதற்காக நாச வேலையையே தங்கள் மூச்சாகக் கொண்ட அந்த இஸ்லாமிய வீரர்களிடையே அவன் பட்ட இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல.

விஜயநகரை அழிக்கும் வேலை ஐந்து மாதங்கள் வரை நடைபெற்றது. எங்கு திரும்பினாலும் இடிபாடுகள், மரண ஓலம். நாட்கணக்காக, மாதக் கணக்காக எரிந்து புகைந்து கொண்டிருந்தன பல உன்னதமான கட்டிடங்கள். ஒரு காலத்தில் ஒப்பற்று விளங்கிய விதானங்களோடு கூடிய விண்ணை எட்ட நின்ற மண்டபங்களும் மாளிகைகளும் கோபுரங்களும் மண் குவியல்களாகக் காட்சியளித்தன. அந்நகரத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் மனையிழந்து, மானமிழந்து, பொருளிழந்து, சுற்றமிழந்து மாண்டு மடிந்தனர். அந்தச் சிறப்பு மிக்க நகர் பிறகு என்றென்றுமே தலையெடுக்கவில்லை. சிற்றூராகக்கூட மாறவில்லை. முஸ்லிம் படை வீரர்களில் சாகாது பிழைத்த ஒவ்வொருவரும் இந்தப் பெரும் போருக்குப் பிறகு பல தலைமுறைகளுக்குச் செல்வந்தர்களாக வாழும் பாக்கியம் பெற்றார்கள். களத்திலும் நகரத்திலும் கொள்ளையிட்ட பொருள்களை அதை நடத்திய வீரர்களே பங்கிட்டுக் கொள்ளும்படி விட்டுவிட்டார்கள் பாமினி சுல்தான்கள். யானைகளை மட்டும் தாங்கள் எடுத்துக் கொண்டார்கள்.

உலக சரித்திரம் எத்தனையோ சாம்ராஜ்யங்களின் அழிவைக் கண்டிருக்கலாம். ஆனால் வனப்பிலே, வாணிபத்திலே, செல்வச் சிறப்பிலே, செழிப்பிலே, நாகரிகத்திலே, வீரத்திலே, படை நீரத்திலே, பண்பாட்டிலே, பல கலைகளிலே, மேம்பட்டு விளங்கிய விஜயநகர சாம்ராஜ்யத்தின் சரிவை அவைகள் எதனுடனுமே இணையாக்கிக் காட்ட முடியாது. ஏடு காண முடியாத இன்னல்களையும் சொல்லும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டதான துன்பங்களையும் அனுப

வித்து அழிந்த அந்தச் சுந்தர நகரம் பிறகு தலைதூக்கவேயில்லை. வஞ்சம் தீர்த்துக் கொண்ட சுல்தான்களின் நெஞ்சங்கள் கூட அழகழிந்து நிற்கும் அந்த அற்புத நகரத்தின் அலங்கோலத்தைக் கண்டு வேதனைப்பட்டன.

விஜயநகரத்தின் வீழ்ச்சி தென்னகத்தின் வீழ்ச்சி என்பதை உணராத பாமினி சுல்தான்கள் வெற்றி விழாக் கொண்டாடி மகிழ்ந்தார்கள். சுதந்திரம் பெற்றுவிட்டதாக மகிழ்ந்த அவர்களுடைய சுதந்திரத்தையும் சுக வாழ்வையும் கொள்ளை கொள்ள விரைவிலேயே வரப் போகிறார்கள் மொகலாயர்கள் என்பது அவர்களுக்கு அப்போது எப்படித் தெரியும்? ஆற்றைக் கடந்து வெற்றியின் வாசலுக்கு வழி திறந்து விட்ட யூசப் கானை நிஜாம் ஷாவும், குதுப் ஷாவும் பாராட்டிப் பரிசில்களைக் குவித்தார்கள். ஆனால் அவைகளை யெல்லாம் விட அழகி ஆயிஷா தனக்குக் கிடைத்ததையே மிகப் பெரிய பரிசாக, பொக்கிஷமாக எண்ணிப் பூரித்துப் போனான் யூசப் கான். விரைவிலேயே அவளுடன் தன் தாய் நாட்டுக்குக் கிளம்புவதற்கும் திட்டமிட்டான். தன் விருப்பத்தை அவன் நிஜாம்ஷாவிடம் தெரிவித்தபோது முதலில் அவர் அதற்கு இணங்கவில்லை. ஆனாலும் அவன் தன் முடிவிலே உறுதியாக இருந்தான். எழில் மிகுந்ததொரு நகரின் அழிவு நாட்களிலே அவன் கண்ட சோகமயமான காட்சிகள் அடிக்கடி நினைவில் தோன்றி வேதனைப்படுத்தின. அதைத் தாங்கிக் கொண்டு பாரதத்தில் தங்கியிருக்க விரும்பவில்லை அவன். ஆயிஷாவும் அதே நிலையில்தான் இருந்தாள். ஒரு காலத்தில் விஜயநகரத்தை வெறுத்தவள், அதன் வீழ்ச்சியைப் பற்றிய எண்ணங்களை வெறியாக்கி வளர்த்தவளின் உள்ளம் இன்று வேதனையால் வெந்து கொண்டிருந்தது. தன் சபதம் இத்தனை குரூரமாக நிறைவேறும் என்று அவள் நினைக்கவேயில்லை. தான் வெறுத்த ராமராயர் தன்னிடம் கொண்ட பரிவையும், தனக்களித்த சலுகைகளையும் விஜயநகரத்து அந்தப்புரத்திலே தான் வாழ்ந்த அந்த நாட்களையும் வேங்கடாத்திரியின் அன்பையும் அவளால் மறக்க முடியவில்லை. அன்று அதைத் துன்பம் நிறைந்த வாழ்வாகக் கருதியவள் இன்று இன்பம் நிறைந்த நாட்களாக நினைக்கலானாள். இதன் பின் நடந்த நிகழ்ச்சிகளின் உறுத்தலிலிருந்து விடுபட்டு நினைவுகளை மட்டும் தாங்கிக் கொண்டு நெடுந் தூரத்துக்கு விலகிப் போய்விடவே விரும்பினாள் அவள்.

பாமினி சுல்தான்களின் பரிசில்களைச் சுமந்து கொண்டு நூறு ஒட்டகங்கள் கோவா துறைமுகத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. அவைகளின் முன்னால் அழகிய குதிரை மீது அழகி ஆயிஷாவை அணைத்தபடி யூசப்கான் பாரதத்தின் பசுமையான காட்சிகளைப் பார்த்துப் பரவசமாகிப் போய்க் கொண்டிருந்தான்.

கோவா துறைமுகத்திலே போர்ச்சுகீசிய அதிகாரி டாம் பிரான்ஸிஸ்கோ கோடென்ஹோ அவனை மறக்கவில்லை. மகிழ்ச்சி பூத்த முகத்தோடு இரு கை நீட்டி வரவேற்றார். கைதியாக வந்தவன் கன்னியோடு திரும்பிப் போவதை எண்ணி அவர் கண்களால் சிரித்துக் கொண்டே ஆயிஷாவின் அழகைப் பருகலானார். கப்பலையே விலைக்கு வாங்குமளவுக்குச் செல்வக் குவியல்களோடு வந்திருக்கும் யூசப் கானுக்கு விசேஷ மரியாதைகள் கிடைத்தன போர்ச்சுகீசிய அதிகாரியிடமிருந்து. இரண்டொரு நாளில் கிளம்பப் போகும் கப்பலில் வசதியாகப் பிரயாணம் செய்யத் தக்க ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார் அவர்.

கப்பல் கிளம்பியது. பாரதத்தின் மண்ணை விட்டு, தண்ணீரை விட்டு அது மெல்ல மெல்ல நகரலாயிற்று. யூசப் கானின் அணைப்பில் கப்பலின் மேல் தளத்தில் நின்று கொண்டிருந்த பாமினிப் பாவையின் கண்கள் பனித்தன. கண்ணாடிப் பாளமாகக் கடல் நீர் தகதகத்துக் கொண்டிருந்தது. அதிலே ராமராயரின் கம்பீரமான முகம் தெரிகிறது. வேங்கடாத்திரி வருகிறான். வெண் பல் வரிசை காட்டிச் சுந்தரமாகச் சிரிக்கிறான். கடலும் சிரிக்கிறது அலைக் கரம் கொட்டி. ஆயிஷாவின் கண்களில் கண்ணீர் ஜ்வலிக்கிறது. அவள் கண்ணீரைக் கண்ட யூசப் கான் அவள் உள்ளத்தில் ஓடும் எண்ணங்களைப் புரிந்து கொள்ளுகிறான். அவள் பட்டுக் கன்னத்தில் பாதை வகுத்துக் கொண்டு வழியும் கண்ணீரைத் துடைக்க அவன் மார்பிலே முகம் புதைத்துக் கொண்டு விம்முகிறாள் கட்டழகி ஆயிஷா. கூந்தலை வருடி அவள் மதி முகத்தை நிமிர்த்தியபோது கண்ணீர் உலர்ந்து கன்னியவள் அவனைப் பார்த்து முறுவலிக்கிறாள். இருவரும் பார்க்கிறார்கள். பாரதக் கடற் கரை அவர்கள் பார்வையிலிருந்து மறைந்து விடுகிறது. ஆனால் அவர்கள் உள்ளத்திலிருந்து அது மறையவில்லை; மறையவும் மறையாது.




பொம்மையெல்லாம் ஒழுங்காக அடுக்கி வச்சுட்டேம்மா...
Cadbury's
MILK
CHOCOLATE
அப்படியா! மிக இனிப்பான பரிசு
அவளுக்குத் தரவேண்டியதுதான்-
காட்பரீஸ் சாக்கலேட்தான் அது-
பாலின் குணங்கள் அடங்கியதாயிற்றே!
Cadbury's காட்பரீஸ் சாக்கலேட்
மிட்டாய் மட்டுமல்ல... ஒரு உணவுங்கூட!

[illegible]

தமிழ் கற்கும் வட இந்தியர் ●
ஆட்சியிலே வெறியாட்டம் ●
சலுகை அடிப்படை ●

● 1962ம் ஆண்டு டில்லியில் ராஜ்ய முதன் மந்திரிகள் மகாநாடு தேசிய ஒருமைப்பாட்டுத் திட்டத்தைப் பற்றி விவாதிக்கக்கூடியது. இம்மகாநாடு வட இந்திய ராஜ்யங்களில், முக்கியமாக ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் தென் இந்திய மொழிகள் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தீர்மானித்தது.

இத்திட்டத்தின் கீழ் உத்தரப்பிரதேசத்தில் உள்ள லக்னோ, கான்பூர், அலஹாபாத், மீரட், கோரக்பூர், ஆக்ரா, காசி, ஜான்சி முதலிய இடங்களில் தென் இந்திய மொழிகள் கற்பிக்கப் பள்ளிகள் திறக்கப்பட்டன. லக்னோவில் தமிழ், தெலுங்கு படிக்கும் மாணவர்கள் தென் இந்தியாவில் உள்ள மக்களை நேரில் பார்க்க வேண்டும் என்று ஆசை கொண்டனர். இவர்கள் இம்மொழிப் பயிற்சியில் ஆர்வம் காண்பிப்பதோடல்லாமல், தென் இந்தியர்களின் கலாசாரம், சரித்திரம் இவைகளைப் பற்றி நேரில் அறியவும் ஆவல் கொண்டனர்.

சுற்றுலாவை மேற்கொண்ட இம்மாணவர் குழு, தென் இந்திய ராஜ்யங்களில் உள்ள நகரினை பாரத ஹிந்தி பிரசார சபை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், ஆந்திரா பல்கலைக் கழகம் முதலிய இடங்களுக்குச் சென்று அங்குள்ள தமிழ், தெலுங்குப் பேராசிரியர்களுடன் அளவளாவி மகிழ்ந்தனர்.

சென்னை, ஹிந்து ஹையர்செகண்டரி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு பாலகிருஷ்ண ஜோஷி, இந்தக் சுற்றுப் பிரயாணக் குழுவினரை வரவேற்றுத் தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றியும், இத்திட்டத்தின் கீழ் லக்னோ பள்ளி எடுத்துக் கொண்ட முயற்சியையும் பாராட்டிப் பேசினார்.

அண்ணாமலை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு மீனாட்சிசுந்தரம் வெளிநாட்டினருக்காக நடத்தும் சிறப்பு வகுப்புக்களில் லக்னோ மாணவர்கள் கலந்துகொள்ள வாய்ப்புத் தருவதாகவும், இத் திட்டத்தை மேலும் விரிவான முறையில் செயலாக்க வேண்டும் என்றும் கூறினார். தேசிய ஒருமைப்பாட்டுக்குச் சிறிய முறையில் வழிகோல, அரசாங்கம் இதுபோன்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமென்று எதிர்பார்க்கலாமா?

லக்ஷ்மணபுரி **வி. ஆர். பாலசுப்பிரமணியம்**

● சரித்திர ஆராய்ச்சியாளர் லேன் பூல் (Lane Poole) ஒன்பது நூற்றாண்டுகளாகப் பாரத தேசத்தை ஆட்சி புரிந்து வந்த முகமதியர், ஹிந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் இடையே ஒற்றுமையை உண்டாக்கித் தரவில்லை. ஆனால் இரண்டே நூற்றாண்டுகள் ஆட்சி கோரிய ஆங்கிலேயர் நாவலை இனத்தவர்களுக்குள்ளும் — ஹிந்துக்கள், முகமதியர்கள், ஆங்கிலேயர்கள் — பிணைப்பு ஏற்படுத்தி விட்டனர் என்பதாகக் கூறுகிறார். இதற்கு முக்கியமான காரணம் ஆங்கில மொழிதான்;

ஆங்கில நாட்டின் சரித்திர நூலை எழுதிய மற்றொரு பேராசிரியர் (G. M. Trevelyan) இந்தியாவிலே ஆங்கிலத்தைப் பயிலுங்கள் என்பதாக ஆங்கிலேயர் தூண்டவில்லை, இந்தியர்களே ஆங்கிலத்தின்பால் மிக்க ஆர்வம் காட்டி, கற்றுணர்ந்தனர் என்று பெருமிதமாகக் கூறுகின்றார். ஆங்கிலம் உலகத்திலே ஒரு மேன்மையான மொழி, பழமையான மொழி, சுவையான மொழி என்பதனால்தானே அதனை விரும்பிக் கற்றோம் நாம்? பற்பல நூற்றாண்டுகளாகத் திரிந்து பிறப்பதற்குப் பல காலம் முன்னதாக விருந்தே வளர்ச்சி பெற்று இன்று உன்னத நிலையை அடைந்திருக்கின்ற ஆங்கிலத்தை உலகத்திலே பல நாடுகள் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டுள்ளன என்றால் அது ஆங்கிலேயர்களின் வற்புறுத்தலால் அல்ல. நாட்டவர்களின் ஆசையினால் ஆர்வத்தினாலேயேயாகும். இத்தகைய ஓர் உலக மொழியை — நம் நாட்டிலும் அரசாங்க மொழியாக ஏற்க ஏன் தயங்க வேண்டும்?

'அந்நிய மொழியை ஏற்பது அடிமைத்தனம்' என்ற நோக்கத்தோடு நாம் இதனைப் பார்ப்பது அறியாமை.

வாய்மறைந்த ஆரிஜி 'சாந்திநிகேதனத்தில்' ஆங்கிலம் நமது நாட்டின் ஆட்சி மொழியாக அமைந்தால், மற்றைய இந்திய மொழிகள் அனைத்தும், ஒளி மங்கி விடும் என்றார். ஹிந்தி ஆட்சி மொழியாகும் பேறு பெற்றால் மற்றைய மொழிகளெல்லாம் மங்காதா? ஆங்கிலம் இந்தியர்கள் அனைவருக்கும் அந்நிய மொழியானதுபோலும் அதனை அனைவரும் மனக்கசப்பின்றிக் கற்பார்கள். ஆனால் ஹிந்தி ஆட்சி மொழி பீடத்தில் ஏறிவிட்டால், ஒருசிலருக்கு அது தாய்மொழியானபடியால் நாட்டில் பாரபட்சமும் குழப்பமும் நேரும்.

நேரான வழி ஆங்கிலத்தை ஆட்சிமொழியாக ஏற்று, அந்தந்த மாகாணங்களிலே பிரதேச மொழி பூரண வளர்ச்சிபெறுவதே ஆகும். பிள்ளைகளும் இரண்டு மொழிகளை (ஆங்கிலம், பிரதேச மொழி அல்லது தாய்மொழி) கற்று விஞ்ஞானப் பாதையிலும் கலைப் பாதையிலும் முன்னேற்றம் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை;

செகந்திராபாத்,
4—1—65 **கே. வி. சாவித்ரி**

● ஒரிஸ்ஸா சர்க்கார் சாதி அடிப்படையில் கல்விச் சலுகை வழங்குவதை நிறுத்தி, பொருளாதார அடிப்படையில் சலுகைகளை வழங்கத் தீர்மானித்திருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். உடனடியாக இதேபோல் மற்ற ராஜ்ய சர்க்கார்களும் பிடிவாதத்தை விட்டு எல்லாச் சலுகைகளையும் பொருளாதார அடிப்படையில் வழங்க முன்வரவேண்டும்.

15—1—65
சேலம் **பெரி. அண்ணாமலை**


ராஜயோகம்
கதை: தம்பு
சித்திரம்: செல்லம்
20
இது தான் படுக்கை, தேவகி! ஜோரா யிருக்கிறது இல்லையா?
ஓ, அத்துடன் ஒன்று!
ஒன்றென்ன? ஆயிரம் சொல்லு. செய்யத்தயாராய்க் காத்துக்கொண்டிருக்கிறேன்.
ஒன்றுமில்லை. நான் படுக்கையைத் தொடுமுன் எங்கள் குடும்ப வழக்கப்படி சில சடங்குகள் செய்தாக வேண்டும். கட்டிலுக்கு உங்கள் முதுகுப்பக்கத்தைக் காண்பித்துக்கொண்டு நில்லுங்கள்.
இது தமாஷாயிருக்கிறது! பாட்டுக் கூடப்பாடப்போகிறாய் போலிருக்கிறது!
ஆமாம் ராஜாவே! நின்றுகொண்டாயா? என் மீது ஆசையாயிருந்தால் என்னை விழுங்கி விட்டதுபோல் பார்க்கவேண்டும்


நீ யார்! உன்னைப்பற்றிய விவரங்களைச் சொல்!
என் தந்தையின் பெயர் கந்தசாமி ராஜு. தாயாரின் பெயர் சிவகாமி. அவர்கள் இருவரும் காதல் கல்யாணம் செய்து கொண்டார்கள். அதனால் என் பாட்டனார் சத்யநாராயணராஜு அவர்களுக்குச் சொத்து எதுவும்.....


ராஜா, வக்கீல் வீராசாமியிடம் ஒப்புவித்த விஷயங்களையே ஒரு வார்த்தை பிசகாமல் ஒப்புவித்துக் கொண்டு வந்து முடிக்கிறான்.
இப்போது சரிதானா, வக்கீல் ஸார்!
இதெல்லாம் இருக்கட்டும். உன்னைப்பற்றிய உண்மையான விவரங்களைத் தெரிவிக்கும்படி நான் உத்தரவிடுகிறேன்!
என்ன, என்ன, உண்மையான விவரமா? ஊம்... ஊம் வந்து சொல்லிவிடுகிறேன். என் தந்தை....
அவன் சொல்கிறான், அவள் ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருக்கிறாள்.
போதும் நிறுத்திக்கொள். நீ இப்போது நடந்ததை அடியோடு மறந்துவிட வேண்டும். நான் உன்னை மறுபடியும் பார்க்கும்போது, நான் சொல்வதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.
தொடரும்







சிரிக்கவும்

ஸ்திரிகள் 'பிறந்தகம், பிறந்தகம்' என்று சொல்வதுபோல் ஆண்கள் அடிக்கடி, பிறந்த 'ஊர்' என்று சொல்வதுண்டு. அந்த ஊர் விஷயம், அரசாங்க ஊழியர்கள், மாணவர்கள் இவர்கள் லீவு கேட்கும் விண்ணப்பங்களில் அடிபடும்.

" 'மதிக்கப்படும்' ஐயா!

நான் பொங்கல் பண்டிகைக்கு என் பிறந்த ஊருக்குச் செல்ல வேண்டியிருப்பதால் எனக்கு மூன்று தினங்கள் லீவு கொடுக்கும்படி மிகவும் தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்....."

இந்தக் கடிதத்தில் பிறந்த ஊர் என்பதை 'நேட்டிவ் பிளேஸ்' என்று ஆங்கிலத்தில் எழுதுவார்கள்.

மந்திரிகள் இதுபோன்று யாருக்கும் லீவுக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஆனால் முதன் முதல் காங்கிரஸ் பதவி ஏற்றுக் கொண்ட காலத்தில் ஒரு மந்திரி லீவு கோரிப் பிரதம காரியதரிசிக்கு விண்ணப்பம் செய்து கொண்டாராம்.

பண்டிகைகள் ஜாபிதா புது வருஷப் பிறப்புடன் ஆரம்பமாகிறது. பிறகு ஸ்ரீராம நவமி, ஸ்ரீ ஜெயந்தி, விநாயக சதுர்த்தி, ஆயுதபூஜை, தீபாவளி, பொங்கல் என்று வருகின்றன. இவற்றுக்கு இடையே இன்னும் பல குட்டிப் பண்டிகைகள், பெரியவர்கள் பிறந்த தினங்கள், வாழ்ந்த தினங்கள், இறந்த தினங்கள், இறந்து ஐம்பதாம் ஆண்டு மறு பிறவி எடுத்த தினம் இப்படிப் பல.

பத்திரிகைகளில் 'வருகை', 'புறப்பாடு' என்ற தலைப் பின் கீழ் பல மந்திரிகள் பல இடங்களுக்கு வந்து போவதைப் பற்றிய தகவல்களை வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து பாருங்கள். அநேகமாக ஒவ்வொரு மந்திரியும் முக்கியமான பண்டிகை சமயத்தில் தங்கள் 'நேட்டிவ் பிளேஸ்' பக்கம் சுற்றிக் கொண்டிருப்பது தெரியவரும். ஆனால் அவர்கள் பண்டிகைகளை உத்தேசித்து அப்படி வந்து போகிறார்கள் என்று நினைத்தால் அது தவறாகும். ஏனென்றால், அவர்கள் ஏதாவது திறப்பு விழா, ஆரம்ப விழா, மகாநாடு சம்பந்தமாக வருவதே இல்லை. அவர்கள் வீட்டில் நடக்கும் ஒரு நிகழ்வன்று அவர்கள் தங்கள் 'நேட்டிவ் பிளேஸி'ல் இருக்கலாம். ஆனால் அன்றோ, மறு நாளோ நடக்கவிருக்கும் ஒரு பொதுஜனக் காரிய சம்பந்தமாகவே அவர்கள் வந்திருப்பார்கள்.

ஃ ஃ ஃ

திறப்பு விழா, ஆரம்ப விழா முதலியவற்றைப் பரிகசித்து மாக்ஸ் பீர்பாம் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் வரும் ஒரு கட்டடத் திறப்பு விழாவில் ஒரு பிரபு கட்டடத்தின் வாசற் கதவில் பூட்டைச் சாவி போட்டுத் திறக்க வேண்டும். ஆனால் சரியான சமயத்தில் சாவி திறக்காமல் மக்கர் செய்தது. உடனே ஒரு கொல்லனைத் தருவித்துப் பூட்டைத் திறக்கச் செய்தார்கள். உண்மையில் திறப்பு விழா நடத்தியது கொல்லன். ஆனாலும் பிரபு திறந்து வைத்ததாகத்தான் பிரமாதப் படுத்தப்படுகிறது.

சென்னையில் உணவுக் கார்ப்பொரேஷன் ஆரம்ப விழா விஷயம் இந்தக் கட்டுரையை ஞாபகப்படுத்தியது. அந்தக் கார்ப்பொரேஷன் ஆரம்பமாகிச் சில நாட்கள் ஆகிவிட்ட போதிலும் மந்திரிகள் வந்து ஒரு 'தொடக்க விழா'க் கொண்டாடினார்கள்.

ஃ ஃ ஃ

ஒரு கட்டிடம், அல்லது அணை அல்லது ஒரு காரியாலயம் ஆரம்பிக்கப்படும்போது அது சம்பந்தமாகப் பின்வருவது போன்ற விளம்பரம் வெளியாவது வழக்கமாகி விட்டது:

"கட்டிடத்துக்குப் பெயிண்ட் வேலை செய்தவர்கள்: பஞ்சவர்ணம் கம்பெனியார்.

"ஆலையில் இயந்திரங்கள் பொருத்தியவர்கள் விசுவகர்மா கம்பெனியார்.

".... காரியாலயத் திறப்பு விழாவுக்கு எங்களது நல்வாழ்த்துக்கள் சிங்கம் கம்பெனியார்."

ஆனால் தனிப்பட்ட ஒரு நபர் அரசாங்கப் பதவி ஏற்கும்போது இது போன்ற விளம்பர வாழ்த்துக்கள் பத்திரிகைகளில் வெளியாவதை இப்போதுதான் நான் முதன் முதலில் பார்த்தேன். அவை உணவுக் கார்ப்பொரேஷன் தலைவர் ஸ்ரீ டி. ஏ. பாய் அவர்களைப் பற்றியது.

"ஸ்ரீ டி. ஏ. பாய் உணவுக் கார்ப்பொரேஷன் தலைமைப் பதவி வகிப்பதற்கு எங்கள் வாழ்த்துக்கள்."

சிந்திக்கவும்

"ஸ்ரீ டி. ஏ. பாய்க்கு அவரது புதிய பதவியில் வெற்றி ஏற்படுமாக!"

இவை போன்ற பல வாழ்த்து விளம்பரங்கள் வெளியாகி யிருந்தன.

ஸ்ரீ பாய் வியாபார உலகக் கனவான்களில் ஒருவர். அவர் பாராட்டுப் பெறுவதை யாருமே வரவேற்பார்கள்.

ஆனால் இதே போன்று ஒவ்வொரு அரசாங்க உத்தியோக சம்பந்தமாகவும் வாழ்த்து விளம்பரங்கள் வெளியானால் எப்படியிருக்கும்?

"தொழில் இலாகா காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ மார்த்தாண்டம் ஐ. ஏ. எஸ். அவர்களுக்கு எங்கள் உளங்கனிந்த வாழ்த்துக்கள் — ...கம்பெனியார்"

"ஸ்ரீ மார்த்தாண்டம், ஐ. ஏ. எஸ். அவர்கள் தொழில் இலாகா காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். — ...... கம்பெனியார்"

"தொழில் இலாகா காரியதரிசி ஸ்ரீ மார்த்தாண்டம் ஐ. ஏ. எஸ். லட்சாதிபதியாய் நீடூழி வாழ்வதாக.
— மாமனூர் கோதண்டம்"

ஃ ஃ ஃ

ஜப்பானியர்கள் 'ஹராகிரி' அதாவது தற்கொலை செய்து கொள்வதை ஒரு விழாவாகக் கொண்டாடுவார்கள். தற்கொலை செய்துகொள்பவர் இஷ்டமித்திர பந்து ஜனங்கள் முன்னிலையில் ஓர் இரத்தினக் கம்பளத்தில் உட்கார்ந்து கொள்வார். பிறகு ஒரு குத்து வாளை எடுத்துக் கொண்டு நிதானமாகக் குடலை அறுத்துக் கொள்வது வழக்கமாம்.

அரசியல் துறையில் எடுத்ததற்கெல்லாம் விழாக் கொண்டாட ஆரம்பித்திருக்கும் நமது தேசத்தில் கிட்டத்தட்ட ஒரு தற்கொலைச் சம்பவம் சென்ற வாரம் ஒரு விழாவாகக் கொண்டாடப்பட்டது. அது வயிற்றை அரைப் பட்டினி போடுவது சம்பந்தமானது.

சென்ற வாரம் மேற்கு வங்காளத்தில் உணவுப் பொருள்களின் சட்டபூர்வமான ரேஷன் முறை அமுலுக்கு வந்ததைக் கொண்டாடினார்கள். மத்திய சர்க்கார் உணவு மந்திரி ஒரு கடையில் அரிசி, கோதுமை, ஆட்டா, ரவை, மைதா, சர்க்கரை ஆகியவற்றின் ஒரு வார ரேஷனை முதன் மந்திரி பி. ஸி. சென்னுக்கு விற்றாராம். இந்த விற்பனை அழகைப் போட்டோப் பிடித்து வேறு பத்திரிகைகளில் படங்கள் போட்டிருக்கிறார்கள். ஒரு நிர்வாகம் வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒரு காரியத்தைப் பற்றி இப்படிப் பிரசாரம் செய்யும் விந்தை இந்தியா ஒன்றில் தான் நடக்கும்.

இந்த முறையை ஒட்டி மற்றும் சில அம்சங்களையும் விழாவாகக் கொண்டாடலாம். 'நெற்களஞ்சியம்' எனப்படும் தஞ்சை ஜில்லா வாசிகளுக்குச் சாப்பிடப் பச்சரிசி இப்போது கிடையாது. அதற்குப் பதிலாக ஜில்லாக் கலெக்டர் நெல் மூட்டையாகவே கொடுக்க முன்வந்திருக்கிறார். கலெக்டர், ஜில்லா நீதிபதிக்கோ, அல்லது ஜில்லா போலீஸ் தலைவருக்கோ ஒரு மூட்டை நெல்லை விற்று, அதை அவர் தலையில் ஏற்றுவதை விழாவாகக் கொண்டாடலாம்.

இப்போது அரிசி விற்கும் கடைகள் பலவற்றில் ஒரு நூதன ரக அரிசி விற்கிறார்கள். அது சந்திர மண்டலத்திலிருந்து வந்ததோ, செவ்வாய் கிரகத்திலிருந்து வந்ததோ என்று நிர்ணயிக்க முடியாமலிருந்தது. அதன் ரகசியம் இப்போது தெரிந்துவிட்டது. அறுவடையான நெல்லைக் களத்திலிருந்தே மில்லுக்குக் கொண்டு போய் அரைக்க வேண்டியது பிறகு அரிசி மூட்டைகளைக் கிடங்கிலோ ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்திலோ மக்கப் போட வேண்டியது. பிறகு விற்பனை செய்யவேண்டியது.

இந்த அரிசியை ராஜ்ய முதன் மந்திரி ராஜ்ய கவர்னருக்கு விற்று அதை ஒரு விழாவாகக் கொண்டாடலாம்!

ஃ ஃ ஃ

டில்லியிலுள்ள குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்கம் ஒன்று புதிய பிரசார முறை ஒன்றைக் கையாண்டு வருகிறது. விவாகம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு ஒரு வாழ்த்துக் கடிதம் அனுப்பிக் கொண்டு, அதிலேயே, குடும்பக் கட்டுப்பாடு தகவல் நிலையத்துக்கு வந்து போகும்படி அழைப்பையும் தெரிவித்துக் கொள்கிறார்களாம். இதைவிட ஒரு நல்ல முறை இருக்கிறது.

தமிழ் நாட்டில் பல திருமண வைபவங்களின்போது "வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்", "ஏதுக்கோ பெண் பிறந்தாய்" என்று ஆரம்பிக்கும் பாட்டுக்களடங்கிய இசைத் தட்டுக்கள் அலறிக்கொண்டிருக்கும். அது போன்று பிள்ளை பெறுவதன் மீது வெறுப்பேற்படக் கூடிய பாட்டுக்களடங்கிய இசைத்தட்டுக்களை வைக்கலாம்.





வீட்டுக்குள் நுழையும்பொழுதே மீனுவின் பார்வை கொல்லைப் புறம் வெறித்து நின்றது. அங்கே அவள் வெளியே போகுமுன் சலவை செய்து உலர்த்திவிட்டுப்போன புடவை, படத்திலிருந்து அறுந்த மாலையாய்ச் சேற்றில் கிடந்தது. கைக்குட்டையை எடுத்து நெற்றியை ஒற்றிக்கொண்டாள்; ஆற்றாமையில் வெளிவந்த பெருமூச்சின் அனலை அடக்க முயலுவதைப்போல்.

அவள் பார்வை சட்டென்று வாசல் ஜன்னல்புறம் திரும்பிற்று. அங்கே ரவி உட்கார்ந்திருந்தான். மடியில் பாட புத்தகம். ஆனால் அவன் பார்வை அதில் பதியவில்லை. அவள் முக உணர்ச்சிகளை, அந்த நேரத்து மனக் கொதிப்பை, அளவிடுவது போன்ற பார்வை. ஒருகணம் மீனு தயங்கி நின்றாள். அவன் அனுபவித்துக் கொண்டிருந்தானோ அதை? அவன் விஷமமா அது?

உள்ளே போனவள் அவன் அறைக்கு வெளியே நின்றாள். ஜன்னலுக்கு அலங்காரமாகக் கட்டியிருந்த வண்ணான் மடிப்போடு இருந்த தூய வெண் திரை படபடத்தது, அவள் நெஞ்சைப் போல. ரவியின் பார்வை சட்டென்று குனிந்தது.

''கொல்லையில் என் புடவையைச் சேற்றில் இழுத்துத் தள்ளியிருக்கிறது.''

''ஓ!''

''எப்படி விழுந்தது?''

''காற்றில் விழுந்திருக்கும்.''

''நான் அதற்குக் 'கிளிப்' போட்டு வைத்திருந்தேன்.''

''பின்னே?''

''உன் நாய்க்குட்டிதான் இழுத்துத் தள்ளியிருக்கும். அதை ஏன் இப்படி அலைய விடுகிறாய்?''





அன்பின்

''இனிமேல் ஜாக்கிரதையாக இருக்கிறேன், சித்தி!''

அந்தப் பேச்சு வெறும் முகத் துடைப்பு. சுவரில் அடித்த பந்தாய் அவள் கேள்வியின் முடிவை, அவளிடமே கடைசியாய்த் திருப்பிவிடும் சாமர்த்தியம். ரவிக்கு ஜாக்கிரதை போதாதென்று அவள் சொல்ல முடியுமா? அவன் புத்தகங்களை எவ்வளவு ஒழுங்காய் அடுக்கி வைத்திருந்தான்? அவனுடைய பேனா, பென்சில், எதுவும் பிறருக்குத் தேடினாலும் கிடைக்காது. அவனுடைய பூட்சுக்குத் தனியான பளபளப்பு. அப்போது இது மட்டும் அஜாக்கிரதையா? வேண்டுமென்று செய்ததா?

அங்கே நிற்கப் பிடிக்காமல் மீனு மேலே நகர்ந்தாள். தன் கையிலிருந்த சாமான்களை மேஜைமேல் வைத்து விட்டு நிமிர்ந்தவளின் கண்ணைக் கட்டி நிறுத்துவது போல் இன்னொரு காட்சி. அவளுடைய தையல் மிஷினிலிருந்து நூல் உருவிக் கிடந்தது. நீள சரம் சரமாகக் குவிந்த இழை. அவள் பொறுமைக்கு இன்னொரு சோதனையா? கடுகடுத்த முகத்துடன் விடுவிடென்று போய் நூல் குவியலை விரலில் சுற்றி வெடுக்கென்று அறுத்து எறிந்தாள். காற்றில் அது சுழன்று சுழன்று வந்தது.

மிஷின் மேல் மூடி அசையவில்லை. சந்துவழியே அதிகமான நூல் தொங்கியிருக்கலாம். அதைப் பிடித்து அவ்வளவு தூரம் பக்குவமாக இழுத்துக் குவிக்கும் சாமர்த்தியமும்கூட நாய்க்குட்டிக்கு வருமா என்ன? அவளுடைய சாமான்களைத் தனியாக அடையாளம் கண்டு, ஒவ்வொன்றிலும் அவள் ஆத்திரத்தைத் தூண்டி விடும்படி விஷமம் செய்ய அவ்வளவு அறிவு இருந்ததா அதற்கு? அல்லது ஏவிவிடுகிறவர்களின் சாமர்த்தியமா? ஊமைக் கோபம் உள்ளுக்குள் புகைந்தது.

வண்ணான் வந்திருந்தான். சேகர் துணிகளைக் கணக்குப் பார்த்து விட்டான். அழுக்குக் கணக்கு எழுத நோட்டுப் புத்தகத்தில் வைத்திருந்த துண்டுப் பென்சிலைக் காணோம்.

''யார் எடுத்தது?''

சேகர் அவளைப் பார்க்க, அவள் ரவியின் பக்கம் திரும்பினாள். அவன் முகத்தைத் திருப்பி எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தான், எதுவும் காதில் விழாததைப் போல்.

''உன்னைத்தான்! நீ எடுத்தாயா?''

பொருமிக் கொண்டு வந்த அந்தக் குரலின் வெம்மையை, பார்வையின் பனியை, பொறுக்க மாட்டாதவனைப்போல் ரவி தலையைக் குனிந்து கொண்டான்.

''எனக்கு எதற்கு அந்தப் பென்சில்?''

சேகர் மேலே அவனை எதுவும் கேட்கவில்லை. அவன் ரவியின் பிடிவாதமான குரலை, மறுப்பைக் கண்டித்திருக்கலாம். எதுவும் சொல்லாமல், அவன் அப்படிப் பொறுத்துப் போவதினால்தான் ரவி அவ்வளவு தூரத்துக்குப் போக ஆரம்பித்து விட்டான்; ஒவ்வொரு செயலிலும் அவள் பொறுமையைச் சோதிப்பது போல ஒரு வீம்பு தெரியும்படி.

ரவி உள்ளே போய் விட்டான். சேகர் கணக்கெழுதத் தொடங்கினான். ஒவ்வொரு துணியாக எடுத்து உதறிக் கொண்டே வந்தபோது, ரவியின் நிஜாருக்கடியில் அந்தத் துண்டுப் பென்சில் கிடந்தது. அவன் எடுத்துப் பையில் எப்போது ஒளித்து வைத்திருந்தது. அப்போது விழுந்ததா? அல்லது மீனு இடத்தைக் கவனிக்குமுன் அழுக்குத் துணிகள் மேலே விழுந்து விட்டனவா?

சேகரும் அவளும் ஒரு கணம் நிமிர்ந்து பார்த்துக் கொண்டனர், அந்தப் பென்சிலைப் பார்த்ததும்.





உரிமை

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

அவர்களுக்குள்ளே பரிமாறிக் கொண்ட கேள்வியும் பதில்களும்?

ரவியை அவன் தடுத்துகொள்ள மாட்டான். அப்படியே போகட்டும். எவ்வளவு நாட்கள் தள்ள முடியுமோ, அப்படி. சேகரின் பொறுமையைத் தாங்கிக் கொள்ளத் தனக்கும் சகிப்பு உள்ள வரையில்தான்.

மாலை நேரம். அடுப்பெதிரே முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் மீனு. அறையின் மெல்லிருளில் அவள் உருவம் மங்கலாய்க் கரைபட்டுத் தெரிந்தது. சமையல் தொடங்கவில்லை. அடுப்பு தூங்கியது. அவள் மனத்தைப் போல. கனிந்த கண்ணிமைகள் தன் மேலேயே தாழ்ந்த போது பழைய நினைவுகள் கனவு போல எழுந்தன.

சேகருக்குப் புதிதாக வந்த காரியதரிசி அவள். வெண்ணிறப் புடவையும் பனி வெளுப்பாய்ச் சோளியும், அவள் நிறத்துக் கேற்ற மாதிரி அணிந்து கொண்டு, தன் முன் வந்து நின்றபோது, சேகர் ஒரு முறை அவளை நிமிர்ந்து பார்த்து விட்டுக் குனிந்து கொண்டான்.

''உங்கள் அனுபவம்?''

''இதுவரை ஒன்றும் இல்லை.''

''எனக்கும்கூடத்தான் புதிது!''

''ஸார் —''

''இந்த அனுபவத்தைச் சொல்கிறேன். என் முதல் பெண் காரியதரிசி நீங்கள்!''

'கொல்'லென்று சிரித்துச் சட்டென்று வாயைப் பொத்திக் கொண்டாள் மீனு.

அவனுள் நேர்ந்த வியப்பை, அவள் கண்களில் அவள் கண்டு கொண்டாள். கன்னங்களில் சிவப்பு படர்ந்தது. கண்களின் மேல் இமைகள் மெதுவாய்த் தாழ்ந்தன. பார்வை குனிந்தது. சற்று முன் சிரித்து விட்ட ஞாபகம்.

''நீங்கள் — இந்த ஆபீஸ் காரியத்தைப் பொறுத்தவரை — என்னிடம் சுதந்திரமாகப் பேசலாம். உங்கள் யோசனைகள் எனக்கு உதவியாக இருந்தால் நல்லது.''

அவள் பேச்சு, யோசனைகள், அவைகளை வெளியிடும் சுதந்திரம், எல்லாம் அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் கிடைக்க ஆரம்பித்து விட்டன. அது அவனுடைய வேலையைப் பொறுத்த வரை என்று, அந்தக் காரியத்தின் வரம்புகளோடு நிற்கவில்லை. சில சமயங்களில் அடக்க முடியாமல் அருவியாகக் கிளம்பும் சிரிப்பைப் போல், அவள் உணர்ச்சிகளும் பேச்சில் பொங்கித் துள்ளி விழும்.

ஒரு நாள் சேகர் வர நேரமானபோது அவன் அறைக்குள் காரியமாக நுழைந்தவள் அப்படித்தான் அயர்ந்து நின்று போனாள். மேஜைமேல் கண்ணாடித் தகட்டில் படிந்த புழுதியில் விரலால் அழித்து விட்டது போல் எழுதிய அவள் பெயர்! அவள் முதுகில் ஒரு சிலிர்ப்பு ஓடிற்று. தான் நெகிழ்ந்தாற் போல் ஒரு தவிப்பு. அது வரையில் புரியாத புதுப் பருவம் ஒன்றில் புகுந்து விட்டதைப் போன்ற உணர்ச்சி.

கைக்குட்டையை எடுத்து அந்த எழுத்துக்களை அவசரமாகத் துடைக்க ஆரம்பித்தாள். பின்னால் காலடிச் சத்தம் வந்து நின்றது. மேலெழும் பறவையின் இறக்கைப் பிரிவாய்த் திறந்த 'ஸ்பிரிங்குக் கதவுகள்.—சேகரை அங்கே கண்டதும் கைக்குட்டையை அப்படியே போட்டு விட்டு, அவனைக் கடந்து ஓடிப் போய் விட்டாள். மறுபடியும் அவன் கண்ணில் தென்படும் துணிவு வர வெகு நேரமாயிற்று.

இன்னும் அந்தக் கைக்குட்டை பத்திரமாக இருக்கிறது அவள் பெட்டியில். சலவை செய்த மடிப்புக்கலையாத உடைகளின் அடியில் அவள் நெஞ்சில் அடித்தளத்தில் படிந்து நிற்கும் அவன் நினைவைப் போல; அந்தரங்கத்தில் கமழும் இனிய இரகசியமாக.

பிற்பகல் நேரம் சில சமயம் அவள் சிற்றுண்டி அவன் மேஜைமேல் இருக்கும். மூடியைத் திறந்ததும் உள்ளே தேங்காய்ச் சாதமும் மேலே காரட்டின் மஞ்சள் நிறச் சுருளும் தெரியும். அவன் காலி செய்து முடிப்பதற்கும், மீனு கேட்டுக் கொண்டு உள்ளே வருவதற்கும் சரியாக இருக்கும்.

''எப்படி இருந்தது? உங்களுக்குப் பிடிக்குமென்று நானே செய்து கொண்டு வந்தேன்.''

''எனக்குப் பிடிக்கவில்லை.''

''எது?''

''என்னை இப்படித் தனியாகச் சாப்பிட விட்டு விட்டது.''

சிரிப்பில் அவள் முகம் மலர்ந்து போகும். ஆனால் வெட்கத்தில் பேச்சு வெளி வராது. அவன் முகத்தில் தவழும் புன்னகையின் ஒளியில் கண் கூச, இமைகளை விரல்களால் மூடிக் கொள்வாள்.

அவன் பேச்சிலேயே எப்போதும் குறும்பு மலிந்திருக்கும்; அவள் நெஞ்சை நெருடி விடுவதைப் போல. அது வேலையைப் பற்றி இருந்தாலும் சரி. அவளைப் பற்றிய குறிப்பானாலும் சரி.

தாயும் அண்ணனும்கூடக் கேட்டார்கள் :

''நன்றாக யோசித்துப் பார்த்தாயா? அவர் ஒரு முறை மணம் செய்து கொண்டு மனைவியை இழந்தவர். ஏழு வயதில் ஒரு பையன் இருக்கிறான். நீ அங்கே அவனுக்குச் சித்தியாகவும் போகிறாய்; அவருடைய மனைவியாக மட்டும் அல்ல. அந்த அனுபவம் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்த்தாயா?''

அவள் தயங்கவில்லை. ''நான் பார்த்துக் கொள்வேன்'' என்று பதில் சொன்னாள்.

அவளால் சமாளிக்க முடியும் என்ற தைரியம். சேகரின் துணையும் அவளைப் புரிந்து கொள்ளும் ஆதரவும் கிடைக்கும் என்ற நம்பிக்கை. அவர்கள் சொன்னதைப் போல், அவனுடைய மனைவியாக மட்டுமல்லாமல், குழந்தையின் சித்தியாகவும் கூடத்தான். இப்போதும் அத்துணிவு குலையவில்லை. ஆனாலும் இச்சூழ்நிலைக்கு அவள் தன்னைத் தயார் செய்து கொள்ளவில்லை என்று தோன்றியது.

அவர்கள் இருவருமாக, தங்களுக்குள் வாழ்க்கையைப் பகிர்ந்துகொண்டு அனுபவித்தது மூன்று மாதங்களுக்குத்தான். அப்புறம் ஒரு நாள் திடீரென்று போர்டிங்கிலிருந்து வந்து இறங்கி விட்டான் ரவி. சேகர் சொல்லி

வைத்திருந்ததுதான்: அதுவும் பிரமிப்பாக இருந்தது. அந்தச் சந்திப்பு நேர்ந்த விதம்.

ரவியுடைய தாயின் புகைப்படம் ஹாலில் இருந்தது. அவள் பார்வையில் அடிக்கடி விழும் அது. ரவியைப் பார்த்ததும் அவள் அயர்ந்து போனாள். விழி, நிறம், முக அமைப்பு எல்லாவற்றிலும் அவன் தாயின் சாயல். அந்த அழகை அவன் முகத்தில் நிழலாகக் கண்டபோது அவள் மனத்தில் ஒரு புது வித உணர்ச்சி. அதன் இனிமை அவளை மருள வைத்ததைப் போல. கூடவே இனிப்பின் முடிவாய் மருட்டும் இலேசான கசப்பாய் அந்த உணர்வு. விழிகளின் அசைவின்றி அவளை ரவி உற்றுப் பார்த்தபோது என்ன நினைத்துக் கொண்டிருப்பான்? அவன் தாயின் இடத்தை அவள் எடுத்துக் கொண்டு விட்டாள் என்று? அந்த மௌனத்தில், தயக்கத்தோடு குவிந்த கைகளில், உணர்ச்சி தேங்கி நின்று விட்டதைப் போன்ற தோற்றம். அவன் கையிலிருந்து நழுவி ஓடிய நாய்க்குட்டியைக்கூடக் கவனிக்கவில்லை.

ரவிக்கும் சேகருக்கும் இடையில் அவள் புகுந்து விட்டது மெய்யென்றால், தனக்கும் சேகருக்கும் நடுவே அவன் புகுந்து கொண்டு விட்டதும் உண்மைதான். அதை அவள் உணரும்படி செய்வதுபோல இருந்தது அவன் நடந்து கொண்ட விதம். "இதோ நானும் இருக்கிறேன்" என்று மீண்டும் மீண்டும் சொல்லாமல் ஞாபகப்படுத்துவதைப் போல.

சட்டென்று அறையின் விளக்கு எரிந்தது. இருளில் தான் மறைந்திருந்ததைப் போல, தன் ஒளிந்த நினைவுகளும் வெளியான திகைப்பு. 'ஸ்விட்ச்'சில் விரல் அழுந்த ரவி கண்களில் வியப்புத் தெரிய நின்று கொண்டிருந்தான். ஒரு கணந்தான். வந்த சுவடு தெரியாமல் நழுவி விட்டான், விளக்கை மீண்டும் அணைத்து விட்டு.

மனமின்றி எழுந்து விளக்கைப் போட்டாள். சமையல் தொடங்கியாயிற்று. பாலைக் காய்ச்ச அலமாரியைத் திறந்தவள் அப்படியே திகைத்து நின்று விட்டாள். பால் கிண்ணம் கவிழ்ந்திருந்தது. கீழே சிந்தியிருந்த பாலை நாய் குடித்திருக்க வேண்டும். கதவு வரை நாயின் பாதச் சுவடுகள். அதை அவள் கண்டு பிடித்து விட்டாளா என்று பார்க்கவா விளக்கை ஏற்றினான் ரவி?

அவள் முகம் சிவந்தது. கண்ணில் கோபக் கண்ணீர் ததும்பிற்று. வாய் திறந்து கொட்டிவிட வகையில்லாத மனத் தாங்கல். உள்ளே தேங்கியதில் நெஞ்சில் வண்டலாகப் படிந்து உறுத்தும் வேதனை. இதற்கு ஒரு வழி செய்யாவிட்டால் அவளால் காலம் தள்ள முடியாது. பொறுமையின் எல்லைக்கு அவள் எட்டியாயிற்று. தன் இடத்தை, தன் உரிமையை உறுதி செய்து கொள்ளாவிட்டால் போதாது. தன்னைப் பலவீனமானவள்



"நான் வள்ளித் திருமணம் நாடகத்திலே வேடரா இருபது வருசம் நடிச்சுக்கிட்டு வர்றேன். எனக்கு வாத்தியார் வேலை கிடைக்குமா இங்கே?"

என்று அந்தச் சிறு பையன் நினைக்கும்படி விட்டு விடக் கூடாது.

இரவின் மெத்தென்ற இருள். குருட்டு யோசனையாய்க் கண்ணை மூடிப் படுத்திருந்தாள். அருகே வந்து அமர்ந்த சேகர் தலையணையிலிருந்து அவள் முகத்தை மடிமேல் எடுத்து வைத்துக் கொண்டான். கூந்தலின் மலர் நறுமணத்தை நுகருவதைப் போல் அவன் முகம் குனிந்தது.

"தூங்கி விட்டாயா மீனு?"

"இல்லையே?"

"பின்னே என்ன யோசனை?"

"ஒன்றுமில்லை. ரவியைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்."

"என்னவென்று சொல்லேன் என்னிடம்."

"அந்த உரிமையை நான் எடுத்துக் கொள்ளலாமா?"

"தாராளமாக!"

"அவனைப் 'போர்டிங்'குக்கே அனுப்பி விட்டால் நல்லது இல்லையா? அவன் விவரம் தெரிந்த பையன். தன் வயதுக் குழந்தைகளிடையே இருந்தால் அவன் முன்னுக்கு வரச் சௌகரியமாக இருக்கும்."

சட்டென்று அவன் விரல்கள் விலகின: அவ்வளவு அருகே இருந்தும் அவன் பிரிந்து நழுவுவதைப் போன்ற உணர்ச்சி. பிடியின் குழைவிலும் அவளால் அவன் உள்ளத்தைத் தொட முடியாதது போல் ஓர் ஏக்கம்.

"ரவியைத் திருப்பி அனுப்பி விடலாம் என்று சொல்கிறாயா மீனு?"

"அப்படி ஒன்றும் இல்லை. அவன் விடுமுறைகளுக்கு வரலாமே? இங்கே அவனுக்கு இணையான குழந்தைகளும் சிநேகிதர்களும் இல்லை. அங்கே நிச்சயம் அவன் சந்தோஷமாக இருப்பான் என்று தோன்றுகிறது."

சற்று நிமிர்ந்து அவள் கன்னத்தைத் தொட்டான் அவன்; மனத்தாபத்தைச் சமாதானப்படுத்துவதைப் போல. வழக்கமாக அந்த விரல்களைப் பிடித்துக் கொள்வான் சேகர். இப்போது அவன் நினைவு எங்கேயோ தொலைவில் சென்று விட்டது. குரல் இடறியது.

"குழந்தை உன்னிடமே இருக்கட்டும் மீனு! உன்னைப் போல அவர்கள் கவனித்துக் கொள்ள மாட்டார்கள். அங்கே கூட்டத்தில் ஒருவனாகத்தான் இருக்க முடியும் அவனால். குடும்பத்தில் இதைப் போல அருமையாக, தனிப்பட்டவனாக இருந்தாலும் தெரியும். தனிப் பரிவுக்காக அவன் ஏங்கிக் கொண்டிருப்பது எனக்குத் தெரியும். நமக்குள் அவன் தன் தாயை நினைத்து ஏங்கும்படி நாம் விட்டு விடக் கூடாது....."

"சரி.... விட்டு விடுங்கள்." பேச்சுத் தான் முடிந்தது. யோசனைகள் ஓயவில்லை. குரலில் அவன் அந்த அமைதியை வரவழைத்துக் கொள்ள எவ்வளவு சிரமப்பட்டான்

என்று சேகருக்குத் தெரிய நியாயமில்லை: ஆனால் அச் சமாதானம் அவளுக்கே இயற்கையாகப் படவில்லை. நெஞ்சில் இடறும் ஒற்றைப் பருக்கையைப் போல, தன் பேச்சில் ஏதோ ஒரு பொய்ம்மை ஒளிந்து கொண்டிருப்பது போல அவளுக்குப்பட்டது.

குழந்தை சேகரின் அன்புக்கு ஆளாவதில் தான் பின்னுக்குப் போய் விட்டது போலத் தோன்றியது அவளுக்கு. அந்தத் தோல்வி உணர்ச்சி மௌனக் குமுறலாய் நெஞ்சை அடைத்து நின்றது. அவளுக்கு உரிமை இல்லை: இருவரின் அன்பிலுமே. ரவிக்காக அவள் விட்டுக் கொடுத்த சந்தர்ப்பங்கள் நினைவின் பின்னரங்கில் விரிந்து நின்றன : சேகர் தூங்கி வெகு நேரம் ஆனவரையில்.

அவர்கள் வீட்டில் முன் வேலியை ஒட்டிப் பத்தடி இடைவெளி. அங்கே ஏதாவது பூச்செடிகள் வைக்கலாம் என்று அவள் திட்டமிட்டிருந்தாள். விதைகளுக்கும் பதியனுக்கும் அவள் சேகரிடம் சொல்ல வந்தபோது, அவன் தயங்கினான்:

''அந்த இடத்திலா வைக்கப் போகிறாய்?''

''ஏன்? வீட்டின் முன்புறந்தானே பூஞ் செடிகள் வைத்தால் அழகாக இருக்கும்?''

''இல்லை.... ரவி அங்கேதான் மட்டையைப் பிடித்துக் கொண்டு கிரிக்கெட் என்று விளையாடுகிறான். அந்த இடத்தை மறுப்பது எனக்குச் சரியாகப்படவில்லை..... பின்புறம் வேண்டுமானால் ஆசைக்கு ஏதாவது போட்டுக் கொள்ளேன்.''

அவள் பதில் சொல்லவில்லை:

''என்ன சொல்கிறாய் மீனு?''

''செடிகள் எதுவும் வேண்டாம் என்று நினைக்கிறேன். வேணுமானால் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்.''

அவள் முகம் விழுந்த விதத்தை அவன் பார்க்கவில்லையா? அப்படியென்றால் ஆறுதலாகவேனும் ஏன் ஒரு வார்த்தை சொல்லவில்லை? வீட்டில் மட்டும் குழந்தைக்கு முன் இடம் தனக்குப் பின்னால் என்று? மனத்திலும்கூட அப்படித்தானா?

புதுமையாக ஏதாவது செய்ய வேண்டுமென்று விதம் விதமாகச் சமைப்பாள். அதை அவளிடமே சேகர் பாராட்டுவான். அந்தப் பேச்சைக் கவனித்துக் கொண்டேயிருப்பான் ரவி. அவனுக்குப் பரிமாற வந்ததும் குப்புற விழுந்து மறித்துக் கொள்வான்.

''வேண்டாம். எனக்குப் பிடிக்காது.''

''எப்படிச் சொல்கிறாய்? சாப்பிட்டுப் பார்க்கக் கூட இல்லையே?''

''எனக்கு வேண்டாம். அவ்வளவுதான்!''

''சரி. விட்டு விடேன்'' என்று சேகர் அவர்களைப் பிரித்து விடுவான்.

அவளுக்குத் தன்னுள் ஊறும் ஏதோ ஓர் இம்சை. தான் செய்து குழந்தை சாப்பிடவில்லையே என்ற உணர்வு அல்ல அது. தன்னைப் பாராட்டியது அவனுக்குப் பொறுக்கவில்லையோ? அதை அவன் காட்ட முற்படும் போது, தன்னை ஒரு படி இறக்கி விடுவது போல அவன் நடந்து கொள்ளும் போது, சேகரும் அதற்கு விட்டுக் கொடுக்கும் அந்தப் பாவனை — அதுதான் அவளை உறுத்திக் கொண்டே இருக்கும்.

சேகரும் அவனோடுதான் ஒத்துப்போவான். அப்போதுதான் அவளுக்குத் தான் நழுவி விட்டதைப் போல இருக்கும். இப்போது யார் அவளுக்குப் போட்டி? யாருடன் அவள் சேகரின் பிரியத்தைப் பங்கிட்டுக் கொள்ளத் துடிக்கிறாள்? யாருடைய பின்னிழலாகத் தான் ஒதுங்கி விட்டதாக எண்ணிக் குமுறுகிறாள்? ரவியின் தாயா? அல்லது ரவியேதானா அது? மறைந்து போனவளின் உயிர்த்த ஞாபகமா அந்தக் குழந்தை?

மணந்து கொள்ளுமுன் அவள் சிலசமயம் எண்ணியதுண்டு: சேகரைத் தான் என்றும் முழுமையாக அடைய முடியாது என்று. அவன் நெஞ்சின் ஆழத்தில் அந்தப் பழைய நினைவுகள் கனிந்து கொண்டுதான் இருக்கும். அதை அவள் மறுக்கவில்லை. ஆனால் அவை இப்படி உயிர் மணம் வீசும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. தன் பங்குக்காக அவள் ஏங்கும் போது, அவள் முன் ஒரு கை, இப்படி மறுப்பாய்த் தடுக்கும் என்று அவள் சிந்தித்துப் பார்த்ததில்லை. இந்தப் போட்டியில் உயிர் இருந்தது. வெறும் ஞாபகம் இல்லை இது.

மழைக்காலம். குளிர் இறங்க ஆரம்பித்து விட்டது. சேகருக்காக ஒரு ஸ்வெட்டர் பின்னியிருந்தாள் மீனு. சிவப்பு நிறக் கம்பளி நூல் குறுக்கும் நெடுக்குமாக மார்பிலும் கையிலும் நூல் வேலை. தன் திறமையைத் தானே வியந்து கொள்வதைப் போல் மடிமேல் பரத்திக் கொண்டு விரல்களை ஓட விட்டுக் கொண்டிருப்பாள். சேகர் அதை அணிந்து கொண்டபோது அவளுக்குத் தனிப் பெருமை. அவன் அகன்ற மார்பில் ஒவ்வோர் இடத்திலும் அவள் விரல் பதிந்தது போல ஒரு மகிழ்ச்சி தோய்ந்த உணர்வு. ''நன்றாகப் போட்டிருக்கிறாயே?'' என்று அவன் பாராட்டிய விதத்தைத் தனக்குள்ளே நினைத்து அனுபவித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அந்தச் சந்தோஷம் எவ்வளவு சீக்கிரம் மறைந்து போயிற்று !

அன்று மாலை சேகர் அதைப் போட்டுக் கொள்ள எடுத்தபோது முன்புறம் கைகளும் கத்திரித்தாற் போல் எடுத்திருந்தது. கீழே விழுந்து நாய் கடித்திருக்கலாம். எலியின் தொந்தரவாகவும் இருக்கக் கூடும். ஆனால் கத்திரித்து எடுத்தாற் போன்ற அந்த ஒழுங்கு?

அதில் ரவிக்கு என்ன திருப்தி கிடைத்திருக்கக் கூடும்? அவளை அந்த அற்ப மகிழ்ச்சியைக் கூட அனுபவிக்க விடாமல் செய்வது ஏனோ ? அவனைக் கோபிக்க முடியவில்லை. தனக்குள் எண்ணிக் குமுறும் வேதனையில் கண்கள், ஆழ்ந்து கலங்கி நின்றன.

அவர்களிடையே ரவி உட்கார்ந்திருந்த போது அவள் சேகரைக் கேட்டாள். ''உங்கள் ஸ்வெட்டரில் அதற்குள் ஓட்டை விழுந்து விட்டதே ?''

''எலி கடித்திருக்கும்!'' என்றான் சேகர் சிரித்துக் கொண்டே.

''அது பகலிலும் கூடக் கும்மாளம் போடுமா என்ன ?''

அவள் கேள்வி ரவியைப் பார்த்துத் தெறிப்பது போல் இருந்தது. தலை நிமிர்ந்தவன் குற்றச்சாட்டாய்ச் சுடும் சித்தியின் பார்வையைக் கண்டு அயர்ந்து போனான். மெதுவாக எழுந்து உள்ளே போய் விட்டான். அவனை அப்படி மடக்கி விட்டதில் அவளுக்கு ஒரு திருப்தி. ஆனால் கூடவே ஓர் ஏக்கத்தில் கண்

கலங்கிற்று. சேகரின் பாவனையிலும் அவள் மன இலக்கத்தின் நிழல் தெரிந்தது. அவன் குரல் நெகிழ்ந்தது.

''சிறு விஷயங்களுக்குக் கூட நீ இப்பொழுதெல்லாம் மனம் விட்டுப் போகிறாய் மீனு! நீ கெட்டிக்காரப் பெண்! உன் வேலையில் சாமர்த்தியத்தை நான் எனக்குள் வியந்து கொண்டதுண்டு. இந்தச் சிறு குடும்பத்தை நடத்துவது உனக்குப் பெரிய காரியமாகத் தோன்ற முடியாது...!''

அவன் சொல்லாமல் சுட்டிக் காட்டிய விதம்? தேறுதலுக்குச் சொல்வது போல் இருந்தாலும் அதில் தெரிந்த அழுத்தம்? குறு நேர மின்னலின் இரவு பகலாவதைப் போல அவள் அந்தரங்க உணர்ச்சிகள் அந்தக் கணப்பொழுதில் அவனுக்குத் தெரிந்து விட்டனவா? என்ன நினைத்தான் அவளைப் பற்றி? முகத்தில் இரத்தம் குழம்பிய வேகத்தில் கண்கள் குறுகுறுத்தன.

''உங்களை ஒன்று கேட்கலாம் என்று நினைக்கிறேன்.....''

''என்ன மீனு?''

''நான் மறுபடியும் ஒரு வேலைக்குப் போக எனக்கு அனுமதி கொடுங்கள்!'' அவன் திகைத்து நின்றான். அந்த வேண்டுகோள் அவன் எதிர்பாராதது. அதுவும் அவள் கேட்ட சமயம்?

''எதற்கு மீனு? நமக்கு அதற்கு அவசியம் இல்லையே?''

''எனக்கு அது ஒரு மாறுதலாக இருக்கும். இங்கேயும் எனக்கு அப்படி நான் முழுதும் வேலையில்லை!''


''பரவாயில்லை. நீ இங்கே வீட்டைக் கவனித்துக் கொண்டால் போதும், மீனு! அதில் உனக்குத் திருப்தியும் சந்தோஷமும் கிடைத்தால், எங்கள் இருவருக்கும் வேறு எதுவும் தேவையில்லை.''

அந்த 'எங்கள்'? அவரில் இருவர்? அவளுக்கு எந்த இடம்? திருப்தியும் சந்தோஷமுமா? அவளுக்கு எப்படிக் கிடைக்கும் அது? சோபை இழந்த தன் உலகம்; தன்னைச் சுற்றிப் படர் இருந்தும் தன்னை வாட்டும் தனிமை; அவற்றை அடையாளம் கண்டு கொள்ள முடியுமா சேகரால்?

''என்ன சொல்கிறாய்?''

''நீங்கள் சொன்னபடி.''

ஒரு வாரம் ஆகி இருக்கும். மாதத்தின் முதல் நாட்கள். கடையில் சாமான்கள் வாங்கிவர வேண்டி இருந்தது. சாமான்களைச் சேகரித்துக் கொண்டு, பணம் கொடுக்கப் பையைத் திறந்த போது இடது கை மோதிர விரல் மூளியாகத் தெரிந்தது. மணமான போது சேகர் அவள் விரலைப் பற்றி இட்ட மோதிரம் அது. விரலுக்குச் சற்றுப் பெரிதாக இருந்ததென்று நூல் சுற்றிப் போட்டுக் கொண்டிருந்தாள். எங்கே விழுந்திருக்கக் கூடும்? கடையில் தேடிக் கிடைக்கவில்லை. வழி நெடுக அதே யோசனை.



''அட கஞ்சப் பிரபுக்களே! 72 மணி நேரம் இடைவிடாமல் சைக்கிள் விட்டேனே. அதுக்கு 'தலைவர்' கணக்கிலே கடைக்காரருக்குக் கொடுக்கப் பணம் தேறலியே!''

குளிக்கும் போதும், உடை மாற்றிக் கொள்ளும் போதும் துணியின் மெத்தென்ற வழு வழுப்பை உணர்ந்த போதும், சேகரின்மேஜையில் தாம்பூலத்தை மடித்து வைத்தபோதும், பைகளுடன் கடைக்குக் கிளம்பிய போதும் விரலைப் பார்த்துக் கொண்ட ஞாபகத்தை நினைவில் வரவழைத்துக் கொள்ள முயன்றாள். பனிக் காலத்துக் கண்ணாடியைப் போல அந்த நினைவு தெளிய மறுத்துவிட்டது.

அவசரமாக வீட்டுக்குத் திரும்பினாள். வாசற்படி ஏறிய போது நினைவுக்கு வந்தது. கூந்தலில் எண்ணெய் விட்டுக் கொண்ட போது மோதிரத்தைக் கண்ணாடியின் அருகே கழற்றி வைத்தாள். அப்புறம் போட்டுக்கொண்ட ஞாபகம் இல்லை. ஒரு பெருமூச்சுடன் சாமான்களின் சுமையை இறக்கிவிட்டு, ஒரு திட நம்பிக்கையுடன் கண்ணாடிக்கு அருகே போனாள். அவளுக்குத் 'திக்' என்று ஆயிற்று. கண்ணாடியை ஒட்டிய தட்டு காலியாக இருந்தது.

யார் எடுத்திருப்பார்கள்? வேலையாள்கூட வீட்டுக்குப் போய் விட்டாள். அவளையும் ரவியையும் தவிர வீட்டில் யாரும் இல்லை. பின்னால் காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினாள். ரவி. அவள் அதிர்ச்சியை நேரில் பார்த்துத்தெரிந்துகொள்ள வந்து நிற்கிறானா?

''என் மோதிரம் எங்கே?''

கண்களில் வினா தெரிய அவன் தலை நிமிர்ந்தான். புருவங்கள் கம்பளிப் பூச்சியாய் நெளிந்தன. உள் துடிப்பில் இலேசாகத் திறந்த வாய்.

''எந்த மோதிரம்?''

''என் மோதிரம். இங்கேதான் கழற்றி வைத்தேன். எங்கே எடுத்து ஒளித்து வைத்திருக்கிறாய்?''

''நான் எடுக்கவில்லை.''

''பொய்!''

''நான் பார்க்கவில்லை.'' அவன் குரல் இடமாய் ஆழ்ந்து ஒலித்தது. முகத்தில் பனி வெளுப்பு பூத்தது. வலையில் சிக்கிய மிருகம் பதுங்குவது போன்ற பார்வை.

அவள் நேரே அவன் அறைக்குப் போனாள். அவன் மேஜை டிராயரை, துணி அலமாரியை, பெட்டியை — ஒவ்வொன்றையும் விரல்கள் துளைத்து தேடின. எங்கும் இல்லை. தோல்வியில் எழுந்த ஆத்திரம் குரலில் பொங்கி வடிந்தது.

''அப்பா வருவதற்குள் கொடுத்து விடு. இல்லையானால் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது. அவரிடம் உன்னைப் பற்றிச் சொல்லி விடுவேன். இதுவரையில் நீ

செய்தது எல்லாவற்றையும்! அப்புறம் அவர் உன்னைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டார்.''

ரவி முகத்தைக் கைகளில் தேக்கிக் கொண்டு அழத் தொடங்கினான். ஆனால் அவள் உள்ளம் கனியவில்லை. இரக்கத்தின் கசிவு தோன்றவில்லை. எல்லாம் வெறும் பாவனை. அவனை மீண்டும் கலங்க வைக்கச் செய்யும் வீம்பு. அவள் பணியப் போவதில்லை அந்தத் தடவை, என்ன ஆனாலும் விடப் போவதில்லை.

எதுவும் செய்யத் தோன்றாமல் நாற்காலியில் அப்படியே உட்கார்ந்திருந்தாள். விளக்கை ஏற்றக்கூட மனமில்லை. சேகர் வீடு திரும்பி உள்ளே வந்ததைக் கூடக் கவனிக்கவில்லை; அவன் திடும் என்று விளக்கைப் போட்டுவிட்டு எதிரே நின்ற வரையில். அவன் கையில் இருந்த பொட்டலத்தை அவள் மடியில் வைத்து விட்டு, அவள் கன்னத்தைச் சேர்த்து மிருதுவாகக் கிள்ளினான்:

''ஹாப்பி அனிவர்ஸரி!''

அவள் மடியில் பிரிந்து கிடந்த பொட்டலத்தைப் பார்த்தாள். இனிப்புத் துண்டங்கள்: அதில் ஒன்றை எடுத்து அவள் வாயில் போட வந்தான் சேகர்.

''மறந்து போய் விட்டாய் இல்லையா?''

அவன் நினைவுபடுத்திய அதிர்ச்சியிலிருந்து தெளியுமுன், நீட்டிய அவன் கைவிரல்களில் பார்வை விழுந்து மலைத்து நின்றது. அவன் இடது விரலில் இரட்டை மோதிரங்கள். சேகர்தானா எடுத்தது அவள் மோதிரத்தை? அவன் சிரிப்பில் அறை எதிரொலித்தது.

''இன்று நமக்குக் கலியாணமாகி ஒரு வருஷமாகிறது இல்லையா? நான் மறந்தே போய் விட்டேன் முதலில். அப்புறம் வேலை பார்த்துக் கொண்டே இருந்தவன் டிராயரில் இருந்த போன வருஷத்து டயரியை ஒரு குறிப்பாகப் புரட்டினேன். இந்தத் தேதியைச் சுற்றி இட்டிருந்த சிவப்பு வட்டம் கண்ணைப் பறித்தது. ஓர் ஆவலில் வீட்டுக்கு நேரே வந்து பார்த்தேன். நீ இல்லை.''

அவன் கம்பீரத்துடன் அவள் குனிந்த முகத்தை நிமிர்த்தினான். முகத்தில் ஒளி மிதக்க, அவளை வியப்படுத்தும் குரல்.

''ரவி வெளியே விளையாடிக் கொண்டிருந்தான் போல் இருக்கிறது. நான் உள்ளே வந்த போது கண்ணாடிக்கு அருகே தட்டில் உன் மோதிரம் இருந்தது. நீயும் என்னைப் போலவே தி டீ ரெ ன் று நினைவுபடுத்திக் கொண்டுதான் எடுத்து வைத்திருப்பாய் என்று தெரிந்து கொண்டேன். எதற்கும் உன்னிடம் விளையாடிப் பார்க்கவேண்டும் என்று—''

அவன் தன் மோதிர விரலை அவள் முகத்துக்கு நேரே நீட்டினான்.

அவளால் பதில் சொல்ல முடியவில்லை. அவனுக்கு உண்மையில் நினைவிருந்ததா? அவன் அந்த நாளைக் கொண்டாடிய விதம்? மகிழ்ச்சி நிலவ வேண்டிய அன்றைக்கு உள்ளே கண்ணைக் கசக்கிக்கொண்டிருக்கும் குழந்தை? அதுவும் தான் செய்யாத குற்றத்துக்கு?

''என்ன யோசனை மீனு? 'ஸ்வீட்'டை எடுத்துக் கொள். ரவி எங்கே?''

''இருங்கள். இதோ அழைத்துக்கொண்டு வருகிறேன்!'' என்று தன்னை விடுவித்துக் கொண்டு உள்ளே போனாள்.

''ரவி!''

குனிந்த தலையுடன் இறக்கை ஒடிந்த பறவையாய் அவன் மௌனத்தில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தான். அவள் குரல் கேட்டு முகம் நிமிர்ந்தான். கண்கள் சிவந்திருந்தன. அவளை உற்றுப் பார்த்த விழிகளில் சரசர வென்று நீர் நிறைந்தது.

''அப்பாவிடம் சொல்லியாச்சா?''

வெடித்துக்கொண்டு வந்தது இக் கேள்வி; நெஞ்சு திறந்துகொண்டதைப் போல.

''இல்லை.''

''நெஜம்மா மோதிரத்தை நான் எடுக்கவில்லை.''

''எனக்குத் தெரியும்'' என்று அருகே வந்து வாடிய பூவாய்க் கவிழ்ந்த முகத்தை நிமிர்த்தினாள். ''என் மேல் கோபம்தானே, உனக்கு?''

அவன் பொட்டென்று உடைந்துபோனான்: உணர்ச்சிகள் உருகித் தவித்தன. உடல் குலுங்கிற்று. அவன் பிடியில் விசிப்பு நிலை நிற்று. அவள் அவனை மெதுவாய் உயர்த்தி ஒரு மூர்க்கமான பரிவுடன் வாரி இறுகத் தழுவிக் கொண்டாள். குரல் கனவில் நெகிழ்ந்தது.

''அழக் கூடாதும்மா.....எதற்காக?''

அவன் பதில் சொல்லாமலே அவளுக்குத் தெரிந்தது. அவன் ஒரு குழந்தை. அறிவு வளர்ந்திருந்தாலும் உணர்ச்சிகளை இனம் பிரிக்கத் தெரியாத பருவம். அவற்றைப் பக்குவமாய் உணர்ந்து அவனுக்கு வழிகாட்ட அவன் தாய் இல்லை: அவள் அதைச் செய்திருக்க வேண்டும். ஆனால்?

ஆனால் அவளுக்கு அவன் மீது ஒரு பயம் தான் இருந்தது: எங்கே தனக்கு அவன் போட்டியாக இருப்பானோ என்று. பரிவு ஏதும் இல்லை. அவனை அவள் ஒரு குழந்தையாக நினைத்து விட்டுக்கொடுத்து விடவில்லை; தனக்கு நிகராகப் பகிர்ந்துகொள்ள வந்தவனாகவே எண்ணினாள். அவனிடம் மறைந்து போன இன்னொர் உயிரையும் மனத்தையும் கற்பனை செய்து கொண்டாள். அவள் ஆற்றாமை இரட்டையாயிற்று. அந்த நினைப்பில் அன்பு பிறக்க வகை இல்லை. செய்வது எதிலும் குற்றம்தான். காண முடியும். சில சமயம் செய்யாததற்கும்கூட.

தாயை இழந்தாயிற்று. தந்தையையும் அவளிடம் இழந்து விடுவோமோ என்ற பயம் அவனுக்கு. அந்தப் பயம் உள்ளவரையில் அவனுக்கு அவளிடம் நம்பிக்கை விழமுடியாது. நம்பிக்கை பிறக்கும்வரையில் பிரியம் தழைக்க முடியாது.

அவனை இடையில் தூக்கிக் கொண்டு முன்புறம் வந்தாள்; நெற்றியில் கலைந்து விழுந்த மயிரைச் சரியாக ஒதுக்கிக்கொண்டே: கன்னங்களில் இன்னும் கண்ணீரின் கறை காயவில்லை.

''ரவி! இதோ பார்: அப்பா என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார் என்று!'' ஒரு 'ஸ்வீட்'டை எடுத்து அவன் வாயில் செருகினாள். ஆவலாய் அவன் இதழ்களும் அதில் பாதியைக் கவ்வின. இந்தப் போட்டியில் மகிழ்ச்சி மட்டும்தான்.

இப்போது ரவியின் அன்பு அவள் உரிமை;



அதிசயபுரியின் வரலாறு

எஸ்.வி.எஸ்

"ஹல்லோ! உங்களைத்தானே...?"

"என்னை?"

"அதிசயபுரி தெரியுமா? அதிசயபுரி?"

"என்ன, ஹஸ்தினாபுரியா?"

"ஹஸ்தினாபுரி இல்லேங்காணும். அதிசயபுரி. அது உங்களுக்கு எங்கேங்காணும் தெரிஞ்சிருக்கப் போகிறது..?"

"ஏன்?"

'ஏனா. அந்த அதிசயபுரியைப் பற்றி எந்தப் புராண, இதிகாச, சரித்திரப் புஸ்தகத்திலேயும் போடலேங்காணும்!"

"ஓகோ !"

"ஆனால் அந்த அதிசயபுரியிலே ஒரு பெரிய படையெடுப்பு நடந்தது....!"

"எப்போ....?"

"எப்பவா? புராணம், இதிகாசம், வேதம் எல்லாம் தோன்றிய காலத்துக்கு முன்பு....." என்று சொல்லி ஒரு ரஸமான கதையைக் குப்பா சாஸ்திரிகள், அப்பா சாஸ்திரிகளுக்குச் சொன்னார்.

ஃ ஃ ஃ

அதிசயபுரியில் ஆதித்தமார்த்தாண்டன் என்றோர் அரசன் ஆண்டு வந்தான். அவன் ஆட்சியின்போது அந்த நாட்டின் மீது திடீர் என்று பக்கத்துத் தேசத்து அரசன் அமரதீபன் படையெடுத்து விட்டான்.

உடனே ஆதித்த மார்த்தாண்டனுக்குக் கோபம் வந்து விட்டது. "அயல்நாட்டான் என் மீது படை எடுக்கவாவது! அவனை என்ன செய்கிறேன், பார்!" என்று உறுமினான். உடனே தன் குடிமக்களுக்கு ஓர் உத்தரவு பிறப்பித்தான். 'எல்லாரும் படையில் சேர வேண்டும்! எல்லாரும் ராணுவப் பயிற்சி பெற வேண்டும்' என்று கட்டளை பிறப்பித்தான்!

ராணுவ வீரர்களைத் தேர்ந்தெடுக்கும் முகாம்களுக்கு மக்கள் சாரி சாரியாக நடக்கத் தலைப்பட்டார்கள். படை திரட்டும் வேலை மும்முரமாக நடைபெற்றது.

அதிசயபுரி அரசன் ஆதித்த மார்த்தாண்டன் புதிதாகத் திரண்டுள்ள படையைப் பார்வையிட ஒரு நாள் வந்தான். புதிய வீரர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தார்கள்!

அவர்களைப் பார்த்ததுமே மன்னனுக்குத் 'திக்'கென்றது! ஏனெனில், அங்கு நின்றிருந்தவர்கள் அத்தனை பேரும் நாற்பது வயதுக்கு மேல் எழுபது வயதை எட்டக் கூடியவர்களாக இருந்தார்கள். பலருக்குக் கூன் முதுகு, சிலருக்குப் பொக்கை வாய், இன்னும் நரை, திரை இப்படியாக இருந்தார்கள். பதினெட்டு வயது முதல் இருபத்தைந்து வயதுக்குட்பட்டு வீரமும், இளமை மிடுக்கும் கொண்ட வாலிபர்களையே காணோம். "இந்தக் கிழவர்களை வைத்துக் கொண்டு நான் எப்படிப் படையெடுத்து வந்துள்ள அண்டை நாட்டானை ஜெயிப்பேன்...? நம் நாட்டில் வாலிபர்களே இல்லையா ?" என்று அங்கலாய்த்தான் அரசன் ஆதித்த மார்த்தாண்டன்.

"மகாராஜா! சொல்வது முற்றிலும் உண்மை. நம் நாட்டில் வாலிபர்களே இல்லைதான்!"

"ஏன்?" என்று கேட்டார் மன்னர்.

"நாற்பது வருஷங்களுக்கு முன்..." என்று தொடங்கி அப்போது நாட்டில் ஏற்பட்ட நிலவரத்தையும் அதற்கு மன்னன் இட்ட உத்தரவையும் சேனாபதி ஞாபகப்படுத்தினார்.

ஃ ஃ ஃ

அதிசயபுரியில் நாற்பதாண்டுகளுக்கு முன் ஓர் அதிசயமான பஞ்சம் வந்தது.

மாதம் மும்மாரி பெய்தது! விவசாய மக்கள் நன்கு உழைத்துப் பாடுபட்டார்கள். பூமியும் நன்றாக விளைந்தது – இருப்பினும் நாட்டில் பஞ்ச நிலைமை தாண்டவமாடியது!

அரசன் தன் மந்திரிகளையெல்லாம் வரவழைத்து விசாரித்தான். ஒருவராலும் இந்தப் பஞ்ச நிலைக்குச் சரியான காரணம் சொல்ல முடியவில்லை. கடைசியில் ஒரு மதியூகி மந்திரி எழுந்து நின்றான்.

"அரசே! நமது பஞ்சத்துக்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்" என்று இழுத்தான்.

''என்னவென்று கூறும்!'' என்று மன்னன் பணித்தான்.

''நம் நாட்டின் விளைச்சலைவிட ஜனத்தொகை பெருகிப் போனதே காரணம் என்று தோன்றுகிறது!'' என்ருன் மதியூகி மந்திரி.

இது வரை யாருக்கும் தோன்ருத காரணத்தைக் கூறி விட்ட மதியூகி மந்திரியை அரசன் ரொம்பவும் பாராட்டினுன். அடுத்தாற்போல், ''இதற்குப் பரிகாரம் ஏதாகிலும் இருக்கிறதா?'' என்று கேட்டான், மன்னன்.

''மகாராஜா! இதற்குப் பரிகாரம் ஜனத் தொகையைச் சுருக்க வேண்டியதுதான்!''

''என்ன? ஜனங்களைத் தூக்கி ஆற்றிலோ குளத்திலோ எறிந்து ஜனத் தொகையைக் குறைத்துவிட முடியுமா?'' என்று கேட்டான் அரசன்.

''அப்படிச் செய்யச் சொல்லவில்லை, மகாராஜா! அதற்கு மிகச் சுலபமான வழியிருக்கிறது!'' என்ருர் மதியூகி.

அரசனுக்கு அதிசயம் தாங்கவில்லை. ''என்ன! சுலபமான வழி இருக்கிறதா...?''

''ஆம், மகாராஜா! கல்யாணமாகி மூன்று குழந்தைகள் பெற்ற ஆடவர்களுக்கெல்லாம் ஒரு சிறு சஸ்திர சிகிச்சை செய்து விட்டால், அவர்கள் குழந்தைகள் பெறமாட்டார்கள். அதே போல் இனி முப்பது வயதுக்கு மேற்பட்ட கன்னிகைகள்தான் கல்யாணத்தைப் பற்றியே நினைக்கலாம் — என்று இரண்டு உத்தரவுகள் பிறப்பித்து விட்டீர்களானுல் மக்களுடைய தொகை குறைந்து உணவுப் பஞ்சம் பஞ்சாய்ப் பறந்து விடும்!'' என்றுயோசனை கூறினுர். இந்த அபாரமான யோசனைகளைக் கேட்டு மகிழ்ந்து அதிசயத்தில் மூழ்கிவிட்டார் ஆதித்த மார்த்தாண்டர்.



மந்திரி மதியூகிக்கு ஏராளமான பரிசில்கள் வழங்கினுர். மந்திரி மதியூகி சொன்ன யோசனைகளை நிறைவேற்றும் படியும் உத்தரவிட்டார்.

❀ ❀ ❀

''இது நடந்து நாற்பது வருஷங்களாகி விட்டன. அன்று அந்த மதியூகி சொன்ன யோசனைகளைக் கடைப்பிடித்ததன் விளைவுதான், மகாராஜா இன்று நாட்டில் வாலிபர்களே இல்லாமல் போய் விட்டார்கள்!'' என்று முடித்தார் சேனுபதி.

சேனுபதி கூறி வந்ததைக் கேட்டு அரசர் அப்படியே துயரத்தில் ஆழ்ந்து விட்டார். 'இனி நடந்து போனதைப் பற்றி வருத்தப்பட்டுப் பயனில்லை. பழைய உத்தரவுகளை ரத்து செய்து விட்டேன் என்று விளம்பரப்படுத்துங்கள். இனி பதினெட்டு வயதிலேயே பெண்கள் கலியாணம் செய்து கொள்ளலாம் என்று அறிவியுங்கள்!'' என்ருர் மன்னர்.

''ஆனுல் நாட்டில் பதினெட்டு வயதுக் கன்னிப் பெண்களே கிடையாதே, மகாராஜா!'' என்ருர் சேனுபதி.

''அப்படியா....?''

''நமது ஜனன மரணப் பதிவு அலுவலகத்தில், ஜனனத்தைக் குறிக்கும் பேரேடு புழுதி மண்டிக் கிடக்கிறது. அதை எடுத்துக் கையாண்டு ரொம்ப ஆண்டுகள் ஆகிவிட்டன. மரணப் பேரேடுதான் அவ்வப்போது உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது!'' என்ருர் சேனுபதி.

''அப்படியானுல் நம் மீது படையெடுத்து வரும் அண்டை நாட்டு அரசனை.....''

''மாலை போட்டு, ஆரத்தி எடுத்து வரவேற்போம் மகாராஜா. கௌரவமாக இருக்கும்!'' என்ருர் சேனுபதி தமது வயிற்றெரிச்சலை அடக்கிக் கொள்ள மாட்டாமல்.

''அந்தக் கௌரவத்தின் தலையில் இடிவிழ!'' என்ருர் மகாராஜா.

அவர் சொல்லி வாயை மூடுமுன் எங்கிருந்தோ ஓர் இடி பாய்ந்து மன்னர் சேனுபதி, படை வீரக் கிழவர்கள் அத்தனை பேரையும் விழுங்கியது. அண்டை நாட்டு அரசன் மேளவாத்தியங்களுடன் அதிசயபுரியில் பிரவேசித்தான்.

❀ ❀ ❀

''ஓய், குப்பா சாஸ்திரி, இந்தக் கதையை எங்கிருந்து பிடித்தீர்?''

''என்னை என்னமோன்னு நினைச்சுட்டீர்போல் இருக்கிறதே! ஜாக்கிரதை. அப்படி சொல்லாம் என்னுதேயும்! ஞானதிருஷ்டியில் பார்த்தேன்காணும்'' என்ருர் குப்பா சாஸ்திரி.



அழகியின் அதிசயத் துயில்

ஓர் அதிசயித்திரமான நோயாளி அமெரிக்காவில் டெக்ஸாஸில் ஹௌஸ்டனில் உள்ள ஆஸ்பத்திரியில் மூன்றரை வருடங்களாகச் 'சிகிச்சை' பெற்று வருகிறார். அதிரூப சௌந்தரியவதியான ஒரு பெண்மணியே அந்த அதிசயித்திர நோயாளி. அதிசயித்திர நோய் என்னவெனில் தூக்கம்.

ஆம்! மூன்றரை ஆண்டுகளாக எப்பாடு பட்டும் எழுப்ப முடியாமல் ஆழ்ந்து தூங்கி வருகிறாள் அவ்வழகி.

1961ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒரு நாள் காலையில் எழுந்தவுடன் ஸ்ரீமதி மே தன் கணவர் ஹௌர்பார்ட்டிடம் 'தலை வலிக்கிறது, என்னவோ மயக்கமாயிருக்கு' என்றாள். அப்போது அது சாதாரண விஷயமாகவே தோன்றியது. ஆனால் மயக்கம் போன்ற நிலை மறைவதாகவே காணோம். ஆறுமாதங்கள் பல ஆஸ்பத்திரிகள் ஏறி இறங்கினாள் மே. மூளையில் கட்டியாக இருக்குமோ என்றார்கள் சில டாக்டர்கள். 'என்ஸிபாலிடிஸ்' என்று பெத்த பெயர் சூட்டினர் ஒருவர். வியாதி மட்டும் சிகிச்சைக்குக் கட்டுப்படவில்லை.

இந்நிலையில் ஒரு நாள் அவள் ஸ்மரணை இழந்து விட்டாள். உயிர் போகுமுன் சில நாட்களுக்கு நினைவிழந்திருக்கும் 'கோமா' நிலைதான் அது என்று கருதப்பட்டது. ஆனால் மூன்றரை ஆண்டுகளுக்குப் பின் இன்றும் அவளது இருதயம் அடித்துக் கொண்டிருக்கிறது. நுரையீரல்கள் சுவாசிக்கின்றன. அவளை விழிப்புறச் செய்வதற்காக நாற்பதினாயிரம் டாலர்கள் வைத்தியச் செலவு செய்தனர். பலன் இல்லை.


'அவளது மூளையில் மூன்றில் இரு பங்கு செயலிழந்து விட்டது. உயிரைக் காக்க அவசியமான பகுதிகள் மட்டுமே இயங்குகின்றன' என்கின்றனர் வைத்திய நிபுணர்கள்.

இப்படியே அவள் எவ்வளவு காலம் தூங்குவாள் என்று யாருக்கும் சொல்லத் தெரியவில்லை. ஆனால் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து செயல்படும் சாத்தியக்கூறு மட்டும் இல்லை என்றே தெரிகிறது. தூக்கத்திலிருந்து அவள் மரண நிலைக்குத்தான் செல்ல வேண்டும் எனச் சொல்கிறார்கள். அவளது மூளையில் தற்போது வேலை செய்யும் சிறு பகுதி எப்போது செயலிழக்குமோ அப்போதே அவள் கதை முடிந்துவிடும்.

அது நாளைக்கே நிகழ்ந்தாலும் நிகழலாம்; அல்லது பல்லாண்டுகளானாலும் ஆகலாம்.

(ஆதாரம்: "ஸண்டே ஸ்டாண்டர்ட்")

பனிக்கட்டி கொதிக்கிறது!



மனிதனுக்குள்ளிருந்து பனி காப்பு அளிக்கிறது என்றால் ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? ஆனால் இது உண்மை.

தான் சில்லென்றிருந்தாலும் வெளிக் குளிரைப் பனி உள்ளே விடுவதில்லை. ஆர்டிக் பிரதேசத்தில் வீசும் கடும் குளிர் காற்றையும் எஸ்கிமோவின் வீட்டுக்குள் விடாமல் அவனுக்கு 'வெப்பம்' தருவது பனிக்கட்டிகளால் கட்டப்பட்ட அவனது வீடுதான். அந்த வீட்டின் பனிச் சுவரின் அகலமும் அப்படி ஒன்றும் அதிகமில்லை; ஆறே அங்குலம்தான்!

ஆர்டிக் பகுதியில் ஒரு ஸைன்ஸ் நிபுணர் தமது பாரன்ஹிட் தெர்மாமீடர் பனிக்கட்டிக்கு மேலே பூஜ்யத்துக்கும் 27 டிகிரி குறைவாகக் காட்டுவதைக் கண்டார். பிறகு அந்தத் தெர்மாமீடரைப் பனிக்கட்டிக்குள்ளேயே ஏழு அங்குலங்கள் செலுத்தி டெம்பரேச்சர் பார்த்தார். விந்தை! இப்போது பூஜ்யத்துக்கு மேலே 24 டிகிரி காட்டியது அந்த வெப்பமானி. அதாவது ஏழு அங்குலப் பனிக்கட்டி 51 டிகிரி அதிக உஷ்ணத்துக்குக் காரணமாயிருந்துள்ளது.

(ஆதாரம்: "ஸண்டே ஸ்டாண்டர்ட்")

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

சேவிங்ஸ் பாங்க் கணக்கை ஆரம்பியுங்கள்



நேஷனல் அண்டு கிரிண்டலேஸ்

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்கில் சேவிங்ஸ் கணக்கு ஆரம்பிப்பது எளிது. ஐந்தே ரூபாய் இருந்தால் போதும். அதோடு வருஷத்திற்கு 3 சதவீதம் வட்டியும் சம்பாதிக்கலாம்.

முழு விவரங்களுக்கும் இன்றே அருகிலுள்ள கிளையில் சென்று விசாரிக்கவும். உங்களுடைய பாங்க் பிரச்சினை எப்படிப்பட்டதாக இருந்தாலும், திறமையும், கண்ணியமும் அங்கு உங்களுக்குக் காத்திருக்கிறது.

இந்திய பாங்கித் தொழிலில் 100 ஆண்டுகள்

NG81/598 TAM

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க் லிமிடெட்

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது: அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது

கிளைகள்: சென்னை: 3, நார்த் பீச் ரோடு, 378, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு. (லாயிட்ஸ் கிளை) 6, அரமனைக்காரத் தெரு 158, மவுண்ட ரோடு. தூத்துக்குடி: 44, பீச் ரோடு ஹைதராபாத்: அபித் ரோட்

ERED No. M. 4392
red as a Newspaper in Ceylon

